Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් டிச. 29, 2005 ஜன. 04, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 644

## சுனாமி அகதிகளுக்கு ஒரு வயது - தொடர்கிறது பேரவலம்!

தலைவர் தொண்டமானுக்கு

## தொண்டனின் கடிதம்

2006 கலண்டர் உள்ளே!

## பதற்றத்தை தணிக்காத சர்வதேச எச்சரிக்கை!




## மகளிர் கவிதைகள் சிறப்புத் தேன்கிண்ணம்

## காலம் பொன்னானது

காலங் காலமாக ஓங்கி வளர்ந்து ஓம் என்னும் நாதத்தினுள் ரீங்காரமிடும் எமது சமயமானது காலங்களைக் கடந்தது. காலத்தை வீணாக்குவது தெய்வ நிந்தனைக்குச் சமம். காலத்தை மதித்துக் கிடைத்த நேரத்தை பரோபகார சேவையிலும் ஆன்மீக சாதனையிலும் செலவிடவேண்டும். இதை உணராமல் உலகில் பலர் தங்களது பொன்னான நேரத்தின் முக்கால் பகுதியை வீணாக்கிவிடுகின்றார்கள். தியானமும் ஜெபமும் உயர்ந்த தவங்களாகும்.

மனித மனம் குரங்கைப் போல பல்வேறு விடயங்களில் தாவி காலத்தை வீனாக்கிவிடுகின்றது. நாம் செய்யும் வேலைகள் இறைவனுக்காக எனக் கருதினால் காலம் வீணாகாது. காலம் மிகவும் அரிதானது. கடிகாரத்தில் முள் நகரும் பொழுது கழியும் ஒவ்வொரு வினாடியும் நம் வாழ்க்கையின் ஒரு பகுதி கழிந்துவிட்டது என்று அறிவிக்கின்றது. காலம் ஓடுவதைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் காலம் வீணாவதைத் தடுத்து நிறுத்த முடியும். காலத்தினால் செய்த உதவி சிறிதெனிலும் ஞாலத்தில் மாணப் பெரிது.

-பொலிகை மறவன், திருகோணமலை.

# ஆன்மீகம்



## புத்தாண்டில் புது வாழ்வு

இவ்வாரத்துடன் இந்த ஆண்டு விடைபெற்றுச் செல்கின்றது. இந்த வருடம் முழுவதும் ஆண்டவர் தமது பிள்ளைகளாகிய நம்மீது கொண்ட அளவற்ற அன்பினாலும் இரக்கத்தினாலும் நம்மை நன்மையை நோக்கி வழிநடத்திச் சென்றிருக்கின்றார். நமக்கு ஏற்படவிருந்த துன்பதுயரங்கள், விபத்துக்களில் இருந்து நம்மைக் காத்திருக்கலாம். எனவே ஆண்டவருக்கு நன்றியும் ஸ்தோத்திரமும் செலுத்துவது நமது கடமை.

கர்த்தர் தமது கிருபையால் நமது நாட்களை நீடிக்கச் செய்து இன்னுமோர் வருடத்தை நமக்கு அளிக்கின்றார். ஆண்டவரிடத்தில் முடிவுறும் ஆண்டிற்காக நன்றி செலுத்துவோம். மலரும் புத்தாண்டில் நல்லதே நடக்க அவரிடத்தில் மன்றாடுவோம். நாம் கேட்பதை நமக்குத் தர ஆண்டவர் கிறிஸ்து சித்தமாயிருக்கிறார்.

"நீங்கள் என் நாமத்தினால் எதைக் கேட்பீர்களோ குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக அதைச் செய்வேன்" என்று வாக்குத்தத்தம் அளித்திருக்கும் தேவன், நீங்கள் கேட்பதைக் கட்டாயம் தருவார். புத்தாண்டு உங்கள் வாழ்வில் மகிழ்ச்சியைத் தந்து மலரட்டும். "வருஷத்தை உம்முடைய நன்மையினால் முடிசூடுகின்றீர்."

-ஆமென்.

-ஜோர்ஜ் அமலன், நானு ஓயா.

## இறையச்சம் தேவை

அடிமையாக விற்கப்பட்ட இறைத் தூதர் யூசுப் (அலை) அவர்களுக்கு அரச மாளிகையில் அமைச்சரின் மனைவியை அனுபவிக்க வாய்ப்புக் கிட்டியது. அவள் அவர் மீது விருப்பம் கொண்டு, கதவுகளைத் தாழிட்டு, தன் விருப்பத்துக்கு இணங்குமாறு அழைத்தாள். அதற்கு அவர்கள் "உன் கணவர் என் எஜமானர். என்னை அழகாக வைத்திருக்கிறார். நிச்சயமாக துரோகம், அநியாயம் செய்பவர்கள் வெற்றி பெறவே மாட்டார்கள்" எனக் கூறி அதற்கு மறுத்து, "இறைவா இத்தீய செயலிலிருந்து என்னைக் காத்தருள்வாயாக" எனப் பிரார்த்தித்தார்கள்.

அமைச்சரின் மனைவியை அனுபவிக்க வாய்ப்புக் கிட்டிய போதும்கூட இறையச்சம் அவர்களைத் தடுத்தது. அவளுக்கு சற்றேனும் அசைந்து கொடுத்திருந்தால் அந்த உல்லாச மாளிகையில் சுதந்திரமாக அனுபவித்திருக்கலாம். ஆனால் அவர்கள் இறைவனுக்கு பயந்தார்கள். அதனால் தன்னைத் தற்காத்துக் கொண்டார்கள்.

நீங்கள் இறைவனுக்கு அஞ்சுவீர்களானால் அவன் உங்களுக்கு நன்மை, தீமைகளைப் பிரித்தறிந்து நடக்க நேர்வழியைக் காட்டுவான். உங்கள் பாவங்களைப் போக்கி உங்களை மன்னிப்பான். இறைவன் மகத்தான அருட்கொடை உடையவன். எனவே இறையச்சத்தோடு வாழ்வோமாக.

-கட்டாரிலிருந்து குருகொடை நவாப்.

## கவிதைப் போட்டி இல.641



### பரிசுக்குரிய கவிதை

### பசி

ஆற்றில் மீன் பிடித்து
அப்பா வந்தால்தான்
துவண்ட மகன் வயிறு
சோற்றில் நிமிரும்!

-வி.ராகுலன்,
ஆரையம்பதி - 01.

### அர்த்தமில்லா காத்திருப்பு

ஓடு மீன் ஓட உறு மீன்
வருமளவும்
காத்திருக்குமாம்
கொக்கு.
நம் காத்திருப்பு
சமாதானத்துக்காக
ஆன போதும்
வரப்போவதென்னவோ
மீண்டும் யுத்தம் தான்
போலும்.
எப்போதுமே நம்
காத்திருப்புக்கு
அர்த்தம் இருப்பதில்லை.

-வ.சந்திரபிரசாத், மாமாங்கம்.

### ஏங்கும் மனது

கடலே நீ கொந்தளித்து
காவு கொண்டாய் என் உறவை.
சுனாமி எனும் பெயரில் நீ
சுவைத்த உயிர் எத்தனையோ?
ஆண்டொன்று அடியெடுத்து
அடுத்தாண்டில் குதித்தாலும்
அடித்த அடி வலி மாற
யாரால் தான் முடியுமிங்கு?
எடுத்த என் உறவுதனை
எண்ணியுந்தன் கரையோரம்
ஏங்கித் தவம் கிடக்கும்
என் மனதை யாரறிவார்?

-எம்.அருள்மலர், கிளிநொச்சி.

### விதியோ?

கொஞ்சும் தந்தையை
கொடிய யுத்தம்
கொன்றது! அன்பை
அள்ளித் தந்த -
அன்னையை
ஆழி பேரலை அடித்துச்
சென்றது! எல்லாவற்றை
இழந்து - நான்
நட்ட நடுக் கடலில்
இன்று!
இது என் விதியோ....?

-ஆ.ஞானகுரு, பதுளை.

### கிடைக்குமா?

எத்தனை
ஆயிரம்
அனர்த்த
நிவாரணங்கள்
வழங்கலாம்!...
அப்பாவையும்
அம்மாவையும்
அவர்கள்
தருவார்களா?...

ஏ.ஆர்.பயாஸ்,
சிறாஜ் நகர்.





### தயாராய் நில்

குந்தியிருந்து சிந்திக்காதே!
உடைமைகளை ஒரு பையில் போட்டு
ஓடுவதற்குத் தயாராய் நில்.
யுத்தம் எப்போதும் வெடிக்கலாம்.
சுனாமி எப்போதும் சீறலாம்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.644



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 04.01.2006.

கவிதைப் போட்டி இல.644
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அராஜகம்

அரசியல் வெறியாட்டமும்
ஆயுதக் கலாசாரமும்
அழித்தொழித்தது போக
எஞ்சிய உயிர்களை....
இயற்கையும் கூட
ஈவிரக்கமில்லாமல்
கொன்று குவிக்கிறதே?

-எம்.எஸ்.அகமட் இப்றாஹிம்,
ஏறாவூர் - 03எ.

### ஏக்கம்

உன் ஏக்கம் ஆற்றின்
ஆழத்தைப் பார்த்து;
எம் ஏக்கம் நாட்டின்
கோலத்தைப் பார்த்து.

-ஏ.எல்.ஃபர்சாத், ஏறாவூர்.

### சிந்தனை

"ஆற்றைக் கடந்து கரை
சேர்ந்துவிட்டேன்!
வாழ்க்கைக் கரையை
அடைவது எப்படி" என்ற
சிந்தனையோ?

-மொஹமட் ஜவாத், புத்தளம்.

### ஆற்றாமை

ஆற்றைக் கடக்க
வழிகளுண்டு - இனவாதச்
சேற்றைக் கடக்க
வழியில்லையே.

-அ.சந்தியாகோ, கண்டி.

### உறவுகள் திரும்புமா?

அடித்துச் சென்ற
சுனாமி
மீண்டும் எமது
உறவுகளை
திருப்பித் தராதா?
என்ற
ஏக்கம்.

-ஜெயசுதன்,
யாழ்ப்பாணம்.

# உங்கள் பக்கம்

## சீரழியும் மாணவர் கல்வி - விலை போகும் கல்விச் சமூகம்

மாணவர் போராட்டம் என்ற தொனிப் பொருளில் கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணத்தில் நடந்துவரும் 'படையினரை சீண்டும்' நடவடிக்கைகளினால் குடா நாட்டு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவினால் ஏற்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறைமை இன்று இலங்கைத் தீவெங்கும் குறிப்பாக, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் உட்பட நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இலவச பாடப் புத்தகங்கள், இலவச சீருடைத்துணி, இலவசப் பாடபோதனை என்பவற்றுகுமப்பால் இலவச மாகவே அரச பரீட்சைகளுக்கு தோற்றும் வசதியும் முழு இலங்கை மாணவர்களுக்கும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கிடைக்கும் இலவசக் கல்வியினைக் கூட ஒழுங் கான முறையில் மாணவர்களுக்கு கிடைக் காமல் செய்வதற்கு யாழ்ப்பாண மாணவர்களை சில சமூக புல்லுருவிகள் தூண்டிவிட்டுள்ளமை வருத்தத்திற்குரிய விடயமாகும்.

'சுதந்திரமான கல்வியைப் பெறுதல்' என்னும் மாயையின் கீழ் மாணவரை, இயல்பு வாழ்க் கையை ஸ்தம்பிக்கச் செய்கின்ற போராட்டங்களில் ஈடுபடுத்துவதன் மூலம் இருக்கின்ற, கிடைக்கின்ற கல்வியையும் இழக்கச் செய்வதில் மேற்படி சமூகப் புல்லுருவிகள் ஆர்வமாய் இருப்பது தொடர்பில் தமிழ்ச் சமூகம் இன்னும் சிந்தையில் கொள்ளாமல் 'பொங்கியெழாமல்' இருப்பது ஒட்டு மொத்த யாழ்ப்பாணச் சமூகமும் புல்லுருவிகளிடம் விலை போய் விட்டதோ என்ற கேள்வியை எழுப்பி நிற்கிறது.

இடப்பெயர்வுகள், பேரலைத் தாக்கம் என்பவற்றின் பின்னும் கூட யாழ்.மாணவர்கள் தேசிய ரீதியில் சாதனை பெற்று வருகின்றமை அவர்களின் சளைக்காத தன்மைக்கு சிறந்த சான்று. இந்நிலையில் இத்தகைய போராட்டங்களின் முன்னெடுப்பானது பாரிய பின்விளை வுகளையே ஏற்படுத்தும்.

யாழ். கல்விச் சமூகத்தின் இரு பெரும் அதிபர்களை பலியாக்கிய கூட்டத்தின் 'பினாமி' அமைப்பின் வால் பிடித்து மாணவர்கள் தமது கல்விச் செல்வத்தை இழப்பதென்பது, தாம் வெட்டிய குழியில் தாம் விழுவதை ஒத்ததே தவிர வேறொன்றுமில்லை.

ஆர்.பிரான்சிஸ் (தமிழ்ஜி),
யாழ்ப்பாணம்.

# வாசகர் சாலை

## தொடரட்டும் உன் பயணம்

முரசே இரண்டு வாரம் உன்னைக் காணாது
துயரமடைந்து விட்டேன். பின்னர்
உன்னைக்
கண்டதன் பின்புதான் என் உயிர் மீளக்
கிடைத்த மாதிரி ஓர் உணர்வு. நீ வருகை
தராததற்கான காரணத்தை ஆசிரியர்
'முரசம்'
மூலம் தெளிவுபடுத்திய பின்புதான் என்மனம்
அமைதியானது. மீண்டும் நீ பல எதிர்நீச்சல்
அடித்து எம் முன் உன் பயணம் தொடர
வாழ்த்தி விடை பெறுகிறேன். (உன்னில்
அடங்கிய ஆக்கங்கள் Very Super )

-எஸ்.ஐ.பர்வீன் பானு,
நாதிலா, அல்மி, ஏறாவூர் - 04.

## உன் பணி தொடர்க!

அரசாங்கத்தின்
தணிக்கையினால் செய்தி
அமுக்கப்பட்டது அந்தக்
காலம். ஏக தலைமை எனக்
கூறிக்கொள்வோரால் செய்தி
திரிக்கப்படுவது இந்தக் காலம்.
இரு தடைகளையும் தாண்டி
வந்த வெற்றி முரசே!
உனக்கு என் இதயபூர்வமான
வாழ்த்துக்கள். தொடரட்டும்
உன் பணி. சுமந்து வரட்டும்
உண்மைகளை.

-ஏ.ஆனந்த், சுண்டிக்குளி.

## நிமிர்ந்து நில்! துணிந்து செல்!!

அருமையான ஆக்கங்களுக்கு
அகரமிட்ட தித்திக்கும் தினமுரசே!
உந்தன் சேவை
எட்டுத் திக்கும் தட்டும் முரசாய்
முழங்க வேண்டும்.
உண்மைகளை ஒளித்து விட்டு
கண்டதையும் கண்டபடி கூறி
கலாட்டா பண்ணும் பத்திரிகை உலகில்
உண்மையினைக் கூறி
உள்ளத்தைக் கவர்கின்றாய்.
உண்மையில் உன்னில்
இதைத்தான் நானும் விரும்புகின்றேன்
வாசகர்கள் நேசக்கரம் நீட்டுகின்றோம்
நிமிர்ந்து நில்! துணிந்து செல்!!

-பிரியன், வந்தாறுமூலை.

முரசே!
தூரத்தே நின்று
உனை ரசித்திட்டநான்
உன்னுள் கலந்திட
விரும்புகிறேன்.
என் கைகளில்
தவழ்ந்திட
வாரங்கள் தோறும்
ஏங்குகின்றேன்
உன் வருகைக்காக....
மறுப்பாயோ? இல்லை
மகிழ்விப்பாயோ?

-ப்ரியமுடன் வாசகி,
மட்டக்களப்பு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# ஜோசப் எம்.பி. கொலை பற்றிய திடுக்கிடும் தகவல்கள்!

நத்தார் பண்டிகை ஆராதனையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று அவரைத் தேடி அவரது இல்லத்துக்குச் சென்ற இருவரைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் இரகசியப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற விசேட பொலிஸ் குழுக்களின் விசாரணைகளில் பல முக்கிய தகவல்களும் தடயங்களும் சிக்கியிருப்பதாக இரகசியப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். மோட்டார் சைக்கிளில் சம்பவ தினம் காலை குறிப்பிட்ட இருவரும் எம்.பி.யின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்திக்க முயன்றதாகவும் அப்போது ஜோசப் எம்.பி. யின் வீட்டில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த சிவிலுடைப் பொலிஸார் அவர்களை விசாரித்துவிட்டு இது பற்றி எம்.பி.க்கு அறிவித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். தான் வீட்டிலில்லை என்று கூறுமாறு ஜோசப் எம்.பி. தெரிவித்தாரென்றும் பொலிஸார் கூறுகின்றனர். இந்த இருவரில் ஒருவரைத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட சென்.மேரிஸ் தேவாலய வளவுக்குள் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. யின் பாதுகாப்பு அதிகாரிகள் கண்டனரென்றும் கூறப்படுகிறது. சம்பந்தப்பட்ட சந்தேகத்திற்குரிய இரு நபர்களும் பிஸ்டல் குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமென்றும் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்



கின்றனர். புலிகள் இயக்கத்தின் கருணா பிரிவு அல்லது பிரபா பிரிவைச் சேர்ந்தவர்களாக இவர்கள் இருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. எம்.பி.யின். கொலைக்கு உரிமை கோரி 'சென்னன் படை' என்ற பெயரில் தமிழில் துண்டுப் பிரசுரமொன்று லண்டனில் செயற்பட்டு வரும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. துணைப்படையே கொலை செய்ததாக தமிழ் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டுகிறது. சென்னன் படை என்ற துணைப்படை இருப்பதாக தகவலே இல்லை. இருந்தபோதிலும் அப்படியொரு படை இயங்குவதாக ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் இல்லை. பிரபா பிரிவுப் புலிகளால் தேடித்தேடி வேட்டையாடப்பட்டு வரும் கருணா பிரிவினர் மட்டக்களப்பு நகரத்தில் அமைந்துள்ள தேவாலய வளவுக்குள் வந்து செல்வார்களா என்பதில் சந்தேகம் இருப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர். பிரபா அணிப் புலிகளே ஜோசப் எம்.பி.யைச் சுட்டுக் கொன்றனரென்று கருணா தரப்பினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். பிரபா தரப்பினரின் உத்தரவையும் மீறி, ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்குமாறு ஜோசப் எம்.பி. மக்களைக் கேட்டுக்கொண்டதே கொலைக்குக் காரணமென்றும் கருணா தரப்பினர் கூறுகின்றனர். இதேவேளை டோக்கியோ உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று பிரபா அணிப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுத்த பின்னரும் படுகொலைகள் தீவிரமடைந்திருக்கின்றன.

இந்நிலையில் சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திருப்புவதற்காக பிரபா அணியினரே இதைச் செய்திருக்கலாமென்று கருணா அணியினர் தெரிவிக்கும் குற்றச்சாட்டுப் பற்றியும் பொலிஸாரின் கவனம் திசை திரும்பியுள்ளது.

## சமாதானத்தில் நம்பிக்கையற்றவர்களே ஜோசப் எம்.பி.யைக் கொன்றனர்

**-அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.**

மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையானது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இப்படுகொலை யாரால் நிகழ்த்தப்பட்டிருந்தாலும் அது கண்டனத்திற்குரியதே.

படுகொலைகள் மூலம் யாரும் எந்தப் பிரச்சினைக்கும் உரிய தீர்வை எட்டிவிட முடியாது. கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளும் ஜனநாயக மரபு பேணப்பட வேண்டும். அதன் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே ஈ.பி.டி.பி. தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலிலுள்ள காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி.ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை நிகழ்ந்திருப்பது துரதிர்ஷ்டவசமானது. வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் படுகொலைகளின் ஓர் அங்கமாகவே இது இடம் பெற்றுள்ளது. சமாதானத்தின் மீது நம்பிக்கையற்ற, யுத்த முனைப்புகளில் ஈடுபட்டுவருபவர்களாலேயே இத்தகைய படுகொலைகள் இடம் பெற்று வருகின்றன. இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள கண்டனச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :

இவ்வாறான படுகொலைகளைக் கண்டிப்பதற்கும், அவற்றை நிறுத்துவதற்கும் பொதுமக்களும் ஜனநாயக சக்திகளும் சர்வதேச சமூகமும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

படுகொலை செய்யப்பட்ட ஜோசப் பரராஜசிங்கத்தின் இழப்பினால் வேதனை அடைந்துள்ள குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் சார்பில் ஆழ்ந்த துயரங்களைப் பகிர்ந்து கொள்கிறோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு, கிழக்கின் ஆபத்தான சூழ்நிலையைக் கையாள புதுடில்லியில் இருதரப்புக் கலந்துரையாடல்

இந்தியாவுக்கு நான்கு நாட்கள் விஜயமொன்றினை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியத் தலைவர்களுடனும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடனும் இலங்கையின் வடக்கு, கிழக்கில் எழுந்துள்ள புதிய சூழ்நிலைகள் குறித்து விசேட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். இருதரப்பு உறவுகள், வர்த்தக விவகாரங்கள், முதலீடு பற்றிய விடயங்களுக்கு அப்பால் இலங்கை இனப் பிரச்சினையையும் அங்கு எழுந்திருக்கும் யுத்தச் சூழ்நிலையினையையும் கையாள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டிருக்கிறது. வடக்கு, கிழக்கில் சமச்சீரற்ற மேலதிக அதிகாரங்களுடன் கூடிய ஜனநாயக அரச முறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஒரு மாநில அரசாட்சி முறையொன்றை ஏற்படுத்து வதன் மூலமே அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த முடியும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இலங்கை - இந்திய கடற்பரப்பில் சட்டவிரோத ஆயுதக் கடத்தல் உட்பட இரு நாட்டுப் பாதுகாப்புக்கும் பாதிப்பாக அமையக் கூடிய சட்டவிரோத நடவடிக் கைகளைத் தடுத்து நிறுத்துவது பற்றியும் ஆராயப்பட்டது. வடக்கு, கிழக்கில் புதிய சூழ்நிலை ஆபத்தாக உருவெடுக்கும் பட்சத்தில், இலங்கையும் இந்தியாவும் கைக்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது. தமிழகத்திலுள்ள பிரிவினைவாத சக்திகளுக்கும் இலங்கையிலுள்ள புலிகளுக்குமிடையில் இருந்து வரும் ஆபத்தான தொடர்புகளைத் தடுப்பது குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

### ஜனாதிபதிக்கு நன்றி

புங்குடுதீவு, மாவடிப் பள்ளியென்ற இடத்தில் இளம் பெண்ணொருத்தி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கவென்று குழுவொன்றினை உடனடியாக நியமித்தமைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நன்றி தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் பற்றிய தகவல் வெளி வந்ததுமே உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியை அமைச்சர் கோரியிருந்தா ரென்பது குறிப்பிடத்தக்கது.

## மலையக, மேலக கட்சிகளின் கூட்டணி முயற்சி பிசுபிசுப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்ற மலையக அரசியல் கட்சிகளுக்கும் கொழும்பைத் தளமாகக் கொண்டிருக்கும் மேல் மாகாண மக்கள் முன்னணிக்குமிடையில் கூட்டணி அமைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்க மாட்டாதென்று மேலக மக்கள் முன்னணி முக்கியஸ்தரொருவர் தெரிவித்தார். மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனின் முன்முயற்சியின் பேரில் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் வன்னிக்குச் சென்று தமிழ்ச்செல்வனுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். "புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையிலிருந்து இ.தொ.கா. ஓரங்கட்டப்பட்டதையடுத்தே என்றுமில்லாதவாறு புலிகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தொண்டமான் ஈடுபட்டார். பாராளுமன்றத்தில் இணைந்து செயற்பட வேண்டுமென்றே இ.தொ.கா. வலியுறுத்துகின்ற போதிலும் இரு மலையகக் கட்சிகளுக்குமிடையேயுள்ள உள்முரண்பாடுகளும் போட்டா போட்டிகளும் இந்த முயற்சிகளுக்குக் குந்தகமாக விளங்குகின்றன" என்று அப் பேச்சாளர் மேலும் கூறினார். மலையக மக்கள் முன்னணியோடு இணங்கிச் செயற்படும் யோசனையைப் பல வருடங்களுக்கு முன்னரேயே மேல் மாகாண மக்கள் முன்னணி முன்வைத்திருந்ததாகவும், ஆனால் மலையக மக்கள் முன்னணி அதில் அக்கறை காட்டவில்லையென்றும் இப்போதும் அப்படியே செயற்பட்டு வருகிறதென்றும் அவர் சொன்னார். மேல் மாகாண மக்கள் முன்னணியின் வெற்றி வாய்ப்பை முறியடிப்பதற்காக கடந்த பொதுத் தேர்தலின்போது செல்வாக்கில்லாத ஒருவரை மலையக மக்கள் முன்னணி வேட்பாளராக நிறுத்தியதென்றும் மூன்று தமிழ் வேட்பாளர்களுக்கு மேலதிகமாக இந்த நான்காவது வேட்பாளர் நிறுத்தப்பட்டாரென்றும் அப் பேச்சாளர் சொன்னார்.

## "படையினர் மீதான தாக்குதல்களால் பாதிக்கப்படப் போவது அப்பாவித் தமிழர்களே"

"கிழக்கில் அண்மைக்கால வன்செயல்களின் உச்சக் கட்டமாக எம்.பி.யொருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இப் படுகொலைக்குத் துணைப்படையே பொறுப்பென்று அவர் சார்ந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியிருக்கும் அதேவேளை, வடக்கில் ஐம்பதுக்கு மேற்பட்ட படையினரும் பொலிஸாரும் புலிகளால் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இப் படுகொலைகளின் எதிர்விளைவுகள் யாவும் அப்பாவி மக்களின் இயல்பு வாழ்வையும், வாழ்வுரிமை, மனித உரிமைகளையுமே பாதிக்கும்" என்று வண. பிதா எம்.இமானுவேல் அடிகளார் தெரிவித்தார். "எனக்கு ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.யோடு நெருங்கிய தொடர்புகள் இருந்திருக்கின்றன. அமைதியான மனிதர். எல்லோருடனும் அன்பாகவும் சகஜமாகவும் பழகியவர். அவர் தான் சார்ந்த இயக்க நிலைப்பாட்டுக்கேற்ப சொற்களில் தான் தீவிரவாதியாகத் திகழ்ந்தாரேயொழிய, செயலில் மிதவாதியாகவே வாழ்ந்து வந்தார்.

மனிதப் படுகொலைகளை ஆதரிப்பதைத் தவிர வேறெந்தக் கொள்கைகளையும் கொண்டிருக்கலாம். அது அவர்களின் ஜனநாயக உரிமை. அதற்காக அவர்களின் வாழ்வுரிமையைப் பறிப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். இதே போன்றுதான் வடக்கில் படையினர் மீது தாக்குதல்கள் அதிகரித்திருக்கின்றன. படையினரின் படுகொலை படுமோசமான நிலைமை யொன்றினை உருவாக்கப் போகிறது. படையினர் மீதான தாக்குதல்கள் அப்பாவிப் பொதுமக்களையே பாதிக்கப் போகின்றன. மக்களுக்குள் மறைந்து நின்றுகொண்டு படையினர் மீது புலிகள் தாக்குதல்கள் நடத்துவதால் புலிகள் யார்? அப்பாவி மக்கள் யார்? என்பதைப் படையினரால் இனங்கண்டு கொள்ள முடியாது. படையினரின் துப்பாக்கிகளிலிருந்து பீறிட்டு வரும் வேட்டுக்கள் புலிகளையும் தாக்கும். மக்களையும் தாக்கும். எனவே அப்பாவித் தமிழ் மக்கள் நலன்கருதி புலிகள் தாக்குதல்களை நிறுத்த வேண்டும்" என்றும் அவர் சொன்னார்.

## வெள்ளவத்தை தமிழ் டாக்டருக்குத் தொல்லை

வெள்ளவத்தையில் வசிக்கும் பிரபல தமிழ் டாக்டரொருவரை மிரட்டும் பாணியில் வர்த்தகப் புள்ளியான வட பகுதியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரொருவரின் நெருங்கிய இரத்த உரித்துகளான இருவர் நடந்து கொள்கின்றன ரென்று குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. முன்னாள் அமைச்சரின் சகோதரரும் மைத்துனரும் நிர்மாணித்த மாடிக்குடியிருப்பின் மேல்மாடியில் டாக்டர் வசித்து வருகிறார். உரிய முறையில் வீடுகள் நிர்மாணிக்கப்படாததால் டாக்டர் வசிக்கும் மாடிக் குடியிருப்பின் பல்கனி திடீரென உடைந்து வீழ்ந்திருக்கிறது. இதனைத் திருத்திக் கொடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்த சம்பந்தப்பட்ட இருவரும், உடைந்த பகுதியை டாக்டரே தன் செலவில் நிர்மாணித்ததைச் சாட்டாக வைத்து? அவரால்தான் கீழ் மாடிகளும் பாதிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டுகின்றனராம். விவகாரம் பொலிஸ் வரை சென்றிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே தொடர்மாடி விற்பனையில் தில்லுமுல்லுகள் நடந்திருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. மண்ணெண்ணெய் என்றாலும் சரி, மாடி வீடு விற்பனை என்றாலும் சரி, தமிழர்களிடம் பணம் கறப்பதுதான் இவர்களின் மக்கள் பணியென குடியிருப் பாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மக்கள் பணி, மகேஸ்வரன் பணி என்பது இதைத் தானோ என்றும் அவர்கள் கேள்வி கேட்கின்றனர்.

## எரிக் சொல்ஹெய்முக்கும் அதிருப்தி

புலிகளின் தற்போதைய நிலையில் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமலிருப்பதாக நோர்வேயின் விசேடத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கூறுகிறார். என்று லண்டன் வாசியும் புலிகளால் வன்னிக்கு அழைக்கப்பட்டு, புதுக் குடியிருப்பில் சிறை வைக்கப் பட்டிருந்தவருமான இராஜ சிங்கம் ஜெயதேவன் கூறியுள்ளார். கடந்த ஜூலை மாதம் லண்டனில் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசியபோது இந்தக் கருத்தை அவர் வெளியிட்டாரென்று கூறியுள்ளார் ஜெயதேவன். 'த ஐலண்ட்' பத்திரிகைக்காக துசிரணதுங்க என்பவர் லண்டனில் ஜெயதேவனைப் பேட்டி கண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். எரிக் சொல்ஹெய்மின் கருத்தையே சர்வதேச சமூகமும் கொண்டிருக்கிறது. புலிகளின் பயமுறுத்தல் காரணமாக இலங்கையிலுள்ள தமிழர்கள் தமது கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவிப்பதில்லை. ஆனால் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களால் தாராளமாகத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க முடிகிறது. எனவே புலம் பெயர் வாழ் தமிழர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கத் தவறினால் பாரதூரமான பிரச்சினைகளைத் தமிழ் மக்கள் எதிர்கொள்ள நேரிடுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு மேலதிக பாதுகாப்பு

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையையடுத்து ஏனைய சகல கூட்டமைப்பு எம்.பி.க் களுக்கும் பாதுகாப்பை அரசாங்கம் பலப்படுத்தியுள்ளது. மேலும் பல அதிரடிப்படை வீரர்கள் கூட்டமைப்பு எம்.பி.க்களின் பாதுகாப்பில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். கிழக்கு மாகாண எம்.பி.க் களான ஆர்.சம்பந்தன், தங்கேஸ்வரி கதிராமன், அரியநேந்திரன் உட்படப் பல எம்.பி.க்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குமாறு பாதுகாப்புப் பிரிவினரைக் கோரியுள்ளதையடுத்து விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அநாவசியமான போக்குவரத்துகளில் ஈடுபடவேண்டா மென்றும் பாதுகாப்புத் தரப்பினர் இந்த எம்.பி.க்களுக்கு அறிவுரை கூறியுள்ளனர்.

## கண்ணி வெடி அகற்றுபவர்களின் வாகனம் அதிரடிக் கடத்தல்

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் கண்ணி வெடியகற்றும் 'ஹலோ ட்ரஸ்ற்' என்ற தன்னார்வத் தொண்டர் நிறுவனத்தின் அலுவலகத்திலிருந்து இரு வாகனங்கள் கடந்த 27ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டுள்ளன. ஏற்கனவே இரு தடவைகள் இந்த நிறுவன அலுவலகம் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## குமுறிக் கொண்டிருக்கும் யுத்தமெனும் எரிமலை

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

பிறக்கின்ற புத்தாண்டில் புதிய வெற்றிகளும் புதிய வரவுகளும் அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்பதே எமது பேரவாவாகும் பிரார்த்தனையாகவுள்ளது.

புதிய இலக்குகளை நோக்கி சிறகுகளை விரிக்கின்ற எதிர்பார்ப்பு எல்லோருக்கும் புதிய ஆண்டில் இருப்பதுண்டு. துரதிர்ஷ்டவசமாக இலங்கை நாட்டில், பிறக்கப்போகும் புதுவருடத்தை அழிவுகளோடு எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

“யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே” என்பது போல் யுத்தம் வரும் பின்னே, சிறிய சிறிய தாக்குதல் நடக்கும் முன்னே என்றவாறு வடக்கு, கிழக்கின் எல்லா இடங்களிலும் தாக்குதல்களும், கொலைகளும் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்குப் பிறகும் சமாதான முயற்சிகள் தொடரப்படுமென்று எவரும் நம்புவதற்கில்லை.

போர்நிறுத்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்ட நிலையில் புலிகளும் இராணுவமும் முன்னரங்க நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர். இதற்கிடையே ஒப்பந்தத்திற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றளவில் ‘பொங்கி எழும் மக்கள் படை’ எனும் பெயரில் படையினர் மீது மோசமான தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. துணைப் படைகள், ஒட்டுப் படைகள் என்று கூறும் புலிகள், பொங்கி எழும் மக்களின் படை என்ற பெயரில் படையினருக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் எதிராக நடத்தப்படுகின்ற தாக்குதல்கள் குறித்து மூச்சு விடாமல் இருக்கின்றனர். இது ஒன்றே போதும், புலிகள் தான் பினாமிப் பெயர்களில் இந்தத் தாக்குதல்களை நடத்துகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு. இல்லாவிடில் இவ்வாறான படைகளைப் புலிகளின் ஒட்டுப் படைகளாக, புலிகள் அங்கீகரித்துள்ளனர் என்று கூறலாம். அப்பாவி மக்களுக்கு மூன்று நாள் பயிற்சி வழங்கி, தாக்குதலுக்கு ஈடுபடுத்தும் புலிகள், அத்தாக்குதலால் ஏற்படும் விளைவுகளுக்கு அந்த மக்களே நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பின்னர் மக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்துகின்றனர் என உணர்ச்சிவசப்படுவது போலித்தனமானது என யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களின் உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

மறுபக்கத்தில் தொடரும் படுகொலைகளால் மக்களின் மனநிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கொலைகள் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களும் வியப்பளிக்கின்றன. மனிதப் படுகொலைகளை அங்கீகரிக்கும் விதமாக மக்கள் பழக்கப்பட்டுப் போயுள்ளனர்.

கொல்லப்பட்டவரின் தகுதி தராதரம் பார்த்து கண்டிக்கின்ற அநாகரீகமான ஒரு சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. இதுவரையான நான்கு வருடக் காலப் பகுதிக்குள் ஐந்நூறுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட போதும் அடையாளம் காணப்பட்ட கொலைகளாக கௌசல்யனின் கொலை, கதிர்காமரின் கொலை, இப்போது ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை என்று அதிக கண்டனங்களைப் பெற்ற கொலைகள் மாத்திரமே படுகொலைகளாகக் கணிக்கப்படுகின்றன.

அமைதி, சமாதானம் என்பவற்றைக் கடந்து ஜனநாயகத்துக்கு எதிரான கொலைகள், ஊடக சுதந்திரத்துக்கு எதிரான கொலைகள், மாற்றுக் கருத்துக்கு எதிரான கொலைகள், விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்ட கொலைகள் என்று பாதாளத்துக்குள் பிரவேசித்து விட்டதாகக் கருத முடிகிறது. எரிமலையைப் போல் குமுறிக் கொண்டிருக்கும் நாடு, எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறலாம். ஆகவே 2006ஆம் ஆண்டு மிக மோசமான தடங்களைப் பதித்து விட்டே செல்லப் போகிறது.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பதற்றத்தைத் தணிக்காத சர்வதேச எச்சரிக்கை

நரன்

**கொழும்பில்** அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் கருதப்பட்ட இடத்தில் அமைந்திருந்த தனது வீட்டில் வைத்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டமை இலங்கையை மட்டுமல்ல, இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஈடுபாடு கொண்டிருந்த சகல நாடுகளையும் அமைப்புகளையும் அதிர வைத்தது. இப் படுகொலையைத் தாங்கள் புரியவில்லையென்று வழமை போல் புலிகள் மறுதலித்தாலும் உலக நாடுகளின் காதுகளில் பூக்களைச் சுற்ற அவர்களால் முடியவில்லை. புலிகள் சொல்லிலும் செயலிலும் சமாதானச் செயற்பாடுகளை விசுவாசமாக தெரிவிக்க வேண்டுமென்று கூறிய ஐரோப்பிய யூனியன், அந்த இயக்கத்தின் மீது பயணத் தடையை விதித்தது.

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளிலும் பயணத் தடை அமுலுக்கு வந்தது. எனினும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று வீறாப்புப் பேசும் புலிகளின் மரணச் செயற்பாடுகளுக்கு எவராலுமே தடை விதிக்க முடியவில்லை. நவம்பர் 17இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை வடக்கிலும் கிழக்கிலும் குழப்பியடித்தார்கள். வாக்களிக்காதவாறு மக்களை மிரட்டினார்கள். இராணுவ சோதனைச் சாவடிகள், படையினரின் ரோந்து அணிகள், காவல் நிலைகள் மீதெல்லாம் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. புலிகளின் ரயர் கொளுத்தும் பிரிவுகளும் ஆங்காங்கே வீதிக்கு வந்து தீமூட்டின. இதற்கு முன்னரேயே “சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு” என்ற பாணியில் பொங்கு தமிழ் நிகழ்வுகளும் பொங்கத் தொடங்கின. வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் படையினருக்கும் மாணவர்களுக்குமிடையே முறுகல் நிலையைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்ட அதேவேளை, கிழக்கில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையே மோதலை உருவாக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் படையினர் மீதான தாக்குதல்கள் சிறுகச் சிறுக ஆரம்பிக்கப்பட்டு மன்னாரில் விசுவரூபம் எடுத்தது. மன்னார் பள்ளிமுனைக் கடற்பரப்பில் மூன்று கடற்படைச் சிப்பாய்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். மன்னார் பேசாலையில் இரு கடற்படை வாகனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருபதுக்கு மேற்பட்டோர் பலியானார்கள். யுத்தங்களில் பயன்படுத்தக் கூடாதென சர்வதேச அளவில் தடை செய்யப்பட்டிருக்கும் இரசாயன ஆயுதங்கள் இத் தாக்குதலில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற தென்று படைத்தரப்பு குற்றஞ்சாட்டியிருக்கிறது. பெரும் பாலான கடற்படைச் சிப்பாய்கள் உடல் கருகி மாண்டதை இதற்குக் காரணமாகக் காட்டுகின்றனர் படைத் தரப்பினர்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நான்கு வருடங்கள் கழியப் போகின்றன. யுத்த நிறுத்தத்தால் மரண ஓலங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வடக்கும் கிழக்கும் மயானக் காடாகும் நிலையில் துப்பாக்கிகள் பேயாட்டம் போடுகின்றன.

பாவிகளுக்காக சிலுவை சுமந்த தேவகுமாரனின் உலக வருகையை நினைவு கூரும் தேவ ஆராதனையில் கலந்து கொண்ட ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. மிலேச்சத்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். கொலைகாரப் பாவிகளின் பாவச் சிலுவையைச் சுமந்து கொண்டவர் என்பதால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டாரா? அல்லது உள் வீட்டுத் தகராறா? அல்லது மரணத்தின் பின்னர் மாமனிதர் பட்டத்தை அவரின் தோள்களில் ஏற்றியவர்கள் கூறுவதுதான் சரியா? வடக்கிலும் கிழக்கிலும் ஒருவர் இடறி விழ நேர்ந்தால் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் மீது விழக் கூடியளவுக்கு துப்பாக்கிக் கலாசாரம் தாராளமயப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த உச்சக் கட்டக் கொலைகளின் மிச்ச சொச்சங்கள் நிகழ்ந்த காலகட்டம் மிகமிக முக்கியமானது. ஐரோப்பிய பயணத் தடை மட்டும் போதாது. புலிகள் மீது முற்று முழுதான தடை விதிக்க வேண்டுமென்று இந்தியா கோரியிருந்தது. கோரிக்கைகளும் தீர்மானங்களும் எச்சரிக்கைகளும் ‘புலிப்பாய்ச்சல்’களை நிறுத்திவிடப் போவதில்லை என்பதற்கு அண்மைய கொலைகள் அசல் உதாரணங்கள். புலிகள் வன்செயல்களைக் கைவிடத் தவறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று டோக்கியோ உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் எச்சரிக்கை விடுத்து இரண்டொரு தினங்களுக்குள்ளேயே மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் படையினர் மீதான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது சர்வதேச எச்சரிக்கைகள் எம்மை ஒன்றும் செய்து விடப் போவதில்லை என்று பதில் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள் புலிகள்.

இன்னுமொரு வார்த்தையில் கேட்பதானால் சர்வதேச எச்சரிக்கைகள் பதற்றத்தைத் தூண்டியிருக்கின்றனவா? வெறும் எச்சரிக்கைகளால் பதற்றம் தணிந்து விடப் போவதில்லையென்பதையே வடக்கிலும் கிழக்கிலும் எழுந்திருக்கும் புதிய சூழ்நிலை எடுத்துக் காட்டுகிறது. யுத்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இரண்டுமோ அல்லது இரண்டில் ஒன்றோ மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் மதித்து விசுவாசமாக பேச்சு வார்த்தை மேசைக்கு வரத் தவறினால், மக்களின் போர்வையில் மரணப் பிடிவாத யுத்த நிலைப்பாட்டினை எடுத்தால் சமாதானம் என்பது எட்டாக் கனியாகி விடும். இலக்கு மட்டும் முக்கியமல்ல. இலக்கை அடைவதற்கான பாதைகளும் முக்கியமானவை. சமாதானப் பாதையில் தடைகள் போடப்பட்டால் அத் தடைகளை அகற்ற வேண்டும் அல்லது தாண்ட வேண்டும்.

நான்கு வருடங்களை யுத்த நிறுத்தம் எட்டப் போகின்ற நிலையிலும் சமாதானமோ அரசியல் தீர்வோ குத்துக் கல்லாகவே ஓரிடத்தில் இருக்கிறது. இந்த நிலையில் இலங்கையிலுள்ள ஜனநாயக, சமாதான சக்திகளுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் பாரிய பொறுப்பு இருக்கிறது. சமாதானப் பாதைக்கு வர அரசு தயங்கினாலென்ன, புலிகள் தயங்கினாலென்ன அவர்களை வழிக்குக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு இவர்களுக்கு இருக்கிறது.

கடந்த நான்கு வருடங்களில் என்றுமில்லாதவாறு வடக்கு, கிழக்கில் வன்செயல்கள் அதிகரித்திருப்பதால் ஏற்படக்கூடி ஆபத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த வன்செயல்களின் வித்துகள் யார்? இதனால் பாதிக்கப் படப் போகின்றவர்கள் யார்?

கடந்த பல வாரங்களாக யாழ்ப்பாணத்தில் மக்களுக்கும் படையினருக்குமிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் ஓரங்கமாகவே மக்களையும் மாணவர்களையும் வீதிகளுக்கு இறக்கி, அவர்களுக்கு மத்தியில் மறைந்திருந்து கொண்டு படையினர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இராணுவ சோதனைச் சாவடிகளை அகற்று, படைமுகாமை அகற்று என்பதெல்லாம் வீம்புக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள். சோதனைச் சாவடிகளும் இராணுவ முகாம்களும் அப்புறப்படுத்தப்பட வேண்டுமானால் முதலில் சமாதான சூழல் உருவாக்கப்பட வேண்டும். இராணுவம், முகாமுக்குள் முடங்கியிருக்க வேண்டுமானால், வெளியே தாக்குதல் நடத்துபவர்கள் அவற்றை நிறுத்திக் கொள்ள வேண்டும். பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் ஆர்ப்பாட்டத்தின் முன்வரிசைக்குச் செல்லுமாறு உத்தரவிட்டுவிட்டு பின் வரிசைக்குள்ளிருந்து கொண்டு படையினர் மீது கற்களை வீசுவது எதற்காக? படையினர் திருப்பித் தாக்க மாட்டார்களென்றா புலிகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? புலிகளின் உத்தரவுகளுக்கு கீழ் படிந்து முன்னே சென்ற பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டதுதான் மிச்சம். டயர்களை எரிப்பதன் மூலமும் மக்களுக்குப் பின்னால் மறைந்து நின்று கொண்டு படையினர் மீது கற்களை வீசுவதன் மூலமும் ஏதோ ஒன்றைச் சாதிக்க புலிகள் முனைகிறார்கள் என்பது உண்மைதான். இதே போன்றுதான் மன்னாரில் கடற்படை சிப்பாய்கள் மீதும் யாழ்ப்பாணத்தில் சிப்பாய்கள் மற்றும் பொலிஸார் மீதும் புலிகள் நடத்திய தாக்குதல்களுக்கு உள் நோக்கமிருந்திருக்கிறது. அதாவது யாழ்ப்பாணத்தில் படையினரை முகாமுக்குள் முடக்க வேண்டும். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தம்மிஷ்டப்படி தாக்குதல்கள் நடத்த வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும். பிரச்சினைகள் எழும் இடங்களில் படையினர் பதில் தாக்குதல்கள் நடத்துவார்கள். அதில் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பதெல்லாம் புலிகளுக்குத் தெரியாத சூத்திரமல்ல. படையினரைப் பொறுத்தவரையில் தமது தாக்குதல்களுக்கும் வேட்டுகளுக்கும் இலக்காகுபவர்கள் புலிகள் மட்டுமல்ல மக்களாக இருந்தாலும் அவர்களைப் புலிகளே என்று வாய்ப்பாட்டுப் பாணியில் படையினர் வர்ணிப்பது வழக்கம். இதற்காகத்தான் மக்களுக்குள் மறைந்து நின்று கொண்டு படையினர் மீதும் பொலிஸார் மீதும் தாக்குதல்கள் நடத்திவிட்டுப் புலிகள் தப்பி ஓடிவிடுகிறார்கள். இதனால்தான் தெரிந்தோ தெரியாமலோ படையினர் பல சந்தர்ப்பங்களில் மக்கள் மீது பழியைத் தீர்த்துக் கொள்கிறார்கள். அண்மைய யாழ். சம்பவங்களை நாம் எடுத்துப் பார்த்தால் புலிகள்தான் தாக்குதல்களை முதன் முதல் ஆரம்பித்தனர். இத் தாக்குதல்கள் தொடர்கதையானபோதுதான் படையினரின் பதில் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. எனவே உண்மையிலேயே புலிகள் அப்பாவி தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென விரும்பினால் மக்களுக்குள் மறைந்து நின்று கொண்டு படையினரைத் தாக்கும் ஈனச் செயல்களைக் கைவிட்டுவிட வேண்டும். ■

## யாழ்., மன்னார் மக்களே! இது உங்கள் கவனத்துக்கு

**யா**ழ்ப்பாணத்தில் படையினர் முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டுமென்று கூறியும் மன்னாரில் கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் பயணஞ் செய்ய அனுமதி வேண்டுமென்று கோரியும் புலிகள் படையினர் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளனர். கடந்த சில வாரங்களாக இத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. படையினர் மீது தாக்குதல்கள் நடத்துவதன் மூலம் அவர்களை முகாம்களுக்குள் முடக்கலாமென்று நினைப்பது முட்டாள்தனமானது. அதேபோன்று தாக்குதல்களை அதிகரிப்பதன் மூலம் பயணப் பாதைகளையும் புலிகளால் பெற்றுவிட முடியாது. மன்னாரில் சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டின் பேரில் வெள்ளக்காரரொருவரைக் கைது செய்ய புலிகளின் பகுதிக்குச் சென்ற மூன்று பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அரச கட்டுப்பாட்டுப் பகுதியான யாழ்ப்பாணத்துக்குள் அரசியல் வேலைகளுக்கென வந்த புலி இயக்க உறுப்பினர்கள் படையினரை முகாம்களுக்குள் முடங்கு என்று கேட்பது எந்தளவுக்கு நியாயமானதென்பதைத் தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜனநாயக நாடென்றாலென்ன, மன்னராட்சியென்றாலென்ன சர்வாதிகார ஆட்சியென்றாலென்ன துப்பாக்கிகள்தான் - அதாவது அரசு இயந்திரத்தின் படைகள்தான் அரசாங்கத்தைக் கவிழ விடாமல் பாதுகாக்கின்றன. இதுவே உலகெல்லாம் இருக்கும் யதார்த்தம். யாழ்ப்பாணத்திலோ, மன்னாரிலோ தாக்குதல்களை முதலில் ஆரம்பித்தவர்கள் படையினரல்லர் புலிகளே தாக்கினார்கள். ரணில் விக்கிரமசிங்கா செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஓட்டை, ஒடிசல்கள் இருந்தாலும் யாழ். மக்கள் தமது அன்றாட அலுவல்களைக் கவனிக்கக் கூடியளவுக்கு அமைதியான சூழ்நிலை நிலவியது. படையினர் தம் பாட்டில் போய் வந்து கொண்டிருந்தார்கள். மக்களோடு அவர்கள் சேட்டை, சோலிகளுக்குப் போகவில்லை. படையினர், பொலிஸார் மீது தாக்குதல்களை நடத்திவிட்டு, ‘இனந் தெரியாதவர்கள்’ என்று தமிழ் ஊடகங்களால் வர்ணிக்கப்படுவோர் ஓடி மறைந்தார்கள். நீர்வேலியிலும் இருபாலையிலும் படையினர் மீது கிளைமோர் தாக்குதல்களை நடத்தி பதினைந்துக்கு மேற்பட்ட படையினரைக் கொன்றார்கள். எனவே படையினர் மீது முதலில் ‘குரங்குச் சேட்டை’களை ஆரம்பித்தவர்கள் புலிகள். படையினர் பதில் தாக்குதல் நடத்துவார்களென்பதை நன்கு தெரிந்து கொண்டே தாக்குதல்களைப் புலிகள் நடத்தியிருக்கிறார்கள். அதாவது அப்பாவி மக்கள் பாதிக்கப்பட வேண்டுமென்ற காரணத்துக்காகவே மக்களுக்குள் மறைந்து நின்றுகொண்டு தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையானதெல்லாம் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட வேண்டுமென்பதே.

## ஊரிலிருந்து....



டிசம்பர் 24ஆம் திகதி மாஸ்டர் வீட்டுக்குப் போனன். அவர் பேப்பர் வாசிச்சுக் கொண்டிருந்தார். “மாஸ்டர் எப்படிச் சுகம்? அரசியல் நிலைமை என்ன சொல்லுது?” எண்டு கேட்டன். “இண்டைக்கு M.G.R. இன்ட நினைவு தினம். அவர் பிறந்தது கண்டியில. பாலுமகேந்திரா பிறந்தது கூட இலங்கையிலதான். நடிகர் ஆகாஷ், நடிகை ராதிகா எண்டு எல்லாரும் இலங்கையோட தொடர்பு உள்ளவர்களாம்” எண்டார். என்னது மாஸ்டரிட்ட அரசியலைப் பற்றிக் கேட்டால் சினிமாவைப் பற்றி சொல்லுறார் எண்டு யோசிக்க அவரே தொடர்ந்தார். “ஒண்டு மட்டும் உண்மை, சு.ப.தமிழ்ச்செல்வனும் இளம்பரிதியும் கதாசிரியர்களாய் சினிமாவுக்குப் போயிருந்தால் பாலசந்தர், பாரதிராஜா, மணிரத்தினம் எல்லாம் துண்டக்காணம் துணியைக் காணம் எண்டு ஓடியிருப்பார்கள். அப்படிப்பட்ட கற்பனை வளம் அவர்களுக்கு இருக்குது” எண்டு கொடுப்புக்குள்ள சிரிச்சுக்கொண்டு சொன்னார் மாஸ்டர். ஊரில இருந்து மாஸ்டர் சொல்லிப் போட்டார் உங்களுக்கு ஏதாவது விளங்குதோ?

# கொழும்பில் குவிக்கப்படும் தாக்குதல் அணிகள்

அலசுவது

**- மதியூகி -**

**வடக்கு** - கிழக்கில் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை இன்னும் சமாதான காலத்தில் நடக்கும் வன்முறைகள் என்று கூறுவது அறியாமையாகும். யாழ்ப்பாணம் முழுமையான யுத்த இருளுக்குள் விழுந்துவிட்டது. அதற்கு அடுத்தபடியாக மன்னாரில் கடற்படையினர் மீதான தாக்குதல்கள் நடீத்தப்பட்டன. ஏற்கனவே வவுனியாவின் சுமுகச் சூழல் குழப்பியடிக்கப்பட்டு விட்டது. இப்போது மட்டக்களப்பில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், பிரார்த்தனையில்



ஈடுபட்டபோது சுட்டுக் கொல்லப்பட்டதும் அவரது பாரியார் உட்பட எட்டுப் பேர் காயமடைந்ததும் கவலைக்குரியதும் கண்டனத்துக்குரியதுமாகும். இச்சம்பவத்தின் எதிரொலியாக எதிர்வரும் நாட்களில் தாக்குதல்களை எதிர்பார்க்கலாம். இதுதவிர, திருகோணமலையில் படையினர் மீதான தாக்குதலுக்கு எல்லாவிதமான தயாரிப்புகளிலும் புலிகள் ஈடுபட்டு வருவதாக இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பரவலாகத் தாக்குதல்களும் கொலைகளும் நடைபெற்று வருவதானது சமாதான காலத்துக்கான வரைவிலக்கணத்தைக் கொண்டிருக்கவில்லை.

இதற்கிடையில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தாம், போர் தொடங்குவதற்கான பதினான்கு நாள் காலக்கெடுவை மதித்து நடப்பவர்கள் என்று கூறியிருக்கிறார். இக்கருத்தானது புலிகளின் உத்தியோகபூர்வத் தாக்குதலை நடத்துவதற்கான கால அவகாசமாக இருக்கலாமே தவிர, வேறு விதமாக நடத்தப்படுகின்ற தாக்குதல்களுக்குள் சேராது.

இவ்வாறு வடக்கு - கிழக்கு ஏற்கனவே யுத்தப் பீதிக்குள் விழுந்து விட்ட நிலையில் கொழும்பு இன்னொரு விதமான சூழலுக்குள் பிரவேசித்துக் கொண்டிருக்கிறது.

புலிகளின் உத்தியோகபூர்வமான தாக்குதல் இம்முறை கொழும்பிலிருந்தே பாரிய உயிர்ச் சேதங்களோடு தொடங்கப்படப்போகிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது. அவ்வப்போது கிடைக்கப் பெறுகின்ற இரகசியத் தகவல்களின்படி வன்னியிலிருந்து தற்கொலைக் குண்டுதாரிகள் அணி, பிஸ்டல் அணி, திட்டமிட்டுத் தாக்கும் அணி என்று பல அணிகள் நாளுக்கு நாள் கொழும்புக்குள் ஊடுருவிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றன. இவ்வாறு தாக்கும் நோக்கத்தோடு, ஊடுருவும் நபர்களைக் கைது செய்யும் நோக்கத்தோடு படைத்தரப்பு என்னதான் தேடுதல் மற்றும் சுற்றிவளைப்புகளை நடத்தினாலும் ஊடுருவலைத் தடுக்க முடிவதில்லை.

இதற்குப் பிரதான காரணங்களும் இருக்கின்றன. பணத்தை வாரி இறைத்து பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சட்ட விரோதிகளின் தொடர்பைப் பெற்றுக் கொள்வதும், சேரிப் புரங்கள், இல்லாதுபோனால் சிங்கள மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற இடத்தில் வாடகைக்கு வீடுகளை வாங்கிக் கொண்டு இருந்து வீடுவதுமாகும்.

தாக்குதல் நோக்கத்தோடு தலை நகருக்குள் நுழைந்துள்ளவர்களில், பணம் மற்றும் தலைமையுடன் நேரடி தொடர்பில் இருந்து கொண்டு வழி நடத்துபவர்கள் மட்டுமே கொழும்புக்குள் தங்கி இருக்கின்றனர். குறிப்பாக கொட்டாஞ்சேனை, மட்டக்குளிய, வெள்ளவத்தை - விகார லேன், தெஹிவளை, கிருளப்பனை, நாரஹேன்பிட்டிய, பம்பலப்பட்டிய,

> **புலிகளால் கொழும்பில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் தாக்குதலைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால் முற்றுமுழுதாகக் கடுமையான சோதனை நடத்தப்படுவதோடு, கடந்த நான்கு வருடங்களுக்குள் தலை நகருக்குள் வந்தவர்கள், அந்தக் காலப் பகுதிக்குள் அடையாள அட்டை பெற்றுக் கொண்டவர்கள், வன்னிக்கும் - கொழும்புக்கும் போக்குவரத்துச் செய்பவர்கள், கூலி ஆட்களாக வேலைக்குச் சேர்ந்திருப்பவர்கள் என எல்லோரையும் ஒரு கடும்புடி பிடித்தால் பிரயோசனம் இருக்கும் என்கிறார்.**

மொரட்டுவை போன்ற பகுதிகளிலேயே அதிகமானவர்கள் தங்கியிருக்கின்றனர். பலகை வீடுகள், தனி வீடுகள், நீண்ட நாட்களாகப் பூட்டிக் கிடந்த வீடுகள்,

ஒரு சில மாடி வீடுகள் எனத் தாக்குதல் அணியினர் தங்களுக்கான இருப்பிடங்களை அமைத்துக் கொண்டுள்ளனர்.

சுற்றிவளைப்போ, தேடுதல்களோ நடக்கப்போவது பற்றிய தகவல்களை முன் கூட்டியே அறிந்து கொள்ளுமளவுக்குக் கூடப் பணம் வேலை செய்கிறது. இது தவிர, கொழும்புக்கு வெளியில் தங்கியிருக்கும் தாக்குதல் அணிகள், வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்களைப் பதுக்கி வைத்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

ஒரு சில பாதுகாப்பு அதிகாரிகளின் கவலையீனமும் அசமந்தப்போக்குமே அவ்வப்போது ஆயுதங்களை இடம் மாற்றிக் கொள்வதற்கு தாக்குதல் அணியினருக்கு வாய்ப்பளிக்கிறது. இதுகுறித்து பொறுப்பு வாய்ந்த பாதுகாப்பு அதிகாரி ஒருவருடன் கேட்டபோது, உண்மையிலேயே புலிகளால் கொழும்பில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் தாக்குதலைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால் முற்றுமுழுதாகக் கடுமையான சோதனை நடத்தப்படுவதோடு, கடந்த நான்கு வருடங்களுக்குள் தலை நகருக்குள் வந்தவர்கள், அந்தக் காலப் பகுதிக்குள் அடையாள அட்டை பெற்றுக் கொண்டவர்கள், வன்னிக்கும் - கொழும்புக்கும் போக்குவரத்துச் செய்பவர்கள், கூலி ஆட்களாக வேலைக்குச் சேர்ந்திருப்பவர்கள் என எல்லோரையும் ஒரு கடும்புடி பிடித்தால் பிரயோசனம் இருக்கும் என்கிறார். அவர் சொல்வது எதிர்காலத்தில் நடைமுறைக்கு வரக்கூடிய வாய்ப்பு மிக அதிகமாக இருக்கின்றது. இந்த நடவடிக்கையின் போது தவிர்க்க முடியாத சில சம்பவங்களும் நடக்கத்தான் போகின்றன. இதில் புலிகள் முந்திக்கொள்ளப் போகிறார்களா அல்லது படைத்தரப்பு முந்திக்கொள்ளப் போகிறதா என்பது மிக விரைவில் தெரியப் போகிறது.

ஏன் கொழும்பில் மிக மோசமான தாக்குதலை நடத்த வேண்டும் என்று சிந்தித்தால் புலிகள் போடும் சில கணிப்பீடுகள் தெரியவரும். ஒன்று - அரசாங்கம் தொடர் குண்டு வெடிப்புகளால் ஆட்டம் காணும். வடக்கு - கிழக்கில் படையினரைக் குவிப்பதை விடவும், தலைநகரைப் பாதுகாக்கவே கூடுதல் கவனம் எடுக்கும். ஏனென்றால், தாக்குதல்கள் தளத்தில் நடக்கின்ற தாக்கத்தை விடவும் வீட்டுக்குள் நடக்கின்றபோது தாக்கம் கூடுதலாகவே இருக்கும். அவ்வாறு படையினர் கொழும்பை நோக்கித் திருப்பப்பட்டால் வடக்கு - கிழக்கில் படையினரின் பலம் குறையும். அவ்வாறு பலம் குறைகின்றபோது வேகமாகத் தாக்குதல்



நடத்தி கணிசமான வெற்றிகளைப் பெறுவதோடு இடங்களையும் தம்வசப்படுத்திக் கொள்ள முடியும். மற்றது இதே நேரத்தில் வெளிநாடுகளின் தூதரகங்கள் முழுதும் கொழும்பில் இருப்பதால் சர்வதேச நாடுகளுக்கு அழுத்தம் அதிகரிக்கும். அரசுக்கு ஆறுதலாகச் சிந்தித்து முடிவெடுக்க முடியாத நிலை ஏற்படும். சிங்கள மக்கள் கிளர்ந்தெழுவார்கள். அவர்களின் கோபாவேசம் ஒருவேளை தமிழ் மக்கள் மீது இனவெறியாகத் திரும்பலாம். அவ்வாறு இனத் தீ பற்றி எரிகின்றபோது தப்பித்துக் கொள்ள விரும்பும் தமிழ் மக்கள் தாமாகவே வடக்கு - கிழக்கை நோக்கி ஓடி வருவர். அவர்களைப் போராட்டத்துக்குள் இழுப்பது சுலபமான காரியமாக அமையலாம் என்று காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். கடைசியில் புலிகள் நடத்தும் இறுதிக்கட்டப் போராக அது கருதப்படும். ஒருவேளை வெளிநாடுகள் யாராவது இதைப் பயங்கரவாதத்தின் நடவடிக்கை என்று சொல்லி நேரடியாகக் களத்தில் குதித்து புலிகளை அடக்கினால் அதற்குப் பிறகு புலிகள் எந்தக் காலத்திலும் இயங்கமுடியாதபடி ஒரு சூழல் ஏற்படலாம். அந்த நிலையில் புலிகளால் சுடப்பட்டவர்களின் உறவினர்கள், புலிகளுக்கு விரோதமானவர்கள் ஓரணியாகத் திரண்டு புலிகளின் இருப்புக்கு இடமே இல்லாது செய்ய முற்படலாம். ஆகவேதான் புலிகள் கூட, எதிர்காலத்தில் நடைபெறப்போகும் போர் இறுதிப்போர். அது மிகவும் மூர்க்கத்தனமானதாகவே இருக்கும் என்று கூறுகின்றனர்.

மோசமடைந்து வரும் நாட்டின் சூழலுக்கு கொழும்பு இரையாகிவிடுமா அல்லது பாதுகாப்புத் தரப்பின் அவசர நடவடிக்கையால் பாதுகாக்கப்படுமா?

நாள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கிறது.

---

## அதிரடி அய்யாத்துரை



**ஒவ்வொருநாளும்** பாஸ்போர்ட் அலுவலகத்துக்கு முன்னால் கனபேர் நிக்கினம். அதில ஒரு பகிடி தெரியுமோ. குடா நாட்டில துணைப்படையெண்டும், பொங்கி எழுற படையெண்டும் சொல்லிக் கொண்டு மக்களின்ர நிம்மதியைக் கெடுத்துக்கொண்டு திரிஞ்சவையள் கொஞ்சப் பேர் பாஸ்போர்ட் எடுக்கிறதுக்கு முண்டியச்சுக் கொண்டு நிக்கினம். எட தம்பிமார் நீங்கதானே ஊரில கொடுக்குக் கட்டிக்கொண்டு திரிஞ்சவை. பிறகேன் நாட்டை விட்டு ஓடப்போறியள் எண்டு கேட்டதுக்கு, இங்க பாருங்கோ நாங்கள் எவ்வளவு பெரிய கட்டாயத்துக்குள்ள இருந்து கொண்டு உதுகளைச் செய்தனாங்கள் எண்டது எங்களுக்குத்தான் தெரியும். அதுவுமில்லாமல் இப்ப ஆமிக்காரன் மோப்பம் பிடிச்சு, பிடிக்க வெளிக்கிட்டிட்டுட்டான். நிலமை மோசமாகிடும் எண்டு சொல்லிச்சினம். பாத்தியளோ, செய்யிறதையெல்லாம் செய்துபோட்டு, நாட்டை விட்டு ஓடப் போகினம். உப்பிடி எத்தினபேர் ஓடிட்டினமோ யார் கண்டது. இயக்கப் பெடியளும் பாஸ்போட் எடுத்துக் கொண்டு திரியினம். ம்.... ஒண்டுக்கும் வழியில்லாத சனந்தான் கஷ்டப்படப் போகினம்....

**கூத்தமைப்பின்ர** எம்.பி. ஜோசப் படுகொலை செய்யப்பட்டது கவலைக்குரிய தோடை கண்டனத்துக்கும் உரியதுங்கோ. தலையிடியெண்டாலும் தனக்கு வந்தால் தான் தெரியும் எண்டுவினம். அப்பிடித்தானுங்கோ சம்மந்தமானவரின்ர கருத்தும் இருக்குது.

அப்பிடி என்ன விதமான கருத்தை அவர் சொன்னவர் எண்டு யோசிக்கா திங்கோ. அதையும் நானே சொல்லுறன். ஜோசப் எம்.பி. யின்ர கொலையைக் கண்டிக் கிறதுக்காக கருத்துச் சொல்லேக்க, வடக்கு - கிழக்கில வன்முறை உச்சக் கட்டத்தை அடைஞ்சிருக்குதெண்டு தீர்க்கதரிசனமாச் சொன்னாருங்கோ. உந்தக் கண்டுபிடிப்பை மனிசன் குடா நாட்டில குண்டு வெடிக்கிற காலத்திலேயே கண்டு பிடிச்சுச் சொல்லி, அதை வன்மையாக் கண்டிச்சிருந்தால் உப்பிடி உச்சக் கட்டம் ஒருவேளை அடையாமலும் இருந்திருக்கும். ஆனால் அவர் செய்யல்லையே. ரெண்டெழுத்தாருக்கு எதிரானவை கொல்லப் படேக்க கொடுப்புக்குள்ள சிரிச்சுக் கொண்டு இருந்தவர்.

**தமிழ்** நாட்டில இருக்கிறவை எல்லாரும் எங்கட தாய்பிள்ளையள் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கேக்க, வட கிழக்கில எரியிற நெருப்பெடுத்து தண்ட வீட்டு உலையேத்தி பொலிரிக்ஸ் செய்து கொண்டிருக்கிறாருங்கோ. மற்றவையின்ர வயித்தெரிச்சலைக் கொட்டிக் கொண்டு வயிறு வளர்க்கிறதாலதானோ என்னவோ வை கோ எண்டு தன்ர பேரை விலாசப் படுத்திக் கொண்டு திரியிறார். இலங்கை அரசுக்கு தங்கட அரசு ஒரு உதவியும் செய்யக் கூடாது எண்டு அடிக்கடி தான் கோரிக்கை விடுப்பதாக அடிக்கடி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். அவ்வளவு தமிழ் பற்று இருக் கிறவர், உங்க நிண்டு பொலிரிக்ஸ் பண்ணிக் கொண்டு இருக்காமல் வன்னிக் காட்டுக்க வந்து இருந்து கொண்டு பங்களிப்புச் செய்யலாமெல்லோ. அதைச் செய்யமாட்டினம். தமிழ் என்ன கருமஞ் செய்திச்சோ, தமிழை நேசிக்கிற தாக உணர்ச்சி வசப்பட்டு பொங்கி எழுறவை எல்லாம் வடக்குக் கிழக்குக்கு வெளியாலதான் இருக்கினம். அது போதாதெண்டு கொஞ்சப்பேர் இலங்கைக்கு வெளியால தான் இருக்கினம். நான் நினைக்கிறன், உயிரைப் பணயம் வச்சி களத்தில நிக்கிறவன் மடையன். தூரத்தில இருந்து உசுப்பேத்திறவன்தான் வீரன் எண்டாகிட்டுதாக்கும். வைகோவுக்குத்தான் உந்தத் தந்திரம் தெரியுமாக்கும். வயித் தெரிச்சலைக் கொட்டிக் கொள்ளுற வைகோ சென்ரலுக்கு ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறாரோ இல்லையோ" ஊடகத்துக்கு அடிக்கடி ஸ்டேட்மெண்ட் குடுத்துக் கொண்டிருக்கிறார்...

**அண்ணனுக்கு** வாஸ்து சரியில்லை. அதாலதான் போன அதிகாரத்துக்கான எலக்‌ஷனில போட்ட திட்டமெல்லாம் பிழச்சுப்போச்சுது. வன்னிக்குப் போனால் எல்லாம் சரியாயிடும் எண்டு ஐயாவின்ர பேரனை வன்னிக்குக் கூட்டிக்கொண்டு போன முன்னணியின்ர தலைவர் சந்திரமான சேகரனார், ஏழுமுகத்தார் அண்டை நாட்டு தூது அம்மணியோடை சிரிச்சுப் பேசின துக்கு சந்தேகப்படுறாருங்கோ. தமிழ் பேசிற கட்சியெல்லாம் இனி ஒரே குடைக்குள்ள நிண்டு பொலிரிக்ஸ் பண்ணுவம் எண்டவர், அதிகாரத்தில இருக்கிறவரோடையும், தூது அம்மணியோடையும் நட்புக் கொண்டாடுறார். ஆளை நம்ப ஏலாது. உவர் உப்பிடியே அந்தர் பல்டி அடிச்சுப் போயிட்டாலும் ஆச்சரியப்படுறதுக்கு ஒண்டுமில்லையெண்டு சந்திரமான சேகரன் கண்டபடி சேறு பூசுறாருங்கோ. எதிரியா இருந்தவர் நட்புக் கொண்டாடேக்கேயே ஏழுமுகத்தாருக்குத் தெரிஞ்சிருக்க வேணும், உந்த மண்வெட்டித் தலையர் மார்பில குத்தாமல் முதுகில குத்திறவர் எண்டு. ஜஸ்ட் மிஸ் என்ன செய்யிறது.

**இவ்வளவு** நாளும் ரெண்டெழுத்தார்தான் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு எண்டும் அதின்ர விளிம்பில தான் தாங்கள் இருக்கினம் எண்டும் சொல்லிக் கொண்டிருந்திச்சினம். இப்ப நிலைமை தலைகீழா மாறிட்டுது. சும்மாவே *கடும்போக்குக்காரர் எண்டு கருதப்படுகிற பிரதமர்* தங்கட பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு எண்டு சொல்லியிருக்கார்.

ரெண்டெழுத்தார் சும்மா ஒரு இதுக்குச் சொன்னதுக்கும், உண்மையில பல தாக்குதல் நடந்தாப் பிறகு பிரதமர் சொன்னதுக்கும் வித்தியாசம் இருக்குங்கோ. விளிம்பில இருக் கிறம், விளிம்பில இருக்கிறம் எண்டு சொல்லி, அதில இருந்து வழுக்கி விழுந்திட்டினம் ரெண் டெழுத்தார். கடும்போக்குக்காரரும் உப்பிடிச் சொல்லிப் போட்டு வழுக்கினாரெண்டால் பிற கென்ன ரெத்த ஆறுதான் ஓடும். டங் சிலிப் பண்ணினால் பரவாயில்லை. ஸ்ரெந் சிலிப் பண்ணாமல் பார்த்துக் கொள்ளுங்கோ பிளீஸ்.....

**அதிகாரத்தில** இருக்கிறவரை எங்கட கூத்தமைப்பு எம்.பி.மார் போனவாரம் சந்திச்சு சல்லாபம் நடத்திச்சினமெல்லோ. சனங்களின்ர பிரச்சினைகளைப் பற்றி கதைச்சிச்சினமோ இல் லையோ தனித்தனியா சந்திச்சு தாஜா பண்ணி யிருக்கினம். அதில எங்கட சம்மந்தமானவர் எப்புடி தாஜா பண்ணினவர் தெரியுமோ. போன எலக்‌ஷனில தமிழ் பேசிற மகா ஜனங்கள் உங்களுக்கு வாக்களிக்கயில்லையெண்டு கோபிச்சுக் கொள்ளாதேங்கோ. அந்த வாக்கு களை உங்களுக்கு எதிராகவும் பயன்படுத்த இல்லையெண்டதையும் நீங்கள் யோசிச்சு தெரிஞ்சு கொள்ள வேணும் எண்டு வினயமாக் கேட்டுக் கொண்டாராம். அதுக்குக் கூட தான் தான் ஐடியாக் குடுத்தவரெண்டும், கொஞ்சம் ஓவராவே பிட்டைப் போட்டிருக்காருங்கோ. சம்மந்தமானவருக்கு முடி பழுத்திட்டுது எண்டு மட்டும் நினைச்சுப் போடாதீங்கோ. அவரின்ர மூளையும் பழுத்திட்டுது எண்டதை அதிகார மானவரிட்டை அவர் பூசினதை வச்சு புரிஞ்சு கொள்ளுங்கோ. மெகா சீரியல் எண்டு கேள்விப்பட்டிருப்பியள்..... அதுபோல இது மெகா ராஜ தந்திரமுங்கோ....வ்.....




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## உள்ளூர் தயாரிப்புக்களை ஊக்குவியுங்கள்

**தொ**லைக்காட்சி, ஊடகங்களில் ஒளிபரபப்படும் நிகழ்ச்சிகளில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் வெளி ஊடகங்களில் இருந்து பெறப்படுவனவாக இருப்பதுபற்றிப் பலதரப்பட்ட கருத்துக்கள், விமர்சனங்கள் எழுந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில் குறிப்பாக ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் பற்றிய எனது ஆதங்கத்தைத் தெரிவிக்கலாமென்று எண்ணுகிறேன். 'ஐ' அலைவரிசையில் 'ராஜ்' அலைவரிசையிலுள்ள நிகழ்ச்சிகள் உள்வாங்கப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்படுகிறது.

'சக்தி' ஒளிபரப்பின் ஊடாக 'சன் ரி.வி.'யிலிருந்து உள்வாங்கப்பட்ட நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகிறது. இருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவ வதில்லை என்பது பெருங்குறையாகவே உள்ளது. இக்குறையினை நிவர்த்தி செய்ய மேற்குறிப்பிட்ட ஒளிபரப்பாளர்கள் முயற்சிக்க வேண்டும் என்பதே எமது அவா.

*கலைச்சுடர் பாரீத் றபீக், கொழும்பு - 12.*

## தடம் பதிக்கும் 'இதய ராகம்' ரவூப்

**இ**லங்கை வானொலி வரலாற்றில் ஜாம்பவான்கள் பலர் இருந்ததுண்டு. நமது காலத்தில் நம் கண்முன்னே ஓர் வானொலி ஜாம்பவான் தோன்றியுள்ளாரென்றால் அது இதயராகம் ரவூப் தான். சுகமான இரவு வேளைகளில், பொழுது போக்கிற்காக வெறும் பாடல்களை மட்டும் கேட்டுக் கொண்டிருந்த ரசிகர்களுக்கு சொல்லாமல் கொள்ளாமல் கிடைத்த அதிர்ஷ்டம் தான் அறிவிப்பாளர் ரவூப். அவரது கற்பனைத் திறனில் வார்த்தை ஜாலங்களில் இதயத்தைக் குளிர்வித்து நம்மை இதமாய் அரவணைத்துச் செல்லத்தான் இதயராகம் என்றால் அது மிகையாகாது. வரலாறு ஒருநாள் அவர் புகழ் பேசும் போது சமகாலத்தில் நாம் இருந்ததை நினைத்து நிச்சயம் பெருமைப்படுவோம்.

*- கலைமதி, கட்டுகஸ்தோட்டை.*

## நேற்றைய காற்று

**சூ**ரியன் எப்.எம்.இல் அறிவிப்பாளர் மப்றூக் அவர்கள் தொகுத்து வழங்கும் "நேற்றைய காற்று" நிகழ்ச்சியானது சிறப்பானதும் தனித்துவமானதுமாகும். காலையிலிருந்து மாலை வரை பல்வேறு உழைக்கும் வர்க்கத்தினர் அனைவரும் ஓய்வாக நித்திரைக்குச் செல்லும் இராப்பொழுதிலே மெல்லிசையில் அமைந்த பல இடைக்காலப் பாடல்களும் கவலைகளை கலைக்கும் கனதியான கவிதைகளும் தூங்கச் செல்பவர்களை இதமாகத் தாலாட்டும் தாயாக பல உள்ளங்களுக்கு நேற்றைய காற்று நிகழ்ச்சி அமைகிறது என்றால் அது மிகையல்ல. மேலும் அந்நிகழ்ச்சியிலே நம் நினைவில் எட்டிப்போன பல கவிஞர்கள் பற்றிய தகவல்களும் சில பாடகர்களின் பேட்டியும் இடையிடையே ஒலிப்பதும் பல அற்புதமான சிறப்பான பாடல்களுக்குப் பொருத்தமான கவிதைகள் இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. இளையராஜாவின் கைவண்ணத்தில் பட்டை தீட்டப்பட்ட பல அற்புதமான மெல்லிசைப் பாடல்கள் செவிக்கு இன்பமாக ஒலிப்பதும் கவலைகளை மறந்து கண்களுக்கு உறக்கம் தரும் அன்றைய தென்றலாக அமைகிறது நேற்றைய காற்று. இந்நிகழ்ச்சியின் தரம் என்றும் குறையாமல் மேலும் அழகு பெற வேண்டும் என்பதே அநேக நேயர்களின் எதிர்பார்ப்பாகும்.

*தாஜுன்னிஷா, மாதம்பிட்டிய.*

## இதயத்தை மீட்டும் என் விருப்பம்

**தெ**ன்றலுள் பிரவேசித்த குறுகிய காலத்திற்குள்ளே நேயர்கள் மத்தியில் தனக்கென தனியானதொரு இடத்தை நிலைநிறுத்தியவர் அறிவிப்பாளர் ஏயெம்.தாஜ் அவர்கள்.

தென்றல் நேயர்கள் மாத்திரமன்றி அடுத்தாத்து நேயர்களும் இவரது என் விருப்பத்திற்காகக் காத்திருக்கின்றார்கள் என்று அறிகின்றபோது பெருமையுடன் கூடிய கர்வமாய்த் தானுள்ளது.

படைப்பாளியின் மேதா விலாசத்தை விட நல்ல படைப்புகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள் என்பதை இதிலிருந்து அறியக் கூடியதாய் உள்ளது.

இவரது நிகழ்ச்சி பற்றி கூறப்போனால் வார்த்தைகளுக்கு நிறம் கொடுத்து வானலைக்கு அனுப்புவதால், அது இயற்கையின் சோபிதத்தில் கரைந்து செல்கிறது. இச் சொர்க்கத்தை காண்பதற்காகவே இரவிடம் இலஞ்சம் கொடுத்து அமாவாசையிலும் பௌர்ணமியவள் வலம் வருவாள் ஏயெம்.தாஜின் என்விருப்பம் கேட்க.

*யாழ். சரத், யாழ்ப்பாணம்.*

# தலைவர் தொண்டமானுக்கு தொண்டனின் கடிதம்

*உயர் திரு*
*தலைவர் தொண்டமான்*
*அவர்களுக்கு,*

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நீண்ட நாள் ஆதரவாளராகிய நான், எம்.சாமி தெரிவிப்பது:-

நீங்கள் அண்மையில் புலிகள் இயக்கத்தினருடன் இணைந்து மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சியெடுப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன். இது மலையக மக்களின் பிரச்சினைகளை அதிகரிக்குமே அல்லாது தீர்வாக அமையாது. ஏனென்றால் தொழிலாளர் காங்கிரஸுக்கு வாக்களித்தமைக்காக இரத்தினபுரி, களுத்துறை, நாவலப்பிட்டி இம்மாதிரி இடங்களில் மலையகத் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள். நீங்கள் எடுத்துதிருக்கும் முடிவால் என்ன நடக்கும் தொண்டமான் புலிகளுடன் சேர்ந்து விட்டார். ஆகவே மலையகத் தமிழர்கள் எல்லோரும் புலிகளே என்று பெரும்பான்மை இனத்தவர் பிரசாரம் மேற்கொள்வர். அது விஸ்வரூபம் எடுத்தால் உங்களால் மலையகத் தமிழரைக் காப்பாற்ற முடியுமா? பின்வரும் விளைவுகளை முன்னால் சிந்திக்க வேண்டும். அந்நேரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்போ அல்லது புலிகளோ உங்களுக்கு அனுசரணையாகப் பேச முன்வரமாட்டார்கள்.

ஏற்கனவே தொழிலாளர்கள் வாழ்க்கைச் செலவைக் கொண்டு செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். மலையகத்தில் இன்னுமொரு இனப்பிரச்சினை தோன்றுமானால் பெரும் இழப்பு ஏற்படும். நீங்கள் எடுத்திருக்கும் முடிவால் எங்களுக்காக பிற நாடோ அல்லது இந்தியாவோ அந்நேரத்தில் உதவ முன்வராது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை வளர்த்தெடுப்பதற்கு ஐயா தொண்டமான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார். நான் சிறுவனாக இருந்த காலம் - 1960க்கு முன் என்று நினைக்கிறேன் - ஐயா தொண்டமானை (கண்டி மாவட்டம்) கபரகலை என்னும் ஊரில் இருந்து கிலாபோக் என்ற இடம் வரை யானையின் மேல் அமர்த்தி ஊர்வலமாகக் கொண்டு வந்தார்கள். அன்றுதான் அப்பகுதியில் காங்கிரஸ் உதயமாகியது. அதை பாதுகாப்பது உங்களின் கடமையல்லவா? ஒரே ஒரு தடவை அமைச்சுப் பொறுப்புக் கிடைக்க வில்லை என்பதற்காக அவசரப்பட்டு நீங்கள் எடுக்கும் முடிவினால் முழு மலையகமும் அல்லவா பாதிக்கப்படப்போகிறது. நீங்கள் இப்போது எடுத்திருக்கும் முடிவால் பெரும்பான்மை மக்களையும் இந்தியாவையும் பகைக்க நேரிடும்.

இப்போது வடக்கு, கிழக்கு எரிந்து கொண்டிருப்பதுபோல் மலையகமும் எரியும் நிலைமையை தோற்றுவித்துவிடாதீர்கள். ஏற்கனவே சந்திரசேகரன் புலிகளுடன் தொடர்பு கொண்டபோது உங்கள்மேல் மரியாதை கூடியது. யாரிடமும் போய் மண்டியிடாத தலைவன் ஒருவன் எங்களுக்கு இருக்கிறான் என்று நாங்கள் பெருமைப்பட்டோம். கடைசியில் நீங்களும் போய் மண்டியிட்டுவிட்டு தன்மானம் என்று சந்தர்ப்பவாதமாகக் கதைக்கிறீர்களே. அப்படியென்றால் இவ்வளவு காலமும் தன்மானம் இல்லாமலா தலைவராக இருந்தீர்கள்? நாங்களும் தொண்டர்களாக இருந்துள்ளோம். ஒருவேளை அதனால்தான் ஆட்சிக்கு வருபவர்களுக்கு தாவித்தாவி ஆதரவு வழங்கி அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றீர்களா?

இந்தக் கடிதத்தை எழுதும் உரிமை எனக்கு உண்டு. ஏனென்றால் மாதாமாதம் ஒழுங்காக சந்தா கட்டும் காங்கிரஸின் உண்மையான தொண்டன் நான். நீங்கள் சொன்னால் ஒரு பேய்ச் சின்னத்துக்கும் எனது வாக்குரிமையை வழங்கத் தயாராக இருக்கும் உண்மையான தொழிலாளர் காங்கிரஸ்காரன் நான். எனவே தலைவரே, காங்கிரஸினதும் எமது சமூகத்தினதும் நன்மையைப் பற்றி சிந்தித்து இனியாவது முடிவு எடுங்கள். இல்லாவிட்டால் காங்கிரஸ்காரர்கள் மனமுடைந்து வேறு கூடாரங்களுக்குப் போய்விடுவார்கள். அப்படி ஒரு நிலைமை தோன்றினால் நான் தீக்குளித்து விடவும் தயங்கமாட்டேன். இது நமது ஐயா மீது சத்தியம். உங்களுக்கு காங்கிரஸ், கட்சியாக இருக்கலாம்.- எனக்கு காங்கிரஸ், உயிர் என்பதை விளங்கிக் கொள்ளவும்.

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk


## விளம்பரப் பகுதி



### நவசித்தர் மாந்திரீகம்

ஓம் குருவே நம : கர்மவினைகளினால் தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத துன்பதுயரங்கள். வீட்டில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை. தொழில் முன்னேற்றம் வெளிநாட்டு பிரயாணத்தடை காதல் பிரச்சினை. காதலர்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்ய. பிரிந்தவர் ஒன்று சேர கணவன் மனைவி பிரச்சினைகள் தீர. வேண்டாதவரைப்பிரிக்க, கிரகதோஷ நிவர்த்தி செய்து. வீட்டில் லெட்சுமிகரம் ஏற்பட. வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு கடல் கடந்து பலன் அழிக்கசுடியவாறு விஷேடமாக செய்து கொடுக்கப்படும். இன்னும் அனேககாரியங்களுக்கு மட்டக்களப்பு பரம்பரை மஹாசக்தி உபாசகர் சித்த ஆயுள்வேத மாந்திரீக விஷ மருத்துவர்.

Dr. T. Murukuppillai (S.A.M.P), Main Street, Pandiruppu - 01, Kalmunai. (Sri Lanka) Tel : 067- 2224077. வெளிநாடு : 0094672224077

### தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)**

கிரக தோஷம், காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் - மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு, உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு

Tele/Fax : 065-2224825, +94777032844. Balu Sothidar @ hotmail.com.

*"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"*
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"







### மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P.K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com

## இன்னொருவர் பார்வையில்

# புலிகளுக்கெதிரான உலகளாவிய தமிழர்களின் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது

### லண்டன் வாசியான ஜெயதேவன் வழங்கிய பேட்டி

**கேள்வி :-** *உங்கள் இருவரையும் (ஜெயதேவனையும் விவேகானந்தனையும்) புலிகள் வன்னியில் தடுத்து வைத்திருந்தபோது சித்திரவதை செய்தார்களா?*

**பதில் :-** அவர்கள் உடல் ரீதியாகச் சித்திரவதை செய்யவில்லை. ஆனால் மனோரீதியான சித்திரவதைக்கு உட்படுத்தினர். நாம் மனோபாவம் குன்றியவர்களாக இருந்தோம். பெரிதும் பலவீனப்பட்டிருந்தோம்.

**கேள்வி :-** *இந்த நிலை எப்படி ஏற்பட்டது?*

**பதில் :-** பிரச்சினை என்னவென்றால் பிரிட்டனில் புலிகளோடு சேர்ந்தியங்காமல் நான் சுயாதீனமாகச் செயற்பட்டு வந்தேன். பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் புலிகள் எனது உதவியை நாடி வந்தனர். 1983ஆம் ஆண்டு லண்டனில் புலிகள் தமது அமைப்பை நிறுவிய போது எனக்கு அவர்களுடன் எவ்வித தொடர்புமிருக்க வில்லை. உண்மையைச் சொல்வதானால் நான் புலிகளின் அனுதாபியாக இருந்தேன். நான் சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததாலும் சமூக ஸ்தாபனங்களை நான் உருவாக்கியதாலும் அவர்கள் என்னிடம் சில திறமைகள் இருப்பதைக் கண்டு கொண்டனர். வேறு வேலைகளுக்காக அவர்கள் என்னை அணுகினர். நான் அவர்களுக்குப் பல வழிகளில் உதவி செய்தேன். உதாரணத்துக்கு ஈழம் இல்லத்தை அவர்களுக்காகப் பெற்றுக் கொடுத்தவன் நான். அவர்களிடமிருந்து என்றும் நான் சம்பளம் பெற்றதில்லை. எனது குடும்பம் கூடப் பெரும் துன்பங்களை அனுபவித்திருக்கிறது. 1977ஆம் ஆண்டு இனக் குழப்பம் மிக மோசமானவைகளில் ஒன்று. நாங்கள் அப்போது மயிரிழையில் உயிர் தப்பினோம். உண்மையில் மூன்று சகோதரர்களுமே கொல்லப்பட்டிருப்போம். நாம் அப்போது கண்டியிலிருந்தோம். எனது மூத்த சகோதரர் டாக்டர் ரவீந்திரன் பேராதெனிய பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். எனது இரண்டாவது சகோதரர் அதே பல்கலைக்கழகத்தில் விவசாய பீட மாணவராக இருந்தார். 1979ஆம் ஆண்டு நான் பிரிட்டனுக்கு வந்தேன். நான் அரசியல் ரீதியாக உணர்வுபூர்வமானவன். தமிழ் இலட்சியத்துக்காகப் பல விடயங்களை நான் செய்துள்ளேன். 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற நவாலி தேவாலயத்தின் மீதான குண்டு வீச்சுச் சம்பவத்தையடுத்து நான் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டேன். இத் தாக்குதலில் பெருமளவு தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். அதுவரை சமூக சேவைகளில் ஈடுபட்டு வந்த நான் பின்னர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டேன்.

**கேள்வி :-** *நீங்கள் கத்தோலிக்கரா?*

**பதில் :-** நான் ஓர் இந்து. எனது தாய் அங்கிலிக்கன். ஆனால் அவர் இந்து சமயத்துக்கு மதம் மாறிக் கொண்டார். நவாலிச் சம்பவம் வெகுவாக என்னைப் பாதித்தது. அதுவரை சமூகப் பணிகளில் ஈடுபட்டுவந்த நான் அரசியல் வேலைகளில் ஈடுபடலானேன். மனித உரிமை மீறல்கள் தொடர்பான பணிகளிலேயே பெரிதும் ஈடுபட்டேன். நான் புலிகளோடு நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்தாமல் சுயாதீனமாகவே எனது பணிகளில் ஈடுபட்டேன். நாம் நண்பர்கள் ஒன்றிணைந்து எம்.பி.க்கள், அமைச்சர் ஆகியோருக்குப் பிரச்சினைகள் குறித்து எழுதி ஓர் அழுத்தக் குழு போன்று செயற்பட்டது குறித்துப் புலிகளுக்கு தெரிய வந்ததும், அவர்கள் உதவி கோரி என்னை அணுகினார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கு நான் உடன்பட்டேன். 2001ஆம் ஆண்டு பிரிட்டனில் புலிகள் தடைசெய்யப்பட்டபோது போர்ட் ஹில்ஸ் இல்லத்தில் நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தை நாமே சுயாதீனமாக ஒழுங்கு செய்தோம். அதில் புலிகளுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை.

**கேள்வி :-** *ஆனால் அவர்கள் வந்திருந்தனர். நான் அவர்களைப் பார்த்தேன்.*

**பதில் :-** அந்தப் பயல்கள் வந்தார்கள். பிரிட்டனிலுள்ள புலிகளின் தலைவர் சாந்தன் வரவில்லை. புலிகளின் தலைமை அதற்கு முற்றுமுழுதாக எதிராகச் செயற்பட்டது. அக் கூட்டத்துக்குச் செல்ல வேண்டாமென்று புலிகள் மக்களுக்குக் கூறினர். அதன் பின்னர் நான் பொதுக் கூட்டமொன்றினை ஏற்பாடு செய்தேன். இக் கூட்டத்தைக் குழப்ப முனைந்தமைக்காக லண்டனிலுள்ள புலிகளின் தலைமைக்கெதிராக நாம் கடுமையான விமர்சனத்தில் ஈடுபட்டோம்.

**கேள்வி :-** *புலிகளின் பேச்சாளராக சீ.என்.என். தொலைக்காட்சியிலும் பி.பி.சி.யிலும் பேட்டியளிக்கும் அன்ரன் ராஜா போர்ட் ஹலிஸ் கூட்டத்துக்கு வந்திருந்ததை நான் கண்டேன். புலிகளின் பிரசாரகரான வண. பிதா இமானுவேல் திருமதி குமார் பொன்னம்பலமும் அங்கு வந்திருந்தனர்.*

**பதில் :-** அன்ரன் ராஜா வந்திருந்தார். நான் அவரை அழைத்திருந்தேன். சாந்தன் வர வில்லை. பாலசிங்கம் பிரிட்டனுக்கு வர நான் உதவிய தாலேயே அன்ரன் ராஜா கூட்டத்துக்கு வந்திருந்தார். புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் அன்ரன் ராஜாவிடம் மட்டுமே எனக்குத் தொடர்பிருந்தது. வன்னியில் அன்ரன் பாலசிங்கம் மிக மோசமாகச் சுகவீனமுற்றிருந்தபோது என்னோடு தொடர்பு கொண்ட அன்ரன் ராஜா, பால சிங்கம் பிரிட்டனுக்கு வர உதவுமாறு கேட்டுக் கொண் டார். பாலசிங்கத்தை எனக்குத் தெரியுமென்பதால் போர்ட்ஹலிஸ் கூட்டத்துக்கு வருமாறு அவரை நான் அழைத்தேன். ஆனால் அவர் வரவில்லை. அக் கூட்டத்தை ஒழுங்கு செய்தவன் நான். புலிகளல்ல. ஆனால் எங்களைப் புலிகளென்று நீங்கள் எழுதியிருந்தீர்கள். நாங்கள் புலிகளுக்குப் புறம்பாக முற்றுமுழுதாகச் சுயாதீனமாகவே இயங்கினோம்.

**பேட்டி காண்பவர் :** தாங்கள் புலிகள் இயக்கத்துடன் சேராமல் சுயாதீனமாக இயங்குவதாகப் பலர் கூறுகின்றனர். ரொறன்ரோவிலுள்ள பேராசிரியர் வி.இலகுப்பிள்ளை (யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்) தான் சுயாதீனமாக இயங்குவதாகவே கூறுகின்றார். ஆனால் அவரது ரொறன்ரோ மாநாட்டில் புலிகள் வந்திருந்ததை நான் கண்டேன். அங்கு புலி இயக்கக் கொடிகள், வீடியோ நாடாக்கள், வெளியீடுகள் மற்றவர்களின் நம்பிக்கைகளைப் பெறுவதற்காகத் தாம் சுயாதீனமாக இயங்குவதாக இவர்கள் கூறலாம்.

**ஜெயதேவன் :** கனடாவில் பேராசிரியர் இலகுப்பிள்ளைக்கும் புலிகளுடன் பிரச்சினைகள் உண்டு.

பிரிட்டனில் புலி இயக்கப் பயல்களுடன் எமக்கு நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. 1997ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தை கிங்ஸ்பரி மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தோம். 12 வேட்பாளர்கள் இக் கூட்டத்தில் பங்குபற்றினர். ஆனால் கடைசி நேரத்தில் அங்குள்ள பௌத்த விகாரையிலுள்ளவர்கள் இக் கூட்டத்துக்குச் சதி செய்ததால் வேறொரு இடத்துக்கு கூட்டத்தை மாற்றினோம். இத் தேர்தலில் தொழிற்கட்சி பதவிக்கு வந்தது. பின்னர் சாந்தன் எமக்குப் பிரச்சினை தர முனைந்தார். எமது எந்தச் செயற்பாடுகளிலும் பங்குபற்ற வேண்டாமென்று அவர் கூறினார்.

**கேள்வி :-** *ஏன்?*

பதில் :- அடிப்படையில் சகல விடயங்களுமே தனது தலைமையின் கீழ் செய்யப்பட வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஒன்றில் அவர்கள் பயப்படுகிறார்கள் அல்லது பொறாமை கொண்டுள்ளனர். புலிகளுடன் இருக்கும் பிரச்சினை என்னவென்றால் நீங்கள் செய்யும் அனைத்துக்கும் அவர்களிடம் அனுமதி பெற வேண்டும். நான் சுயாதீனமாகச் செயற்பட்டதால்தான் எனக்குப் பல எம்.பி.க்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

நாங்கள் மேற்கொள்ளும் சகல விடயங்களிலும் புலிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்படும் எம்.பி., பெரி கார்டினரை எடுத்துக் கொள்ளுங்கள், புலிகளின் வேலைகளை மேற்கொள்வதற்காக ஈழம் இல்லத்தோடு இணைத்திருக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கின்றனர். அதுவே புலிகளின் எதிர்பார்ப்பாகும்.

தமிழ் கார்டியன் பத்திரிகையை நானே நிறுவினேன். பத்திரிகையை ஆரம்பிப்பது குறித்து நான் வசந்தராஜாவுடன் கலந்துரையாடினேன். நானொரு கணக்காய்வாளர் என்பதால் உடனடியாகவே பத்திரிகையை ஆரம்பிக்க முடிந்தது. பத்திரிகையை ஆரம்பித்திருப்பது தொடர்பாகப் புலி இயக்கத்தைச் சேர்ந்த சாந்தனிடம் கூறினேன். யார் உம்மைப் பத்திரிகை ஆரம்பிக்கச் சொன்னதென்று சாந்தன் என்னிடம் கேட்டார். பத்திரிகை பற்றிப் பேசுவதற்குத் தமது ஈழம் இல்லத்துக்கு வருமாறு சாந்தன் கேட்டார். அதாவது தமது இயக்கத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் நான் முதலில் அங்கு வர வேண்டுமென்று அவர் கேட்டார்.

அவர்கள் பத்திரிகை மீது பூரண கட்டுப்பாட்டை வைத்திருக்க விரும்பினார்கள். நான் எனது வேலையை ஒரு வருட காலம் கைவிட்டுவிட்டு பத்திரிகை வேலைகளில் மூழ்கியிருந்தேன். இதனால் ஓரளவு நிதி நெருக்கடியையும் சந்தித்தேன். அப் பத்திரிகை வளர்ச்சி பெற்று வந்ததால் புலிகள் அதனைத் தமக்கு அச்சுறுத்தலாகக் கருதினார்கள்.

**கேள்வி :-** *அப் பத்திரிகை புலிகளுக்குப் பிரயோசனமாக இருந்திருக்கிறதென்றல்லவா நான் கருதினேன்.*

**பதில் :-** புலிகளின் அறிக்கைகளும் அதில் பிரசுரமாகின. நாம் சுயாதீனமாகச் செயற்பட்டதால் பத்திரிகை நம்பகத்தன்மையைப் பெற்றது. 1998ஆம் ஆண்டு எனக்கு பாரிய அறுவைச் சிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட்டது. ஒரு மாத காலம் நான் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தேன். அப்போது அப் பத்திரிகையைத் தம்வசம் ஒப்படைக்குமாறு புலிகள் வற்புறுத்தினர். என்னால் எதுவுமே செய்ய முடியாமல் போய்விட்டது.

இப்போது நடராஜா (சுதா) என்பவர் புலிகளுக்காக அப் பத்திரிகையை நடத்தி வருகிறார். அவர் தீவிர புலி உறுப்பினர். கிங்ஸ்பரி தமிழ் பாடசாலையென்ற ஞாயிறு பாடசாலையை நானே ஆரம்பித்தேன். இப்போது அங்குள்ள ஆசிரியர்கள் அதனை நடத்தி வருகின்றனர். ஈழப் பதீஸ்வரர் ஆலயத்தையும் நாங்களே உருவாக்கி நடத்தினோம். மக்கள் பெருமளவில் அங்கு வரத் தொடங்கினார்கள். எனவே அந்த ஆலயத்தையும் புலிகள் தம்வசம் எடுத்துக் கொள்ள விரும்பினார்கள். நான் ஆலயத்தின் பணத்தை மோசடி செய்வதாகப் புலிகள் குற்றஞ்சாட்டினார்கள். ஒருவர் மீது அபகீர்த்தி ஏற்படுத்த வேண்டுமானால் இவ்வாறு பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டும். அவர்கள் என்னிடமிருந்து ஆலயத்தை பலாத்காரமாக எடுத்து பின்னர் நீதிமன்ற உத்தரவுப்படி தோற்றுப்போய் விட்டார்கள்.

கருணா அம்மானுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த அவர்கள் முனைந்த அதே பாணியிலேயே என் மீதும் சேறு பூசப் புலிகள் முனைகிறார்கள். கருணா புலி இயக்கத்தை விட்டு விலகியதும் அவர் மீது அபாண்டங்களைச் சுமத்தினார்கள். கருணாவைப் பெண் பித்தர், மோசடிக்காரர் என்றெல்லாம் குற்றஞ்சாட்டினார்கள்.

**கேள்வி :-** *ஆலய நிர்வாகத்தில் புலிகள் தலையிடுவதற்கு நிதிதான் காரணமா?*

**பதில் :-** நிதியும் மக்களும். மக்கள் வரும்போது அவர்களை அணுகி நிதி திரட்ட முடியுமல்லவா? இதுவே அவர்களின் நோக்கம். நாங்கள் புலிகள் இயக்கத்துக்கு எதிராக எதுவும் செய்யவில்லை. அவர்கள் மீதான தடையை நீக்குவதற்கு சுயாதீனமாகச் செயற்பட்டிருக்கிறோம். நான் சுயாதீனமாகச் செயற்படுவது பாலசிங்கத்துக்கு ஆத்திரமூட்டியது. அவர் என் மீது அவதூறுகளைப் பொழிந்தார். தமிழ் கார்டியன் பத்திரிகை கூட என்னைப் பற்றி எழுதியது. எனவே நான் ஒதுங்கிக் கொண்டு விட்டேன்.

பிரிட்டனிலுள்ள புலி இயக்கத்தவர்களுடன்தான் எனக்குப் பிரச்சினை என்பதால் வன்னி செல்லத் தீர்மானித்தேன். 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் அங்கு சென்றேன். லோரன்ஸ் திலகரைச் சந்தித்தேன். நான் அவசர அலுவலாக யாழ்ப்பாணம் சென்றுவிட்டுத் திரும்பும் வழியில் தயா மாஸ்டரையும் லோரன்ஸ் திலகரையும் சந்தித்தேன். அவர்கள் காஸ்ட்ரோவைச் சந்திக்குமாறு கூறினார்கள். சாந்தன் தமக்குப் பெரும் பிரச்சினையாக இருப்பதாகவும் பல தடைகளை ஏற்படுத்துகிறாரென்றும் தயா மாஸ்டர் கூறினார்.

அன்ரன் பாலசிங்கத்தை பிரிட்டனுக்குக் கொண்டு வரப் புலி இயக்கம் முதலில் முயற்சி செய்து தோல்வி கண்டது. பின்னர் எனக்கூடாக முயற்சி எடுக்கப்பட்டது. நான் எனக்கிருந்த பிரிட்டிஷ் எம்.பி.க்களின் தொடர்பைப் பயன்படுத்தி பாலசிங்கத்தை லண்டனுக்கு எடுப்பித்தேன். பிரிட்டிஷ் வெளிவிவகார அலுவலகம் லண்டன் வருவதற்கான சகல ஒழுங்குகளையும் பாலசிங்கத்துக்கும் மனைவிக்கும் செய்து கொடுத்தது. இந்த உதவிக்குப் பதிலாக புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சில் ஈடுபட வேண்டுமென்று வெளிவிவகார அலுவலகம் நிபந்தனை விதித்ததும் பாலசிங்கம் லண்டன் வந்து சேர்ந்ததும் அமைதியானார். சமாதானப் பேச்சு நடக்கவில்லை. பாலசிங்கத்தைச் சந்திப்பதற்கு அப்போதைய பிரதமர் ரணில் லண்டன் வந்தார். ஆனால் ரணிலைச் சந்திக்க பாலசிங்கம் விரும்பவில்லை. எனவே ரணில் இலங்கைக்குத் திரும்பிச் சென்றார்.

(அடுத்த வாரம் தொடரும்)



இடது பக்கத்தில் விவேகானந்தனும், வலது பக்கத்தில் ஜெயதேவனும்


**பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் வைத்து சம்பந்தனை ஆபாச வார்த்தைகளால் திட்டினார் பாலசிங்கம்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டன் வாசியுமான ராஜசிங்கம் ஜெயதேவன் என்பவர் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழின் நிருபரான துசி ரணதுங்கா என்பவருக்கு லண்டனில் அளித்த பேட்டியின் முக்கிய விபரங்களை இங்கே தருகிறோம். புலிகளின் அனுதாபிகளான உலகத் தமிழர் பலர் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டினை எடுத்ததற்கான காரணங்களை அவர் தனது பாணியில் விளக்குகிறார். சமாதானப் பேச்சினை ஆரம்பிப்போமென்ற உறுதிமொழியின் பேரில் பாலசிங்கம் லண்டன் வந்தமை, முன்னாள் பிரதமர் ரணில் ஏமாற்றப்பட்டமை, மாத்தையாவோடு 600 புலி இயக்க உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தனை பாலசிங்கம் மிகக் கீழ்த்தரமான ஆபாச வார்த்தைகளால் திட்டியமை போன்ற விபரங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார் ஜெயதேவன். லண்டனிலிருந்து வன்னிக்கு ஜெயதேவன் அழைக்கப்பட்டு சிறைவைக்கப்பட்டமையும் மோசடியான முறையில் அவரின் லண்டன் ஆலயம் கைப்பற்றப்பட்டமையும் பழைய சங்கதிகள்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

என்னுடைய ஆரம்ப காலத்தில் நான் எத்துணையோ இசையமைப்பாளர்களோடு பணிபுரிந்திருக்கிறேன். அவர்களெல்லாம் என்னிடத்தில் அன்பு பாராட்டி என்னை உடனே அங்கீகரித்து விட்டார்கள் என்று சொல்ல முடியாது. சந்தர்ப்ப சூழ்நிலையினால் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் நான் அவர்கள் முன்பு அமர்ந்து பாட்டுப்



புனைந்தேன் என்பதுதான் சரியான உண்மை.

இதில் வேடிக்கையென்னவென்றால் எந்த இசையமைப்பாளரும் என்பால் பெரிய அளவில் பகைமை பாராட்டவில்லை; அதே நேரத்தில் 'ஓஹோ'வென்று அனுசரணையாகவும் இருந்ததில்லை.

இதற்குக் காரணம் பரஸ்பரம் Vibration இல்லாது போனதுதான். எந்த இருவருக்கிடையே இந்த வைப்ரேஷன் இல்லையோ, அவர்களது தொழிலுறவு தாமரை இலைத் தண்ணீராகத்தான் இருக்கும்.

மெல்லிசை மன்னர் விஸ்வநாதன் அடிக்கடி சொல்லுவார்:

"பாட்டு எழுதற கவிஞரும், மியூசிக் டைரக்டரும் புருஷன், பொஞ்சாதி மாதிரி, அடிச்சுண்டாலும், புடிச்சுண்டாலும், அடிமனசுல ஒரு பந்தம் இருக்கணும்..... அப்பதான் பாட்டுங்கற பிள்ளைய, ஒழுங்காப் பெத்தெடுக்க முடியும்... இந்தக் குழந்தையைப் பெத்தெடுக்கறதுல, ரெண்டுபேருக்குமே Fifty Five என்கிற விகிதாச்சாரத்துல பங்கு உண்டு..."

மேற்சொன்ன பரந்த மனப்பான்மையோடு அன்றைய இசையமைப்பாளர்கள் எல்லோரும் இருந்தனர் என்று சொல்ல இயலாது.

புதியவர்களை ஊக்குவித்த புண்ணியவான்களும் உண்டு; புறந்தள்ளிய பிரபலங்களும் உண்டு.

'மாமா' என்று படத்துறையைச் சார்ந்தோரால், மரியாதையுடன் அழைக்கப் பெறும் திரு.கே.வி.மகாதேவன் அவர்கள், என்னை ஆரம்ப காலத்தில் எட்டிக்காயாய் எண்ணியவர்தான். நான் தகுதியுள்ளவனா இல்லையா என்றெல்லாம் சோதித்துப் பார்க்க அவருக்கு அவகாசமில்லாது போனதோ என்னவோ!

அவரோடு நான் பணிபுரிந்த ஆரம்ப நாட்கள், எனக்கு அவ்வளவு உற்சாகத்தை ஊட்டவில்லை. என்ன காரணம் கருதி, அவர் என்னை எட்ட நிறுத்துகிறார் என்பதும் எனக்குப் பிடிபடவில்லை. நான் வர்ணமெட்டுக்களுக்கு வார்த்தைகளை வழங்கத் தெரியாமல், ஆர்மோனியப் பெட்டிக்கு முன்னால் சிபாரிசுகளைக் கொண்டு அமர்ந்தவனல்ல. கறுப்பு, வெள்ளைக் கட்டைகளில் இசையமைப்பாளரின் விரல்கள் இழையும் போதே மெட்டுக்கேற்ற வார்த்தைகளை இட்டு நிரப்பி, காட்சிக்கான கருத்தையும் அதில் கலந்து வழங்க முடியும் என்னும் தன்னம்பிக்கையைத் தலையில் சுமந்து கொண்டு சென்னைக்கு வந்தவன். என்னுடைய வித்தகம் ஒன்றே எனக்கு 'Visiting Card'.

அப்படியிருப்பினும் திரு.கே.வி.மகாதேவன் என்னை அங்கீகரிக்காமற் போனது என் துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். அவருடைய துலாக்கோலில், என் புலமையின் எடை அவருக்குப் போதுமான அளவாக இல்லை என்பதைப் புரிந்து கொண்டு, சுயபச்சாபத்தோடு நான் சும்மா இருந்துவிட்டேன்.

விஸ்வநாதன் - ராமமூர்த்தி எனப்படும் மாமேதைகளின் எண்ணங்களும், அடியேன் எண்ணங்களும் ஒரே Wave Length இல் இயங்கியதால், நான் வெகு விரைவில் முன்னேறலானேன்.

(தொடரும்.......)





# கவர்ச்சி பற்றி விமர்சனம் செய்தால் கவலை இல்லை

## - மல்லிகா ஷெராவத் சொல்கிறார்

மும்பை பட உலக 'செக்ஸ் புயல்' நடிகை மல்லிகா ஷெராவத், ஹாலிவுட் வரை சென்று தனது கவர்ச்சி நடிப்புக்கு உலக அங்கீகாரம் பெற்று இருக்கிறார். ஜாக்கி ஜானுடன் இவர் நடித்த 'திமித்' படம் உலக அளவில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. அந்தப் படம் மூலம் மல்லிகா ஷெராவத் உலக அளவில் பிரபலம் ஆகி இருக்கிறார்.


இறைவன் கொடுத்த அழகைக்



காட்டுவதில் தவறு இல்லை என்பதில் மல்லிகா உறுதியாக இருக்கிறார்.

அளவுக்கு அதிகமாக கவர்ச்சி காட்டி நடிப்பது சமூக சீரழிவுக்குப் பாதை அமைப்பது போல ஆகாதா? என்ற கேள்விக்கு மல்லிகா இப்படி பதில் சொல்கிறார்.....

நான் கவர்ச்சியாக நடிப்பதை சிலர் விமர்சனம் செய்கிறார்கள். அதைப் பற்றி நான் கவலைப்படுவதே இல்லை. இப்படி விமர்சனம் செய்பவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்களா...வேறு உலகத்தில் இருக்கிறார்களா? என்று தெரியவில்லை. கவர்ச்சியாக உடை அணிவதை நான் எப்போதுமே தவறாக நினைக்கவில்லை.



கவர்ச்சியாக உடை அணிந்து தங்களையும் காத்துக்கொள்ளும் பெண்களை நான் பாராட்டுகிறேன். இது போன்ற பெண்களின் துணிச்சலைப் பாராட்டி வரவேற்க வேண்டும்.


அழகான உடல் அமைப்பு கடவுள் கொடுத்த கொடை. நான் அழகாக இருந்தால் அதைப் பெருமையாகக் காட்டிக் கொள்ள எனக்கு முழு உரிமை இருக்கிறது. நான் என்னைக் கவர்ச்சியாகவோ 'செக்ஸி'யாகவோ காட்டி நடிப்பதில் எந்தவிதத் தவறும் இருப்பதாக நினைக்கவில்லை. இதை சிலர் தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள். அது அவர்களுடைய தவறு.

சினிமா வாழ்க்கையில் இது எனக்கு முக்கியமான நேரம் இந்திப் பட உலகத்துக்கும் ஹாலிவுட்டுக்கும் சம முக்கியத்துவம் கொடுக்கிறேன். மும்பை பட உலகம்தான் எனது கனவு உலகம். எந்த சூழ்நிலையிலும் அதை விட்டு விலக மாட்டேன்.

மும்பை பட உலகிலும் ஹாலிவுட் பட உலகிலும் ஏராளமான வாய்ப்புகள் வருகின்றன. என்றாலும் எனக்குப் பிடித்தமான படங்களைத்தான் தேர்ந்து எடுத்து நடிக்கிறேன். நான் ஷாருக்கானுடனும், அமிதாப்பச்சனுடனும் நடிக்க விரும்புகிறேன். சேகர் கபூர் பர்கான் அக்தர் ஆகியோருடைய டைரக்ஷனில் நடிக்க வேண்டும் என்பதும் என் ஆசை.

....என்று படபடவென சொல்லிச் சிரிக்கிறார் மல்லிகா ஷெராவத்.

# உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




மற்றவர்கள் எழுதிய ஜேம்ஸ்பாண்ட் கதைகள் சிறப்பாக விற்பனையாகவும் இல்லை. அயான் :.பிளெமிங் பெற்ற வெற்றிக்கு என்ன காரணம்? உளவுத் துறையினரின் சாகசங்கள் அனைத்தையும் அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார். ஒற்றர்களின் குணங்கள், செயல்படும் முறைகள், அவர்கள் பயன்படுத்துகின்ற சாதனங்கள் ஆகியவை குறித்தும் அவருக்கு விசேஷமான அறிவு இருந்தது. சர்வதேச அரசியல் நடவடிக்கைகள் பற்றி தெளிவான சிந்தனை கொண்டவராகவும் அவர் விளங்கினார். ஆனால் உளவுத் துறை பற்றி விவரமறிந்தவர்கள் ஜேம்ஸ்பாண்டை ஒரு லட்சிய ஒற்றராக ஏற்றுக்கொள்ள முடியாது என அபிப்பிராயப்படுகிறார்கள்.

அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் ஜேம்ஸ்பாண்ட் மாறுவேடத்தில் உளவுபார்ப்பதில்லை; தன்னை யாரென்று வெளிப்படுத்திக் கொண்டே உளவு வேலை பார்க்கிறார். உளவு பார்க்கின்ற எவரும் அப்படிச் செய்வது கிடையாது என்பதுதான். இந்த வாதத்தை மறுப்பதற்கில்லை. ஆனால் கதையில் சுவாரசியத்தை ஏற்படுத்துவதற்காகவும் கதாபாத்திரத்துக்கு சிரஞ்சீவித் தன்மை அளிப்பதற்காகவும் அயான் :.பிளெமிங் இந்த அடிப்படை உண்மையை அலட்சியப்படுத்தியிருப்பதாகவே கருத வேண்டியுள்ளது. மற்றப்படி உளவறிதல்பற்றி அவர் எழுதியுள்ள விஷயங்கள் அனைத்தும் உண்மைகளை ஆதாரமாகக் கொண்டவை என்பதில் சந்தேகமில்லை.

ஜான் லீ கேரீ என்பவர் ஒற்றர் பற்றிய கதைகளை எழுதி, உலகப் புகழ் பெற்ற மற்றொரு கதாசிரியர் ஆவார். ஜேம்ஸ்பாண்ட் கதைகளிலிருந்து இவருடைய கதைகள் மாறுபட்டவை. இலக்கியத் தரம் வாய்ந்த நடையை இவர் தன்னுடைய கதைகளில் கையாளுகிறார். ஆங்காங்கே வாழ்க்கைத் தத்துவங்களாகிய சிலவற்றையும் சொல்லுகிறார். இவருடைய கதைகளில் வரும் ஒற்றர் கதாபாத்திரத்தின் பெயர் ஸ்மைலி. சோவியத் உளவாளிகளின் சாகசங்களைச் சந்தித்து அவர்களின் முயற்சிகளைத் தோற்கடிப்பதுதான் ஸ்மைலியின் வேலை. ஸ்மைலிக்கு எதிராக சோவியத் உளவாளி கார்லா செயல்படுவதைப் போல கேரீ தன்னுடைய கதைகளில் சித்தரிக்கிறார்.

ஜேம்ஸ்பாண்டைப் போல ஸ்மைலி தான் யாரென்று தம்பட்டம் அடித்துக் காட்டிக் கொள்வதில்லை. விளம்பரங்களுக்கும் ஆசைப்படுவதில்லை. ஸ்மைலி ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு செய்யவேண்டிய காரியங்களைத் தன் கையாட்கள் மூலம் செய்து முடித்து விடுவார். ஜேம்ஸ்பாண்டைப் போல ஸ்மைலி பெண்களைத் தேடி ஓடிக்கொண்டிருப்பதில்லை.


அயான் :.பிளெமிங்கின் நாவல்களைப் போல ஜான் கேரியின் நாவல்கள் பிரசித்தி அடையவில்லை என்பதும் ஜேம்ஸ்பாண்டைப், போல ஸ்மைலி செல்வாக்குப் பெறவில்லை என்பதும் உண்மையே. இதற்குக் காரணம் இருக்கிறது. அயான்:. பிளெமிங் எவருக்கும் புரியக்கூடிய எளிய நடையில் கதைகளை எழுதினார். ஜேம்ஸ்பாண்ட் காதல் லீலைகள் சாதாரண வாசகர்களுக்கும் கிளுகிளுப்பூட்டும் விதத்தில் அமைந்தன. ஆனால் ஜான் கேரியின் நடை, இலக்கியத்தரம் வாய்ந்தது. வாழ்க்கைத் தத்துவங்களையும் ஆங்காங்கே சொல்லுவார். ஓரளவுக்கு தரமுடைய வாசகர்களால் மட்டுந்தான் அவருடைய கதைகளை ரசிக்க முடியும்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# என் உயிருக்கு ஆபத்து

## - பின்லேடன் அண்ணன் மகள் அச்சம்



சர்வதேச தீவிரவாதி பின்லேடனை அமெரிக்காவும் அதன் கூட்டுப் படையும் வலை போட்டுத் தேடி வருகின்றன. நியூயோர்க் உலக வர்த்தக மைய கட்டிடத்தின் மீது விமானத்தை மோதி உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய 'அல் கொய்தா' இயக்கத்தின் தலைவனான ஒசாமா பின்லேடன் ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் பதுங்கி வாழ்கிறான்.

பின்லேடனின் அண்ணன் மகள் வாபா டாபர். 26 வ[illegible]தான வாபா டாபர் அமெரிக்காவின் கலி[illegible]ர்னியாவில் பிறந்தவர். மாடல் அழகியாகவும் இசை பாடகியாகவும் 'நடன' கலைஞராகவும் இருக்கும் வாபா டாபர், அமெரிக்க பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார்.

*அதில் அவர் கூறியிருப்பதாவது :-*

தீவிரவாதி பின்லேடன் எனது சித்தப்பாதான் ஆகால் அவருக்கு எனக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. முகமது பின்லேடன் எனது தாத்தா. சவூரி அரேபியாவை சேர்ந்த அவர் கோடீஸ்வரர். அவருக்கு 54 குழந்தைகள். அவர்களில் ஒருவர்தான் என் தந்தை. எனது அப்பாவும் சித்தப்பா ஒசாமா பின்லேடனும் பார்க்க ஒரே மாதிரியாக இருப்பார்கள்.

பின்லேடன் ஒரு பழமைவாதி. முற்போக்கான எண்ணங்கள் அவருக்கு இல்லை. பின்லேடன் ஆதரவு பழமைவாதிகளால் என் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. பின்லேடன் அண்ணன் மகள் என்பதால் எல்லோரும் என்னை ஒதுக்கித் தள்ளுகிறார்கள். அவர்களாலும் எனக்கு ஆபத்து ஏற்படலாம். பின்லேடனால் எனது வாழ்க்கையே பாதித்து விட்டது. நான் வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவரைத்தான் திருமண் செய்து கொள்வேன்.

இவ்வாறு வாபா டாபர் கூறினார்.

அமெரிக்காவில் தங்கி இருக்கும் இவர், பிரான்சு நாட்டுக்குச் சென்ற போது, அங்குள்ள ஒரு இரவு விடுதியில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மகள் ஜென்னாவுடன் நடனம் ஆடியதாகவும் கூறப்படுகிறது.

# நேபாளத்தில் ஆட்சி எப்படி நடக்கிறது

**கூர்க்கா**, ஸ்வெட்டர் தவிரவும் நேபாளத்தைக் குறித்து நினைவுகூரவும் கவலைப்படவும் நிறையவே உண்டு விஷயங்கள்.

பெற்ற தகப்பனான மன்னர் பீரேந்திரா உள்பட தன் குடும்பத்தில் பதினொரு பேரைச் சுட்டுக்கொன்றுவிட்டு, பின்பு தன்னைத்தானே சுட்டுக்கொண்டு சாவதற்கு முன் சற்று நேரம் கிரீடம் சூடி மன்னராக உட்கார்ந்துவிட்டு உயிரைவிட்ட குடிகார இளவரசர் தீபேந்திராவை மறக்க முடியுமா! மற்றபடி, எப்போதாவது. செய்தித்தாளின் ஏதாவது ஓர் மூலையில், 'மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தாக்குதல்" என்கிற நாலுவரிச் செய்தியில் மட்டுமே இடம் பிடிக்கும் நேபாளம்...இந்தியாவின் தோளில் உட்கார்ந்திருக்கும் ஒரு குட்டி தேசம்.

சென்ற வாரம், நேபாள மன்னர் ஞானேந்திரா திடீரென்று சாமி வந்த மாதிரி அதிரடியாக ஏழெட்டு அமைச்சர்களைத் தூக்கிக் கடாசியிருக்கிறார்.

**நேபாளத்தின் மிகத் தொன்மையான, அதிக மக்கள் செல்வாக்குப் பெற்ற கட்சியான நேபாளி காங்கிரஸ் கட்சி, இது சுத்தப் பைத்தியக்காரத்தனமான நடவடிக்கை என்று கருத்து சொல்லியிருக்கிறது. நேபாள கம்யூனிஸ்ட் கட்சி, இது மக்கள் விரோத செயல் என்று கம்யூனிஸ்ட்களுக்கே உரிய ஸ்டைலில் விமர்சித்திருக்கிறது.**

ரணகளப்பட்டுக் கிடக்கிறது நேபாளம். எழில் கொஞ்சும் தேசம் என்று ஏதாவது ஃபிலிம் டிவிஷன் படம் பார்த்து ஏமாறாதீர்கள். இன்றைய திகதியில் இராக்குக்கு நிகராக வைத்துக் கவலைப்பட


மனைவியுடன் ஞானேந்திரா...

வேண்டிய சங்கதிகள் அங்கே நடந்துவருகின்றன.

கி.மு.முதல் நூற்றாண்டிலிருந்து நேபாளத்துக்குத் திட்டவட்டமான சரித்திரம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். செங்கோல் காலத்திலிருந்து கொடுங்கோல் காலம் வழியே, மனிஷா கொய்ராலாவின் தாத்தா பி.பி. கொய்ராலா பிரதம மந்திரியாக இருந்த காலமும் தாண்டி இன்றுவரை எத்தனையோ விஷயங்கள் அங்கே மாறியிருந்தாலும், மாறாத ஒன்றாக இப்போதும் இருப்பது மன்னர் ஆட்சி.

பார்லிமெண்ட் என்று ஒன்று இருக்கும். எப்போதாவது தேர்தல்கூட நடக்கும். சுறுசுறுப்பாக யாராவது ஒரு பிரதம மந்திரி தலைமையில் பத்து இருபது அமைச்சர்கள் களமிறங்குவார்கள். கொஞ்ச நாள்தான். மன்னருக்கு எப்போது மூட் அவுட் ஆகிறதோ, அப்போது முழு பார்லிமெண்ட்டும் அவுட்!

மன்னரை யாரும் எதிர்க்கேள்வி கேட்க முடியாது. நவீன உலகில் சிரச்சேதம் செய்துவிட மாட்டார்கள் என்றபோதிலும், உடனடியாகப் பிடித்து உள்ளே தள்ளிவிடும் சாத்தியங்கள் அநேகம். (நடந்திருக்கிறது! எதிர்த்துக் கேள்வி கேட்ட ஒரு பிரதமரையே ஜெயிலில் தள்ளிவிட்டார் மகாராஜா.)

2001ஆம் ஆண்டு ஜுன் மாதம், அந்த உலகப் பிரசித்தி பெற்ற மன்னர் குடும்பப் படுகொலைச் சம்பவம் நடந்த பிறகு இறந்த மன்னரின் சகோதரர் ஞானேந்திரா (கொலைச் சம்பவத்தில் தப்பித்த ஒரே அரச குடும்பத்துப் பிரஜை.) நேபாள மன்னராக முடி சூட்டிக்கொண்டார்.

கிட்டத்தட்ட அதே சமயத்தில்தான், நேபாள மாவோயிஸ்ட்டுகள் மக்கள் யுத்தம் என்கிற பெயரில் தங்களது கொடூரத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தத் தொடங்கினார்கள். நூற்றாண்டுக் கணக்கில் மன்னராட்சி முறை தொடர்வதும், மன்னர் வீட்டு கன்னுக்குட்டிக்கு எல்லாம் கும்பிடு போடவேண்டியிருக்கிறதே என்று கடுப்பாகியும் தான் அவர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்.

இதர போராளி இயக்கங்களும் நேபாள மாவோயிஸ்ட்டுகளுக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றுதான். உலகிலேயே இவர்கள் மட்டும்தான் கண்மண் தெரியாமல் தாக்குபவர்கள். திட்டம் கிடையாது. முன் தீர்மானங்கள் இருக்காது. நினைத்த கணத்தில் தாக்குவார்கள். அடி, வெட்டு, குத்து, கொல்லு, ஆளைக் கடத்து, மிரட்டிப் பார், பணியவில்லை என்றால், தலையைச் சீவி சாலையில் வீசு! இதுதான் அவர்களின் வழிமுறை. கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் ஆயிரக்கணக்கானவர்களை இந்த மாவோயிஸ்ட்டுகள் கொன்று இருக்கிறார்கள். இத்தனைக்கும் 2001ஆம் ஆண்டு ஒருமுறை, 2003இல் ஒரு முறை போர் நிறுத்தம் வேறு செய்திருக்கிறார்கள்.

இந்த மாவோயிஸ்ட்டுக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஞானேந்திரா ஒரு முறை பிரதமரை மாற்றிப் பார்த்தார். லோகேந்திர பகதூர் சந்த் என்பவரை 2003ஆம் ஆண்டு மே மாதவாக்கில் ராஜினாமா செய்யச் சொல்லிவிட்டு, சூர்ய பகதூர் தாபா என்பவரை பிரதமராக்கி, பேச்சுவார்த்தைகளுக்கு அனுப்பிவைத்தார். கழுத்தில் மாலை போட்ட காளியாத்தா கோயில் ஆடு மாதிரி அவரும் நாலைந்து முறை பயந்தபடி போய்ப் பேசிப் பார்த்தார். பலனில்லை.

மாவோயிஸ்ட்டுகளைப் பொறுத்தவரை சமரசம் என்பதற்கு ஒரே அர்த்தம்தான். மன்னராட்சி ஒழிய வேண்டும். மக்களாட்சி மலர வேண்டும். அவர்கள் பாஷையில் மக்களாட்சி என்பது, தீவிர இடதுசாரி சர்வாதிகாரம் என்பதையெல்லாம் இங்கே அநாவசியத்துக்கு ஞாபகப்படுத்திப் பார்க்கக் கூடாது.

ஒவ்வொரு முறை பேச்சுவார்த்தை முறியும்போது மாவோயிஸ்ட்டுகள் மிகக் கடுமையான தாக்குதலை மேற்கொள்வது வழக்கம்.


மன்னர் பிரேந்திராவின் குடும்பம்

குறைந்தது நூறு பேரையாவது போட்டுத்தள்ளாமல் அவர்களது ரத்தவெறி அடங்காது.

சூர்ய பகதூர் தாபா தாக்குப்பிடிக்க முடியாமல் வீட்டுக்குப் போக, ஏற்கனவே கொய்ராலாவுக்குப் பிறகு கொஞ்ச நாள் பிரதமராக இருந்த ஷேர் பகதூர் தூபா என்பவரை மீண்டும் அழைத்து வந்து பிரதமராக்கி, பேச்சுவார்த்தைகளைத் தொடரச் சொன்னார் ஞானேந்திரா. இது நடந்தது ஜுன் 2004இல்.

ம்ஹும் அவராலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. என்னமோ உப்புப்பெறாத ஊழல் காரணம் சொல்லி தான் நியமித்த பிரதமரைத் தானே கைது செய்து உள்ளே தள்ளிவிட்டார் ஞானேந்திரா. பொறுத்தது போதும் பொங்கி எழு என்று


மாவோயிஸ்ட் தீவிரவாதிகள்

பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, அத்தனை அமைச்சர்களையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, ஜனநாயகமாவது, மண்ணாங்கட்டியாவது என்று சொல்லிவிட்டார்.

தனக்கு வேண்டப்பட்ட ஒரு சிலரை மட்டும் அசிஸ்டென்ட்டுகளாக வைத்துக்கொண்டு, ஒரு பிரைவேட் லிமிடெட் கம்பெனியின் மேனேஜிங் டைரக்டர் போல நேபாளத்தை ஆளத் தொடங்கிவிட்டார். (இது நடந்தது, பெப்ரவரி 2005இல்.) இந்த அசிஸ்டென்ட் அமைச்சர்கள் மீதும் நம்பிக்கை இழந்துதான், இப்போது பலபேரைத் தூக்கியடித்திருக்கிறார். நிலைமை கொஞ்சம் கவலைக்கிடம். ஒரேயடியாக வீட்டுக்கு அனுப்பினால்கூடப் பரவாயில்லை. சிலருக்கு இலாகா மாற்றம், சிலருக்கு பதவிக் குறைப்பு, சிலருக்கு தண்டனை, சிலருக்கு கால்கடுதாசி என்று வெரைட்டியாக விளையாடி இருக்கிறார் மன்னர்.

தன் மீது மற்றவர்களுக்கு ஒருவித அச்சம் எப்போதும் இருந்துகொண்டே இருக்க வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருக்கலாம். ஆனால், கொதித்துப் போய்விட்டார்கள் நேபாள அரசியல்வாதிகள்.


காட்மாண்டில் தாக்குதலின் போது

நேபாளத்தின் மிகத் தொன்மையான, அதிக மக்கள் செல்வாக்குப் பெற்ற கட்சியான 'நேபாளி காங்கிரஸ் கட்சி', இது சுத்த பைத்தியக்காரத்தனமான நடவடிக்கை என்று கருத்து சொல்லியிருக்கிறது. நேபாள கம்யூனிஸ்ட் கட்சி, இது மக்கள் விரோத செயல் என்று கம்யூனிஸ்ட்களுக்கே உரிய ஸ்டைலில் விமர்சித்திருக்கிறது. தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட இதர கட்சிகள் அனைத்துமே கடுமையாகத் திட்டி சாபமிட்டிருக்கும் இந்தச் சம்பவம் பற்றி ஞானேந்திரா கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளவே இல்லை.

"தேசத்தின் ஒரே பெரிய பிரச்சினை, தீவிரவாதம். அதனை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளின் தொடர்ச்சியே இது" என்று மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டுவிட்டு அந்தப்புரத்துக்குப் போய்விட்டார்.

அடிப்படையில் ஞானேந்திரா சர்வாதிகார மனோபாவம் கொண்டவர். முடியாட்சிப் பரம்பரையில் வந்தவர் என்பது மட்டுமல்ல, இதன் காரணம். உழக்கு சைஸ் தேசமான நேபாளத்தில் கிழக்கு மேற்காகவும் வடக்கு தெற்காகவும் பரவியிருக்கும் சுமார் ஐம்பது சதவிகித இந்த பிராமண இனத்தவர்களின் முழு ஆதரவும் எப்போதும் தனக்குத்தான் இருக்கும் என்று அவர் கருதுகிறார். பரிபூரண பாராளுமன்ற ஜனநாயகத்துக்கெல்லாம் பச்சைக்கொடி காட்டினால் நாட்டில் மன்னர் என்று ஒரு ஜென்மம் உயிர் வாழக்கூட விடமாட்டார்கள் என்று அவருக்குத் தெரியாதா என்ன?

ஏதாவது நெருக்கடி வந்தால், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற தேசங்களுடன் ஓரளவு சீரான நல்லுறவு பேணிவருவதன் மூலம், அவர்கள் உதவியுடன் தப்பித்துக்கொள்ளலாம் என்பது ஞானேந்திராவின் கணக்கு.

சந்தேகமில்லாமல் அவர் சர்வாதிகாரி.

-நன்றி - A.V.


## கடன் சுமையில் தவிக்கும் ஜக்ஸன்



சிறுவர்களுடன் செக்ஸ் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இவர் மீது அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில நீதிமன்றத்தில் நடந்த வழக்குகளில் இருந்து சமீபத்தில்தான் விடுவிக்கப்பட்டார். முன்னதாக நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் கூறும்போது ஜக்ஸன் தனது சொத்துக்களின் பேரில் ஏராளமான கடனை வாங்கிக் குவித்துள்ளதாக தெரிவித்தார்.

பீட்டில்ஸ் உள்ளிட்ட கலைஞர்களின் பாடல்கள் அடங்கிய இசை கேசட்டுகளை வெளியிடும் உரிமையை பெற ரூபாய் 960 கோடிக்கு மேல் அப்போது ஜக்ஸன் கடன் வாங்கி இருந்தார். இது உள்பட வேறு சில கடன்களும் அவருக்கு உள்ளதாக கூறப்படுகிறது. ஜக்ஸனுக்கு முதலில் கடன் வழங்கிய வங்கி ஜக்ஸன் சம்பந்தப்பட்ட உரிமைகளை வேறு ஒரு நிறுவனத்துக்கு விற்று விட்டது.

இப்போது கடனை திரும்ப செலுத்த தவறினால் ஜக்ஸன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும் நிலையில் இருக்கிறது வங்கி மற்றும் இதர நிறுவனங்கள். பாவம் பொப்பிசைப் பாடகர் வாழ்வில் இனி சோக கானங்கள் தானோ......



கரணமுந் தனுவும் நினைக்கெனத் தந்தேன்,
காளி நீ காத்தருள் செய்யே
மரணமும் அஞ்சேன்; நோய்களை அஞ்சேன்;
மாரவெம் பேயினை அஞ்சேன்.

**- சுப்பிரமணிய பாரதியார்**



# வாழ்க்கை வாழ்வதற்கே

லட்சுமணனுடைய பெற்றோர்கள் அவனுடைய பிள்ளைப்பருவத்திலேயே இறந்து விட்டனர். ஒரே மகனான லட்சுமணனை அவனது பெற்றோர்கள் மிகுந்த அன்புடன் வளர்த்து வந்தனர். வாழ்க்கையில் ஒரு போதும் லட்சுமணன் மீது துன்பத்தின் நிழல்கூட விழாமல் கண்ணுங்கருத்துமாய் வளர்த்ததால், அவனுக்கு துன்பம் என்றால் என்ன என்றே தெரியாமல் போய்விட்டது. சிறுவயதிலிருந்தே பெற்றோர்களை மிகவும் சார்ந்து வளர்ந்ததால், அவர்களது பிரிவினை லட்சுமணனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஊண், உறக்கம் துறந்து, எப்போதும் தன் பெற்றோர்கள் நினைவாகவே இருந்து வந்தான். பல நாட்களாகியும் அவன் அதே நிலைமையில் அனைவரும் நடந்ததை மறந்துவிட்டு, ஆக்கப்பூர்வமான விஷயங்களில் மனதைச் செலுத்தி எதிர்காலத்தைப் பற்றி நினைக்குமாறு அறிவுரை புகன்றனர். ஆனால் தன் வாழ்க்கையின் மீதே விரக்தி அடைந்திருந்த லட்சுமணன், யாருடைய அறிவுரையையும் பொருட்படுத்தாமல் தன் துயர நினைவுகளிலேயே எப்போதும் மூழ்கி இருந்தான். சில தீயவர்கள், அவனது நிலையைக் கண்டு, அவனை ஏமாற்றி அவன் செல்வத்தை அபகரிக்கும் வேலையில் ஈடுபட்டனர்.

இப்படியிருக்கையில் ஒருநாள், ராமதாஸ் என்ற பெரியவர் லட்சுமணனைப் பார்க்க வந்தார். தன்னை அவனது சிற்றப்பன் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட பின், ராமதாஸ் அவனுக்கு அறிவுரை வழங்க ஆரம்பித்தார். “லட்சுமணா, உன் மனநிலையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் நீ இந்த வீட்டிலேயே வசிக்கும் வரை, உன்னுடைய கடந்த கால நினைவுகள் உன்னை தொடர்ந்து கொண்டே இருக்கும். நீ என்னுடைய கிராமமான ராம் நகருக்கு வந்து விடு. அங்கு ஒரு பெரிய வீடு விற்பனைக்கு உள்ளது. உன்னிடமுள்ள பணத்தை எல்லாம் திரட்டியெடுத்துக் கொண்டு வா. எனது கிராமத்தில் அந்த வீட்டை உனக்கு சொந்தமாக்கிக் கொண்டு அந்த வீட்டில் வசிக்கத் தொடங்கு. புதிய இடம், புதிய சூழ்நிலை உனது மனதை திசை திருப்பும். உன் வாழ்க்கையில் புதிய பகுதியைத் துவக்கு,” என்றார்.

லட்சுமணனுக்கு அவர் கூறியது சரியெத் தோன்றவே, கையில் புது வீடு வாங்க தன்னிடமுள்ள பணத்தை எல்லாம் எடுத்துக் கொண்டு அவருடன் ராம்நகர் நோக்கிப் புறப்பட்டான். செல்லும் வழியில் சற்றும் எதிர்பாரா வண்ணம் சில வழிப்பறி கொள்ளைக்காரர்கள் இருவரையும் வழி மறித்து இருக்கிற பணத்தை எல்லாம் கவர்ந்து கொண்டு சென்றுவிட்டனர். தனது தலைவிதியை நொந்து கொண்ட லட்சுமணனைத் தேற்றி, ராமதாஸ் மீண்டும் லட்சுமணனது கிராமத்தை அடைந்து அவனது சொந்த வீட்டிலேயே



விட்டுவிட்டார். ராமதாஸ் வருத்தத்தில் மூழ்கி இருந்த லட்சுமணனை நோக்கி, “லட்சுமணா! பணம் களவு போனதைப் பற்றி கவலைப்படாதே. அதை மீட்க முயற்சி செய்வோம். உன்னிடமுள்ள பணம் எல்லாம் இழந்துவிட்டாய்.

இப்போது உனக்கிருக்கும் ஒரே சொத்து இந்த வீடுதான். இதை விற்று அதில் வரும் பணத்தைக் கொண்டு காலம் கழிப்பாயா?” என்று வினவினர்.

“ஐயோ, இதை விற்று விட்டால், பிறகு நான் எங்கு வசிக்கமுடியும்?” என்றான் லட்சுமணன்.

“அப்போது எஞ்சியுள்ள காலத்தை எவ்வாறு கழிப்பாய்? என்ன தான் வழி?” என்று ராமதாஸ் வினவ, “வேறு வழியில்லை. நான் இனி மேலும் சும்மா உட்கார்ந்து பழைய நினைவுகளிலேயே மூழ்கியிருக்க முடியாது. நான் வேலை செய்துதான் பிழைக்க வேண்டும்” என்றான் லட்சுமணன்.

## பாப்பா முரசு சிறுகதை

“அப்படி வா, வழிக்கு” என்று மனதிற்குள் மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்ட ராமதாஸ், “நான் உனக்கு என் செலவில் உனது கிராமத்திலேயே கொஞ்சம் நிலம் வாங்கித் தருகிறேன். நானும் உன்னுடன் இருக்கிறேன். இருவரும் சேர்ந்து விவசாயம் செய்வோம்” என்றார். ராமதாஸ் சிலநாட்களிலேயே பணத்துடன் வந்து லட்சுமணனுடன் சென்று கிராமப் பஞ்சாயத்துத் தலைவரின் உதவியுடன், லட்சுமணனது கிராமத்தின் எல்லையில் கொஞ்சம் நிலம் வாங்கி அவனுக்கு அதை அளித்தார். அந்த நிலத்தை உழுது பயிரிடுவதில் லட்சுமணனுக்கு மிகவும் உதவி செய்தார். இருவரும் சேர்ந்து தனக்கு வேண்டிய உணவை தானே சமைத்துக் கொண்டு, உண்டு உறங்கி ஒரே வீட்டில் இருந்தனர். ஒருநாள் பஞ்சாயத்துத் தலைவரின் பதினாறு வயது நிரம்பிய செல்லப் பெண்ணான கௌரி, லட்சுமணன் வீட்டுக்கு வந்தாள். “அடடா, சமையல் வேலையை ஆண்களாகிய நீங்கள் ஏன் செய்ய வேண்டும்? எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணை உங்களுக்கு சமைப்பதற்காக அனுப்புகிறேன். நீங்கள் சிரமப்பட வேண்டாம்.” என்றாள். அன்றிலிருந்து ஒரு சமையற்காரி சமைத்து வைக்க, லட்சுமணனும் ராமதாஸும் வயிராற சாப்பிட்டனர்.

இப்படியாக ஆறு மாதங்கள் கழிந்தன. வயலில் அவர்கள் உழைத்த உழைப்பிற்கு நல்ல பலன் கிடைத்தது. லட்சுமணன் இதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான். அப்போது ராமதாஸ் சொன்னார், “லட்சுமணா! முன்பு எப்படி இருந்தாய்? இப்போது எப்படி உள்ளாய்? உன்னிடமுள்ள செல்வத்தை இழந்து, இனி உழைத்துத்தான் பிழைக்க வேண்டும் என்ற நிலை வந்தவுடன் நீ பழைய நினைவுகளைக் களைந்துவிட்டு உன் கவனத்தையெல்லாம் விவசாயத்தின் மீது திருப்பினாய். உன் பெற்றோரை நினைத்து வருந்தி வீணாக நேரம் கழிக்கவில்லை. தீயவர்களுடன் சேர்ந்து உன் செல்வத்தை வீணாக்கவில்லை. மாறாக செய்யும் தொழில் மீதே உன் கவனம் எல்லாம் இருந்தது.”

“ஆமாம் சிற்றப்பா, நீங்கள் சொல்வது உண்மை.”

“லட்சுமணா, இதுதான் வாழ்க்கை என்பது. உழைக்காமலே வயிறு நிரம்ப உண்டு வாழ்ந்தால், மனம் வீணான சிந்தனைகளிலேயே உழன்று கொண்டிருக்கும். இதனால் உனது நிம்மதி, நேரம், ஆரோக்கியம் எல்லாமே வீணாகிறது. ஆகையால் மனிதன் எப்போதும் ஏதாவது வேலையில் ஈடுபட்டு தனது உடலையும், மனதையும் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். இப்படியிருந்தால் அவனுக்கும் நன்மை, அவனைச்சார்ந்துள்ள சமூகத்துக்கும் நன்மை உண்டாகும்.” என்றார்.

“சிற்றப்பா! நீங்கள் என் கண்களைத் திறந்து எனக்கு புது வாழ்வு கொடுத்திருக்கிறீர்கள்,” என்று லட்சுமணண் நன்றியுடன் கை கூப்பினான்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 04.01.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 626**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 624

**பரிசுக்குரியவர்:**
**எம்.எஸ்.ஹஸ்மி,**
**312, நாச்சிக்குடா, சீனக்குடா, திருகோணமலை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | தினேஜினி, 57/2, டபிள்யூ.ஏ. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை. |
| எம்.பாத்திமா பஸ்மினா, தி/அல் அஸ்ஹர் மு.ம.வி., வெள்ளைமணல். | யோகராசா சிவாஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| எஸ்.பாஸ்கரன், தாழ்வுபாடு வீதி, புனித தோமையார் ஒழுங்கை, எமில்நகர், மன்னார். | ஆர்.நிவேதிகா, சந்தை சுற்றுவட்ட வீதி, வவுனியா. |
| டி.டிரோனா, 70C, பிரதான வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு. | ஏ.எச். அன்வருல் சாதாத், 205, காதியார் வீதி, ஏறாவூர் - 06. |
| எம்.ரி. பாத்திமா றுஸ்தா, 4/1, பிஸ்கால் வீதி, அக்கரைப்பற்று 02. | வயி.ஜோயல், நவஜனபதய, ருவன்எலிய, நுவரெலியா. |


# ஆத்திசூடி

## தேசத்தோடு ஒத்து வாழ்!

நீ நாட்டு மக்களோடு இணைந்து ஒற்றுமையாக வாழ்.

எஸ் நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# ஆடும் மயிலே



ஆடும் மயிலே
இங்கேவா
ஆடக் கற்றுத்
தந்தவர்ஆர்
கூடும் தோகை
விரிக்கின்றாய்
கொள்ளை
அழகுக் கண்களடி.

மேகம் கறுத்து வரும்போது
மோக நடனம் ஆடுகிறாய்
மோகம் கொண்டேன் நானாட
முற்றும் நீயே சொல்லித்தா.

முருகப் பெருமான் உனதழகில்
முற்றும் மோகம் கொண்டன்றோ
தெரியக் கொண்டான் வாகனமாய்
சிறப்புப் பெற்றாய் நீவாழி.

# அதிசய உலகம்

## காட்டுத் தீ போல் தோன்றும் மலர்கள்




விந்திய மலைச்சாரலில் ‘குட்டு முருக்கு’ என்ற மரங்கள் காணப்படுகின்றன. இவை வசந்த காலத்தில் பிரகாசமான ஆரெஞ்சு நிறத்தில் பூக்கின்றன. அடர்ந்த மரங்களுக்கு இடையில் ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான பூக்களைக் காணும்போது, திடீரென ஏதோ தீப்பிடித்து எரிவது போன்ற பிரமையை ஏற்படுத்துகின்றன. இராமபிரான் கூட இந்தப் பூக்கள் கூட்டத்தைக் கண்டு காட்டுத்தீயோ என பிரமித்து போனாராம் என்று இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இந்தப் பூக்களுக்கு காட்டுத் தீப்பூக்கள் என்ற பெயரும் உண்டு. இந்த மலர்களைப் பற்றி வேதத்தில் கூட குறிப்பிடப்பட்டுள்ளது.

# உங்கள் பொது அறிவு எப்படி?

1. இலங்கையில் களிமண் செம்மைப்படுத்தும் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்? **பொறலஸ்கமுவ.**
2. இலங்கையில் கைத்தொழில் தாபன கூட்டுத்தொகுதி அமைந்துள்ள இடம் எது? **எக்கல, அச்சுவேலி.**
3. இலங்கை ரயர் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்? **களனி.**
4. இலங்கை சப்பாத்து தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது? **மட்டக்குளி.**
5. இலங்கை மா அரைக்கும் ஆலை எங்குள்ளது? **முகத்துவாரம்.**
6. இலங்கை எண்ணெய், கொழுப்பு ஆலை எங்குள்ளது? **சீதுவை.**
7. இலங்கை கண்ணாடித் தொழிற்சாலை எங்குள்ளது? **நாத்தாண்டியா, கந்தனை.**
8. இலங்கைப் புகையிரதப் பகுதியின் வேலைக்கூடம் அமைந்துள்ள இடம் எது? **இரத்மலானை.**
9. இலங்கை உருக்குத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்? **ஹோமகம.**
10. பொதுச்சுகாதார பரிசோதகர்களை பயிற்றும் நிலையம் எங்குள்ளது? **களுத்துறை.**

# தகவல் பெட்டி



## இரட்டை இரசிகர்கள்



**எமது** நாட்டைப் போலவே இந்தியர்களும் கிரிக்கெட்டில் ஊறிப் போயுள்ளார்கள். இந்தச் சின்னஞ்சிறு விறிசிகளான இரட்டையரைக் காணக் கிடைத்தது அண்மையில் இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியின் போதே.

## உண்ணவா? உடுத்தவா?





**இந்த** ஆடையை முதலில் கண்டவுடன் இம்மொடல் மங்கைக்குச் சந்தேகம் எழுந்திருக்கும் இது உண்ணவா? உடுத்தவாவென்று. ஏனெனில், இவ்வாடை முழுவதையும் சொக்லேட்டினாலேயே தயாரித்துள்ளார்கள். மங்கையின் மயக்கம் நியாயந்தான். பாரிஸில் நடைபெற்ற 2005ஆம் வருட சொக்லேட் சந்தைக்காகவே இவ்வாடை பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. சொக்லேட் கரையாமல் இருந்தால் சரிதான். இல்லாவிட்டால் மொடலின் பாடு அம்போதான்.

## இப்படியும் முடியுமா?

**இக்** கதை சாப்பாட்டு விஷயத்தில் ஆண்களைப் பின்னுக்குத் தள்ளி முன்னேறிய பெண் ஒருவரைப் பற்றியது. அவரது பெயர் சோனியா தோமஸ். இவர் அண்மையில் அமெரிக்காவில் 12 வினாடிகளில் 3 இறாத்தல், 3.1 அவுன்ஸ் நிறையுடைய வான் கோழி இறைச்சியை வயிற்றுக்குள் தள்ளி வெற்றி வாகை சூடியது விசாலமான உடல் பருமன் உள்ள ஆண்களையும் ஓரங்கட்டி விட்டது. இவரைப் பார்த்தால் அப்படியா தெரிகிறது?

## தங்கக் கழிவறை




இது உண்மையான கழிவறையாக இருந்தாலும் முழுமனதுடன் கழிவறையாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், இது முழுதும் தங்கத்தினாலேயே உருவாக்கப் பட்டிருப்பதனாலாகும். இதற்காக 380 கிலோ கிராம் தங்கத்தையும் 6200 முத்துகளையும் மேலும் பெறுமதியான பல கற்களையும் பயன்படுத்தி வடிவமைத் திருக்கிறார்கள். உலகிலேயே மிகவும் விலையுயர்ந்த கழிவறைகளில் ஒன்றாக இதுவும் கருதப்படுகிறது.


## வலையில் சிக்கிய சிலந்தி

யாருக்கும் இலகுவில் பிடிபடாத மனிதராகவே 'ஸ்பைடர் மேன்' கருதப்படுகிறார். அப்படிப்பட்ட ஸ்பைடர் மேனை அமெரிக்கப் பொலிஸ் அமுக்கிப் பிடித்து விலங்கிட்டுள்ளது.

இந்த ஸ்பைடர் மேன் பிரான்சுக்காரர். எவ்வித ஆதாரமும் இன்றி உயர்ந்த கட்டடங்களில் தாவி ஏறுவதனாலேயே இவருக்கு இப் புனைப் பெயர் ஏற்பட்டுள்ளது. அண்மையில் ஹூஸ்டனில் 678 அடி உயரமான கட்டடமொன்றின் வெளிப்புறத்தில் தாவி ஏறிக்கொண்டிருக்கும் போதே அமெரிக்கப் பொலிஸார் இவரைக் கைது செய்தனர். கைது செய்ததன் காரணம் அனுமதியின்றி ஆபத்தான காரியத்தில் ஈடுபட்டதாகும்.



## முட்டைப் பொரியல்



பார்த்த பார்வைக்கு பிரமாண்ட முட்டைப் பொரியல் ஒன்றாகத் தெரிகிறதா? இல்லவே இல்லை. இது ஓர் அபூர்வ கலைப் படைப்பாகும். அண்மையில் அவுஸ்திரேலிய சிட்னி நகரத்தின் பிரசித்தி பெற்ற 'டெமராமா பீச்' கடற்கரையில் நடைபெற்ற கடல் கண்காட்சி ஒன்றுக்காக நியூஸிலாந்துக்காரர் ஒருவரால் உருவாக்கப்பட்ட அழகிய கலைப் படைப்பாகும் இது.

# மீண்டும் தேவயானி

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாகத், திகழ்ந்த தேவயானி, சரத்குமாருடன் சூர்யவம்சம் படத்தில் 'அடடா பத்திக்குச்சு நெருப்பு' என்று குத்தாட்டம் போட்டதற்குப் பிறகு ரொம்பவே பிஸியானார் பிறகு கல்யாண யோகம் வந்ததால் தேவயானிக்கு மெல்ல மெல்ல சினிமா வாய்ப்பு சரியத் தொடங்கியது.

பிழைப்பு ஓட்டணுமே என்று சின்னத் திரை பக்கம் ஒதுங்கிய அம்மணிக்குத் கோலங்கள் தொடர் கை கொடுத்ததில் ஏகப்பட்ட மகிழ்ச்சி. அதில் கணிசமான ரொக்கத்தைச் சேர்த்துக் கொண்ட தேவயானி, நல்லபடியாக குடும்பத்தையும் காப்பாற்ற ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் மாமியார் பிரச்சினையையும் தீர்த்து வைத்து நல்ல மருமகள் என்று பெயரெடுத்த தேவயானி ஒரு பெண் குழந்தையும் பெற்றெடுத்துவிட்டார்.

நமக்கு இனிமே கதாநாயகி வாய்ப்பெல்லாம் கிடைக்காது அண்ணி வேடம், அக்கா வேடம், நியூ படத்தில் எஸ்.ஜே.சூர்யா அம்மாவாக நடித்தது போல் தான் நடிக்கக் கூப்பிடுவார்கள் என்று நினைத்திருந்த தேவயானிக்கு, பெண் குழந்தை பிறந்த நேரமோ என்னமோ அதிர்ஷ்டம் தேடி வந்து வாயிற் கதவைத் தட்டியிருக்கிறது.

என்.எஸ்.பிக்சர்ஸ் சார்பில் தயாரிக்கும் 'செந்தாழம் பூவே' என்ற படத்தில் நாயகியாக புக்காகியுள்ளார் தேவயானி.

முக்கியமான கதாபாத்திரங்களில் ரமேஷ் தலைவாசல் விஜய், ப்ரீத்தி வர்மா, நடிக்கின்றனர்.

லிவிங்ஸ்டனுக்கு ஜோடியாக

கண்ணா, பொன்னம்பலம், ராஜஸ்ரீ, அபிநயஸ்ரீ ஆகியோர்







புனிதமான மருத்துவத் தொழிலைச் செய்பவர்கள், அந்தத் தொழிலை முறை கேடாகப் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய ஆபத்துகளை மையமாக வைத்து 'செந்தாழம்பூவே' படம் உருவாகிறது. வழக்கம் போல அபிநயஸ்ரீ கவர்ச்சியில் இதில் கலக்க உள்ளாராம்.

தொல்காப்பியன், பா.விஜய் பாடல்களுக்கு ஸ்ரீவிமல் ராஜா இசையமைத்துள்ளார். அமெரிக்காவில் கம்பியூட்டர் என்ஜினியராகப் பணிபுரியும் எம்.எஸ்.இளங்கோவன் தயாரிக்கும் இந்தப் படத்திற்கு கதை, திரைக்கதை எழுதி இயக்குகிறார் ஏ.சி.தீபராஜ்.

## குத்து கும்மாங்குத்தாக மாறுமா? விரைவில்!

குத்து படத்தில் கும்மாளம் போட்ட நாயகி, தொடர்ந்து தமிழ்ப் படங்களில் நடிக்க மாட்டேன் என்று பேட்டி கொடுத்துவிட்டு, கர்நாடகாவுக்குப் போய் தமிழர்களுக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டாராம். நீண்ட இடைவெளிக்குப் பின் தற்போது, 'காக்கி' படத்தில் அம்மணி தலைகாட்டுகிறாராம். தமிழ் ஆர்வலர்கள் கண்ணை மூடிக்கொண்டு இல்லை.

## சோனி போனியாகுமா! சந்தேகம் தான்!

சில காலம் வட பக்கம் அடித்துக்கொண்டிருந்த வானவில் காலனி டைரக்டர் காத்து இப்போது நம்ம ஊர் நட்பு நடிகையிடம் வீசி வருகிறது. என்ன செய்தி என்று நட்பின் தந்தை கேட்க, அதெல்லாம் ஒண்ணுமில்லே என்று வாவை அள்ளி கொடுக்கிறார். "டைரக்டரோட பேட்டை படத்தில் எனக்கு சூப்பர் கேரக்டர். நான் தேசிய விருது வாங்கியே தீருவேன். ஒரு இன்வால்வ்மெண்ட்டுக்காக பழக்கத்தில் இருக்கேன். மத்தபடி எதுவுமில்லை" என சமாதானப்படுத்தினாராம் நட்பு நடிகை! இந்த அப்பாவுக்கு அல் இந்தப் படம் மூலம் அவரோட நல்ல பெற்றோரைச் நிலை நீடித்தால் சந்தேகம் தான்.




## சினிவிசிட்

## கிளாமர் தங்கச்சி

சிம்புவின் முழு கஸ்டடியில் வந்துள்ள 'சரவணா' படத்தில் சிம்புவின் தலையீட்டின் பேரில் கிளாமர் காட்சிகளை கூடுதலாக்கியுள்ளனராம்.

துரையின் தயாரிப்பில், கே.எஸ்.ரவிக்குமாரின் இயக்கத்தில், சிம்பு, ஜோதிகா இணையில் உருவாகியுள்ள 'சரவணா' ரிலீஸுக்குத் தயாராகிவிட்டது.

சிம்பு வைத்த எக்குத்தப்பான செலவுகளால் மிரண்டு போன தயாரிப்பாளர் துரை, சரவணாவை சிம்புவிடமே விற்று விட்டார். இதனால் கடைசி நேரத்தில் கிளுகிளுப்பான காட்சிகளை சேர்த்துள்ளாராம் சிம்பு.

அதில் முக்கியமானது மேக்னா நாயுடுவும், அவரும் போட்டுள்ள குத்துப் பாட்டு. ஹீரோயின் ஜோதிகா என்பதாலும், முதல் படமான மன்மதனில், ஜோதிகாவுடன் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தாலும், 'சரவணாவில்' அடக்க ஒடுக்கமாக நடித்து வந்தார் சிம்பு.

இப்போது படம் தனது முழு கஸ்டடியில் வந்துள்ளதால், தனது டேஸ்ட்டுக்கு ஏற்ப சில காட்சிகளை இணைத்துள்ளாராம். மேக்னா நாயுடுவின் குத்துப் பாட்டு முதலில் படத்தில் இல்லையாம். ஆனால் சிம்புவின் வற்புறுத்தலால் அந்தக் குத்துப் பாட்டை இணைக்க கே.எஸ்.ரவிக்குமார் இசைவு தெரிவித்தாராம்.

அதேபோல தனது தங்கச்சி வேடத்தில் நடிக்கும் தாரிகாவையும், படு கிளாமராகக் காட்டியுள்ளாராம் சிம்பு. 'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' படத்தில் 'நாட்டுச் சரக்கு' நச்சுன்னு தான் இருக்கு என்று தனுஷுடன் கெட்ட ஆட்டம் போட்டவர் இந்த தாரிகா.

நிஷா என்ற இயற்பெயர் கொண்ட இவர், விபசார வழக்கில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு அபராதம் கட்டி வெளியே வந்தவர். அதன் பின்னர் தனது பெயரை தாரிகா என்று மாற்றிக்கொண்டு புதுக்கோட்டையிலிருந்து சரவணன் படத்தில் குத்துப் பாட்டுக்கு ஆடினார்.

படு கவர்ச்சி காட்டியும் சரிவரப் படங்கள் வராததால், டிவி தொடர்களுக்குத் தாவி விட்டார். இவர் ஏற்கனவே கன்னடப் படங்களில் (அம்மணிக்குச் சொந்த ஊரே பெங்களூருதான்!) கிளாமர் ரோல்களில் நடித்து கன்னடர்களைக் குளிர்வித்தவர்.

## தயாரிப்பாளர் தலையில் துண்டு போட வைக்காதீர்கள்

காதல் கண்ட இசையமைப்பாளர், பலத்த எதிர்பார்ப்புகளுக்கிடையே தனது பெண் உதவியாளரைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறாரென்பது ஒரு பழைய செய்தி. இந்தப் பழைய செய்தியில் ஒரு புதிய கதை உண்டு. என்னவென்றால் இவர் டிஸ்கஷன் என்ற பெயரில் அடிக்கும் கூத்து தயாரிப்பாளர்களின் தலையில் துண்டைப் போட வைக்கிறது.

பாட்டு மற்றும் ரீ - ரிக்கார்டிங் செய்ய வரும் இசையமைப்பாளர், வேலைகளில் முழுக் கவனம் செலுத்தாமல் தனது எதிர்கால மனைவியுடன் டிஸ்கஷன் என்ற பெயரில் நாட்களை வீணடித்துக் கொண்டிருப்பதுதானாம்!

## தயாரிப்பாளருக்கு ஏற்பட்ட தலைவலி

கற்பு பற்றி வில்லங்கமாகப் பேட்டி கொடுத்து, விவகாரத்தில் மாட்டிக்கொண்ட நடிகையின் படமொன்று, வெளியாக இருந்த வேளையில் பிரச்சினை பூதாகரமானதையடுத்து, நாலைந்து விநியோகஸ்தர்கள் இந்த அம்மணி படமே வேண்டாமென்று ஓடிவிடுகிறார்களாம். இந்த அம்மணி கொடுத்த அறிக்கையினால் உருளுவது தயாரிப்பாளரின் தலை.

## "அந்த பையன் விளையாட்டுக்கு வேணாம்"

ஆபாசப் புகழ் இயக்குநரின் ஒவ்வொரு படத்தின் கதை விவாதத்திலும், லிட்டில் ஸ்டாரும் கலந்துகொள்வது வழக்கமாம். அந்த வகையில் இளைய தளபதி படத்தின் கதையை ரெடி செய்வதிலும் ஸ்டார் கலந்து கொள்ள, கடுப்பாகி விட்டாராம் இளைய தளபதி. இன்னும் நாலைந்து உதவி இயக்குநர்களை வேண்டுமானாலும் வைத்து விவாதம் செய்யுங்கள். அந்தப் பையனை ஆட்டத்தில் சேர்க்கக் கூடாது என்று ஸ்ட்ரிக்டாகச் சொன்னதை அரைமனதோடு ஏற்றுக் கொண்டாராம் இயக்குநர்.

## நீலாம்பரி கொடுக்கப்போகும் 'டேஞ்சர்'

துள்ளுவதோ இளமை நாயகிக்குத் தொடர்ந்து வாய்த்த வாய்ப்புகளெல்லாம் துக்கடாவாகவே இருந்ததாம். நாயகியின் திறமையை நன்கு புரிந்துகொண்ட நீலாம்பரி நடிகை, தன் கணவரிடம் சிபாரிசு செய்து, ஒரு தெலுங்குப் படத்தில் பிரமாதமான வாய்ப்பு வாங்கிக் கொடுத்துள்ளாராம். 'டேஞ்சர்' என்ற பெயர் கொண்ட அந்தப் படம் வெளியானால், பல நாயகிகளுக்கு ஆபத்து காத்திருக்கிறதாம்.

## 'இக்கரைக்கு அக்கரை இச்சை'

சென்னை அண்ணாசாலை மேம்பாலம் பக்கமுள்ள பூங்கா ஹோட்டலில்தான் தங்கியிருந்தார் நயனம். சமீபத்தில் அங்கு நடந்த ஆபாசக் கூத்தால் பொலிஸ் ரெய்டு பண்ண...தனது ஜாதகத்தையே தி.நகர் ஹோட்டல் ஒன்றிற்கு மாற்றிக் கொண்டு விட்டார்.

## அடி மனதில் ஆதங்கம் அரை மனதோடு : 'ஆயிஷா தாக்கர்'

சூப்பர் ஸ்டாரின் 'செவாலியே' படத்தில் நடிக்க 'ஐஸ்' நடிகை 'நோ' சொல்லி விட்டாராம். அதனால் வேறு வழியின்றி ஹிந்தி மற்றும் தெலுங்குப் படவுலகின் சூப்பர் மாடலான ஆயிஷா தாக்கர் என்ற நாயகியை ஒப்பந்தம் செய்து இருக்கிறார்களாம். சூப்பர் ஸ்டாரும் இதை அரை மனதோடு ஒப்புக்கொண்டிருக்கிறாராம்.






வாரமலர்
தினமுரசு

Calendar 2006

## January

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## February

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | | | | | |

## March

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## April

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## May

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## June

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

## July

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## August

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## September

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

## October

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## November

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

## December

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

*Bank / Public / Mercantile Holidays* — *Bank / Public Holidays* — *Poya Holidays*

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# தேன் கிண்ணம்



இம்முறை தேன்கிண்ணப் பகுதியை அலங்கரிப்பவை அனைத்துமே மகளிர் கவிஞர்களின் ஆக்கங்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## ஒளியேற்ற வா!

வெண்ணிலவே
நீ வேறெங்கோ
உலாவுவதனால்
என் இதய தேசமது
இருண்டு
கிடக்கிறது!

உனக்கென்று
நானும்
எனக்கென்றும்
நீயும்
விதியில்
எழுதப்பட்ட
பின்னும்
இன்னும் நீ
என்னை
விட்டு
விலகியே
செல்வது
வேதனையைத்
தருகிறது!

என்
இதயத்துக்குத்
தான்
ஈர்ப்புச் சக்தி
இல்லாமற் போய்விட்டதா
உன்னை என்னுள்ளே
இழுத்தெடுப்பதற்கு?

நீயங்கே என்ன
செய்கிறாய்?
தொலைவில்தானே
தலைமறைவாய்த்
திரிகிறாய்...
ஓ...வெண்ணிலாவே
இனியாவது
என் மனவானில்
உலாவ வா...
என் இதய தேசம்
ஒளி பெறட்டும்.

-வெலிகைநல்லாள்.

## மௌன பாஷை

பல சமயம்
மின்னலாய் ஒரு
பார்வை மட்டும்
உதிர்க்கிறாய்.... தினமும் நாம்
சங்கமிக்கும்
வளாகத்தினுள்
அடிக்கடி உன்னைப்
பார்க்கத் துடிக்குது
என் விழிகள்.

பேசிட முடியாதபடி
சூழ்நிலைகள்
சூழ்ச்சி செய்தாலும்
சதியை மீறிடத்
துடிக்கும் உந்தன்
மனம் அறிந்து
உள்ளூர ஆனந்தம்
எனக்குள்...பல பேர் எம்மைச்
சூழ்ந்திருந்த போதும்
நீயும் நானும் மட்டுமே
தனித்திருப்பதாய்
உணர்வு.
உன்னைப்
பார்த்துப் பேசிட
ஓராயிரம்
விடயம் இருக்கு - நீ
எதிரில் வந்தாலோ
மௌனமே
பாஷையாகிறது.



-நஸீஹா சம்சபாத், ஏத்தாலை.

## எல்லாம் உனக்காக

நான் கண்கள் மூடாமல்
உன்னுடன் கனவில்
வாழ்கிறேன்....
என் இறப்பில் கனவு
கலையும் விழிகளின் பார்வை
உன்னைப் பார்த்து அழுவதற்கு
மட்டுமா.....

சோகத்தை நெஞ்சில்
சுமந்து கொண்டு - என்
கண்ணீரை தலையணைக்கு
அர்ப்பணித்து விடுகிறேன்...
பிறப்பில் தொடங்கிய அழுகை
நீயின்றி இறக்கும் வரை
தொடரும்...
கல்லும் கரையும் என்பார்கள்
கல்லை விடக் கல்லானதா
உன் இதயம்....
உன்னையே சேரத் துடிக்கின்றது
இந்த ஜீவன்...
சாகும் வரை காத்திருப்பேன்
உனக்காக....

-சி.ஜெய்குமாரி, வத்தளை.

## முன்னேறி வா...!

தோழனே...!
மூட்டத்தின் உள்ளும்
மூடுபனியிலும் முடங்கியது
- போதும்
முன்னேறி வா..!

மனிதனே...!
மலையென மறைத்துள்ள
மடைமைகளை மதித்தது -
போதும்
மரபுகளை மதித்து
மதியினை வளர்க்க
வா....!

கவ்வாத்துக் காரனே..!
கட்டைகளில் தினமும்
கத்தியை தீட்டியது -
போதும்
புத்தியை தீட்ட
புத்தகம் தூக்க வா...!

சகோதரனே...!
சங்கம் வளர்ப்பதற்கு
சண்டையிட்டது - போதும்
சமுதாயத்தை முன்னேற்ற
சட்டம் படிக்க வா...!
சிந்தித்துச் செயல்படுங்கள்
முன்னேறும் - மலையகம்.

-கிருஷ்ணவேணி பெரியசாமி, நானுஓயா.

## நீயில்லை

அந்தி வேளையில் அடிவானில்
கதிரவன் மறைகின்ற பொழுதைத் தினமும்
பார்க்கையில் இரட்டிப்பு அழகாய்த் தோன்றுகிறது.
காரணம் - உன்னையும் சேர்த்துப் பார்ப்பதில்
இன்று ஏனோ அந்திப் பொழுது
அழகாய்த் தோன்றவில்லை.
காரணம் - நீயில்லை அங்கு.

-எம்.ஆர்.தேவி, அனலைதீவு - 05.

## காதலின் பிரிவு



மனதார நேசித்தேன்
மறக்கச் சொல்லி
விலகி விட்டாய்
மௌனமாய் அழுகின்றேன்.
உன் நினைவுதரும் வலி
கண்ணீரும் கரைய மறுக்கின்றது
தொலைந்து போன சந்தோசத்தை
தேடித் தந்த நீயே
முடிவில்லா துயரத்தைத்
தந்து விட்டாயே!

தூரவிருக்கும் உன்னை
மறக்க முடியவில்லை
உன் நினைவை தவிர்க்கவும்
முடியவில்லை
முதல் சந்திப்பில் உருவான காதல்
உலகம் முடியும் வரை
நிலைக்கும்.....



மலை உச்சியில் இருக்கும் நீ......
அடிவாரத்திலிருக்கும் நான்.....
உனக்காக காத்திருப்பேன்
காதலுக்காய் - அல்ல
உன் நட்புக்காக.

-எஸ்.தங்கோல், மன்னார்.

## நண்பர்கள்



எல்லைக் கோட்டுக்குள்
நட்பை நசுக்கி
புன்னகைத்துக் கொள்ளும்
புதுவித சினேகம்...!

வாழ்வின் அந்தம் வரை
வருகிற ஆரோக்கியமில்லை
என் நட்பிற்கு -

கபடத்தைப் பூசிப் பூசியே
ஓ(!) நாய்களாகி விட்டார்கள்
அவர்கள்!

அவர்களுக்கும்
இவர்களுக்கும்
இடையில்
ஏகாந்தத்தில் நான்.
இடைவேளை வாசகமாய்
"ஊருக்கு நேசிக்க
உத்தரவிட்டேன் - நான்
யாரை நேசித்தேன்?" என்று
என் பட்சி
வைரமுத்தாகிவிட்டது.


கடைசியில்
கபடத்தை பூசிப் பூசியே
அவர்களும்
இவர்களும்
ஓநாய்களாகி விட்டார்கள்!

-ஏ.எஸ்.ஷர்மிலா பேகம், அநுராதபுரம்.

## நீ அறிவாயா?

நினைவுகள் நிசப்தத்துடன்
நின்றிருந்த பொழுதிலும்
தடுமாறித் தட்டுப்பட்டுத்
தலை காட்டிவிடுகின்றன சில
சமயம்.

இதழ்கள் விரித்து என்
புன்னகைப் பூக்களை
பிரசவிக்கின்றதை,
மட்டுந்தானா நீ அறிவாய்?
இதயச் சுவர்களில் சுட்டுக்
கொத்தித்து
வழியும் என் கண்ணீர்
உன் கண்களுக்குப்
படவேயில்லையா?



-இரா.சுபாஷினி, இரஜரட்ட
பல்கலைக்கழகம்.

## காத்திருக்கின்றது....

நண்பனே!
நீ என் வாழ்க்கையோடு பயணம் செய்த
அந்தக் காலங்கள்.....
வசந்தங்கள் எல்லாம் வரவாக...
இன்பங்கள் எல்லாம் இணைந்து...
கண்ணீர் கூட கனிவாக...திகழ்ந்தது.
ஆனால்

காற்றுக் கூடக் கனமாக....
நிறங்கள் எல்லாம் வர்ணமற்று...
காலங்கள் எல்லாம் கனவாகி....
இன்பங்கள் கூட கண்ணீராகி...
போய்விட்டது -
இன்று, நீ இல்லாத இந்தப் பயணம்.

உனக்கு ஞாபகம் இருக்கின்றதா?
"எனது நண்பன் நீ" என்று நான்
சொல்லும் போதெல்லாம்....
"எனது நட்பு நீ" என்றாயே!!!

உனக்குப் பிறர்பொருளில் ஆசையில்லை
என்பதைப் புரிந்து கொண்டேன்
எனது நட்பை நீ விட்டுச்சென்ற போது....
நாம் நட்டமே
அந்த ரோஜாச் செடி
இன்னமும் காத்திருக்கின்றது
நமது நட்புக்காக.

-எம்.எஸ்.தமிழினி, நல்லூர்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

*புதிய சிந்தனைகள், அவற்றை முதலாக்கிய செயற்பாடுகள் காணும் வெற்றிகள் என்று ஒழுங்கமைத்து முன்னேறும் மனித சமுதாயத்தின், நீண்டு நெடுத்திடும் வாழ்வியற் கோட்பாட்டோடும், வரலாற்றோடும் முரண்பட்டு முட்டி மோதியும் உடன்பட்டு ஒட்டி உரசியும் உருவான சிந்தனைகளைக் கருவேற்றுப் பிரசவித்தவையே என கவிதைகள்.*

*இனமுரண்பாடுகளும், அதன் அடிப்படையில் தோன்றிய அரசியல் கள முரண்பாடுகளும் நிறைந்த தேசத்தில் பிறந்தவன் நான். சாதி சமய முரண்பாட்டுச் சாக்கடையில் கிடக்கும் சமுதாயத்துள் வளர்ந்தவன் நான். ஓடித் திரிந்த நிலம் பிரிந்து, கூடி வாழ்ந்த குலம் இழந்து, தேடி வந்த தேசத்திலும் பண்பாட்டு முரண்பாடுகளோடு வாழ்பவன் நான் என்று கூறும் கவிஞர் சஞ்சீவ்காந்தின் 'உராய்வு' எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து சில கவிதைகள்.*

### பெண்ணியப் பேச்சு

**பேச்சு 1**

பெண்தனை
கண்ணெனக்
கொள்வர்
மண்தனைப்
பெண்ணெனச்
சொல்வர்
நட்சத்திர வான் தன்
மதியென்பர்
உச்சத்தில் மீன் தான்
நீ என்பர்
விலங்கினை உடைத்து
எறிந்திடு
கண்ணீரை துடைத்துக்
களம்புகு
படிதாண்டி அடிகளை
வைத்திடு
சமதீச் சமுதாயக்
கோடிடு
சரிபாதி உரிமைக்குப்
பாடிடு
சீதனக் கத்தியின்
இரத்தக்கறை
காய்ந்திடு முன்னே
சாதனம் ஒன்றைக்
கண்டுபிடி
வேதனை நீங்கிட
வேங்கையைப் போலவே
சொல்லியடி
உந்தன் சொல்லிலடி
பாவிலே தவழும்
பொய்களிலை
சிலர் நாவிலே உமிழும்
எச்சிலை.

**பேச்சு 2**

பேச்சிலே சாட்டையாய்
வார்த்தையை
அடுக்குவார்
மூச்சிலே சாட்சியாய்
ஆதிக்கம் தொடக்குவார்
வீதியில் பண்ணொடு
தீபம் என்பார்
வீட்டிலே பெண்களை
தீட்டு என்பார்
கண்ணகியை சிலை
உருவில் வைத்தார்
பெண்கியை சிலை
மறைவில் வைத்தார்
கற்பினையே எழுத்தின்
கருவில் வைத்தார்
கற்பனையால் விழுத்தி
அடிமைப்படுத்தி
வைத்தார்
அடக்கம் என்றார்
அதில் அர்த்தம்
அடங்கிக் கிடக்கும்
என்றார்
அவளை முடங்கச்
செய்தார்.

**பேச்சு 3**

திரண்டணியாய்
தீட்டி வாளொடு
இருண்ட உலகின்
இருள் விலக்க
வேண்டும்.
பாரதி மீண்டும்
வர வேண்டும்
பாட்டுக் கவியில்
குரல் தர வேண்டும்
எத்தனை நாட்கள்
இப்படிச் சத்தமிடுவர்
இறுதியில் ஒரு
பாரதியைத்தானே
கேட்டார்கள்
பெண்கவியை
பொன்மொழியால்
பெண்விடுதலை
பாடச்சொன்னார்களா?
நேற்று மறைந்தவர்
பெயர்களைச் சொல்லியே
நேரத்தைக் கழித்திடுவர்
மாற்றம் நிறைந்தவர்
செயல்களைச் செய்யவே
பாரத்தைக் கழிப்பதெப்போ?

**பேச்சு 4**

பெண் விடுதலை பேசினால்
போதுமா?
என் விடுதலை எனக்கன்றோ
என்கரமும் அதற்கன்றோ
கணக்கெடுக்க நேரமிதோ
கால்நடக்கத் தூரமிதோ
துள்ளித் திரிந்திடும்போது
உங்கள் விழிகளில்
வீரம் மோதும்
குனிந்த தலையினிப்
போதும்
நிமிர்ந்து பார்
அதுதானும்
அடக்கம் என்பது
மனிதப் பண்பு
அடங்கிக் கிடந்தால்
இனிவம்பு
ஆதிக்கம் அதை
அடக்கம் எழும்பு
அதுவே மாண்பு!
விடிவதை தொடவேதே
விடுதலை
பெண்கள் முடிவெது?
முடிவதை தொடுவதா
முடியாது அழுவதா?

முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்

## துடிப்பின் துளி

கொதித்திடும் எரிமலை
பதித்திடும் நெருப்பினில்
பாதைகள் கட்டிடுவோம்

சபித்திடும் முனிவர்கள்
விதித்திடும் விதிகளை
மூலையில் போட்டிடுவோம்

மூடத்தை நம்பி
வாழ்ந்திடும் மனிதரின்
மூளையைச் செதுக்கிடுவோம்

வேடத்தைப் போட்டு
ஏமாற்றும் மனிதரின்
வஞ்சனை ஒதுக்கிடுவோம்

வெடித்திடும் பாறைகள்
நடுவினிலே எம்
சரித்திரம் எழுதிடுவோம்.

சரித்திரம் எழுதிய
பெரியவர் நினைவினை
நாளும் தொழுதிடுவோம்

எடுத்திடும் விடயத்தை
முடித்திடும் வரையினில்
உறக்கத்தை மறந்திடுவோம்

தடுத்திடும் தடைகளாய்
உடைமைகள் இருந்திடில்
அதனையும் துறந்திடுவோம்

இனிவரும் கணத்தினில்
இனியவை நடத்திட
இருளினைப் போக்கிடுவோம்

துணிவுறும் மனங்களை
துயர்களைத் தொலைத்திட
மண்ணில் ஆக்கிடுவோம்.

## உலகம் தின்போம்

விழிகள் திறந்து
கனவு காண்
விரல்கள் அசைத்து
கவிதை சொல்
மொழிகள் மறந்து
காதல் செய்
முத்தம் இசைத்து
மோகம் கொள்
நிகழ்வுக ளூட்டிக்
கலை வளர்
நிதர்சனங்கள்
சுற்றிச் சூழல்

தொழுதல் விலக்கி
தொண்டு செய்
தொகை
தொகையாய்
ஒன்று திரள்

கிழட்டுக் கிரகம்
விட்டு நகர்
கொழுந்து கற்கள்
தாண்டி நட


கிழிந்த சிறகுகள்
வெட்டி எறி

கொள்கைக் கவசம்
பூட்டி பற


விழுந்து விழுந்து
பட்டுத் தெளி
பொறி பொறியாய்
பட்டுத் தெறி

திரைக் அகற்றி
முன் தெரி
திமிறத் திமிற
முன் நகர்.


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : ரி.ஆனந்தன்.
வயது : 24
முகவரி : P.O.Box 32017,
Doha - Qatar.
பொழுதுபோக்கு: பத்திரிகை,
தொலைக்காட்சி.



பெயர் : சதீஸ்.
வயது : 21
முகவரி : வைற்கேஸ்
தொலைத் தொடர்பகம்,
குருமண்காடு, மன்னார் வீதி,
வவுனியா.
பொழுதுபோக்கு : வழமையானவை



பெயர் : எஸ்.எம். ரஜப்
வயது : 20
முகவரி : 243A, முகைதீன்
ஜும்மா பள்ளி வீதி,
கல்முனைக்குடி - 09.
பொழுதுபோக்கு : பத்திரிகை.




பெயர் : நா.த. அஸ்மத்.
வயது : 16
முகவரி : 2, டீன்ஸ் வீதி,
அக்கரைப்பற்று -01
பொழுதுபோக்கு : கிரிக்கெட்,
பத்திரிகை, பாடல்.




# சிக்கல் தரும் மலச்சிக்கல்

மலச்சிக்கல் என்பது பலருக்குப் பலவிதமான அர்த்தத்தைக் கொடுப்பது. சிலருக்கு இது நீண்ட இடைவெளியில் மலம் கழிப்பது என்பதாகவும், வேறு சிலருக்குக் கட்டியான மலம் என்பதாகவும், மற்றும் சிலருக்கு மலம் கழித்தலில் சிரமம் என்பதாகவும் அர்த்தம் கொடுக்கும்.

இவை அனைத்திற்குமே வித்தியாச



மான அணுகுமுறைகளை மேற்கொள்வது அவசியம். மலம் அகற்றுவதில் பெருங்குடல் முக்கிய பங்கு வகிக்கிறது. குடல் வழியாக உணவு செல்லும் போது அதில் உள்ள நீர்ச்சத்துகள் உறிஞ்சப்பட்டு மலம் உருவாகிறது. பெருங் குடலில் ஏற்படும் தசை இறுக்கங்களால் மலம் மலக் குடலை வந்தடைகிறது. நீர் உறிஞ்சப் படுவதால் மலம் கழிப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

***அறிகுறிகள் :***

குறைந்தது ஒரு தினத்திற்கு குடல் இயக் கங்கள் இருக்காது.
அடி வயிற்றில் வலி.
வயிறு கனமாக இருத்தல்.
வாயுத் தொல்லை.
நாக்கில் சளி இருப்பது போன்ற உணர்வு.
தலை வலி.
பசியின்மை.
கீழ் கால்களில் வலி.
உயர் இரத்த அழுத்தம், காய்ச்சல்.
குமட்டல்
தலைச் சுற்றல்.
மயக்கமான நிலை.

**மலச்சிக்கலுக்கு இயற்கை மருத்துவம்!**

***இயற்கைத் தீர்வுகள் :***

சூரிய உதயத்திற்கு முன்னால் எழுந்து காலைக் காற்றில் மெதுவாக நடப்பது நல்லது.



இறுக்கமான உடைகளையோ, பெல்ட்களையோ அணிவதைத் தவிர்க்கவும்.

புகையிலை, காப்பி, தேநீர், வெண்ணெய் எடுக்கப்பட்ட பால் ஆகியவற்றை தவிர்க்கவும்.

நிறைய தண்ணீரும், பாலும் குடிக்கவும்.

உணவு எடுத்துக் கொண்ட 3 மணி நேரத்திற்குள் உறக்கத்தைத் தவிர்க்கவும்.

வாரத்திற்கு ஒரு நாள் நோன்பு இருக்கவும்.

15 நிமிடங்களுக்கு மேல் வேக வைத்த உலர்ந்த பழங்களை தினமும் காலையில் எடுத்துக் கொள்ளுங்கள்.

கோவைப் பழம் குடலைச் சுத்தப்படுத்தி மலச் சிக்கலை நிவர்த்தி செய்ய வல்லது.

குழந்தைகளுக்கு மலச் சிக்கல் ஏற்பட்டால் தானிய மாவுச் சத்துப் பொருட்களைக் கொடுப்பதன் மூலம் சுலபமாக நிவர்த்தி செய்யலாம்.

கொய்யாப் பழத்தை விதைகளுடன் சாப்பிட்டு வர மலச்சிக்கல் நீங்கும்.

பப்பாளி, ஆரஞ்சு, திராட்சைகள் உணவுப் பழக்க வழக்கத்தில் தினப்படி இருப்பது நல்லது.

மலச் சிக்கலுக்கு இன்னொரு இயற்கை முறை பாலுடன் சிறிது தேனைக் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு முறை அருந்தி வரலாம்.

இரவு படுக்கைக்குச் செல்லும் முன் பால் அருந்துவது குடல் இயக்கத்தை இலகுவாக வைத்துக்கொள்ள உதவும்.

கடும் மலச் சிக்கலுக்குப் பாலுடன் இரண்டு தேக்கரண்டி ஆமணக்கு எண்ணெயை கலந்து அருந்தலாம்.

காலையில் ஒரு லிட்டர் இளஞ்சூடு நீரை அருந்தி சிறிது நேரம் நடந்தால் மலச் சிக்கல் நீங்கும்.

சுடு நீரில் எலுமிச்சைச் சாற்றைக் கலந்து நாள் ஒன்றிற்கு 2 அல்லது 3 முறை அருந்தி வரலாம்.

செய்ய வேண்டியவை! செய்யக் கூடாதவை!

மலச் சிக்கல் சமயத்தில் சுலபத்தில் சீரணமாகும் உணவுகளையே எடுத்துக் கொள்ள வேண்டும்.

நிறைய பழங்கள், காய்கறிகள், பழக் கலவை சாப்பிடவும்.

உணவை நன்றாகச், சமைத்து நன்றாக மென்று சாப்பிடவும்.

பசி வரும்போது மட்டும் சாப்பிடவும். மேலும் உணவுகளுக்கு இடையே 4 மணி நேர இடைவெளி இருப்பது நல்லது.

கொத்துமல்லி, மஞ்சள், பெருங்காயம் ஆகியவை சீரணத்திற்கு உதவுபவை.

முழு தானியம், ரொட்டிகள் மற்றும் மாவுகள் உடலுக்கு நல்லது.

தினமும் உடற்பயிற்சி செய்வது அவசியம்.

தூங்கும் நேரம் ஒழுங்குமுறைப் படுத்தப்பட வேண்டும்.

வறுத்த உணவுகள், பீன்ஸ், முட்டைக்கோசு, காலி..ப்ளவர், உலர்ந்த பழங்கள் உள்ளிட்ட வாயு உருவாக்கக் காய்கறிகளைத் தவிர்க்க வேண்டும்.

ஒரே சாப்பாட்டில் பல வகையான உணவுகளைக் கலக்க வேண்டாம்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

## வேர்க்கடலை பிஸ்கட்

***தேவையான பொருட்கள் :-***

| | |
|---|---|
| வேர்க்கடலை | - 1 கப் |
| கோதுமை மா | - 1 கப் |
| சர்க்கரை | - 1 கப் |
| உப்பு | - 1 தேக்கரண்டி |
| சமையல் சோடா | - 1 தேக்கரண்டி |
| எசன்ஸ் | - 1/2 தேக்கரண்டி |
| நெய் | - 2 தேக்கரண்டி |

***செய்முறை :***

1. வேர்க்கடலை தோலை எடுக்க சிறிதளவு வறுக்க வேண்டும்.

2. பின்பு உடைத்து தோலை புடைத்து விட வேண்டும்.

3. அதில் உள்ள முளையை எடுத்துவிட வேண்டும்.

4. பின் கடலையை ஒன்றும் இரண்டுமாக பொடி செய்ய வேண்டும்.

5. ஒரு சர்க்கரையை எடுத்து தனியாக இடித்துக் கொள்ள வேண்டும்.

6. வேர்க்கடலை, கோதுமை மா இரண்டையும் தனியாக இடித்துக் கொள்ள வேண்டும்.

7. இவற்றுடன் ஒரு சிட்டினை உப்பும், சமையல் சோடாவும் போட வேண்டும்.

8. பின் அதில் தண்ணீர் சிறிதளவு ஊற்றி - கெட்டியாக சப்பாத்தி மா போல் பிசைய வேண்டும.

9. அடுத்து அந்த மாவை பூரி போல் உருட்டித் தட்டி, சிறிய வட்டமாக வெட்டி, அலங்கரிக்க ஊசியால் அதன் மேலே சிறு புள்ளிகளைக் குத்த வேண்டும்.

10 பிறகு ஒரு தட்டில் நன்றாக நெய் தடவி ஒன்றின் மேல் ஒன்று ஒட்டாதவாறு இடைவெளி விட்டுப் போட வேண்டும்.

11. ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் மணல் போட்டு மெல்லிய தட்டு போட்டு மூடி, நன்றாக ஆவி வரும் வரை சூடாக்கி பின் அந்தப் பாத்திரத்தில் உள்ள பிஸ்கட் தட்டை வைத்து மூட வேண்டும்.

12. பதினைந்து நிமிட நேரத்துக்குள் அந்த பிஸ்கட்டை திருப்பி போட வேண்டும் (பிஸ்கட் பிரவுண் கலராக வரும் போது திரும்பவும்)


13. வெந்ததும் எடுத்து ஆற வைத்துச் சாப்பிடவும்.

# பொடுகை அகற்ற.....

**பொ**டுகுத் தொல்லை பலருக்கு பெரிய பிரச்சினையாக உள்ளது.

தலையின் சருமம் வறண்டு போகவோ, எண்ணெய் வடியவோ விடுவதால் தலைமுடிகள் வறண்டு போவதோடு, பொடுகு வரவும் வாய்ப்புண்டு. இது குளிர் காலங்களில் அதிகமாகிறது. இதனால் தலையில் அரிப்பும் ஏற்படலாம்.

காரணங்கள் : ஜெல், ஸ்ப்ரே, ஷாம்பூ ஆகி



யவை அதிகமாக உபயோகிப்பது.

ப்ர்மிங், கலரிங் ஆகியவற்றாலும் பொடுகு வரலாம். அடிக்கடி நீண்ட நேரத்திற்கு ஹேர் ட்ரையர் உபயோகிப்பது.

கவலை, டென்ஷன் அதிகமானால் ஷாம்பூ போட்ட பிறகு சரியாக முடியை அலசாமல் இருப்பது.

பொடுகு வராமலிருக்க அல்லது பொடுகை அகற்ற சில எளிய முறைகளைக் கீழே கொடுத்துள்ளோம்.

## நிவாரணங்கள் :

ஆன்டி செப்டிக் தன்மை நிரம்பிய மூலிகைகளால் உருவான ஆயுர்வேத எண்ணெயை (அதில் வேப்பிலை, வெந்தயம், துளசி ஆகியவை கலந்தது.) முடியின் வேரில் மென்மையாக அழுத்தித் தடவவும்.


அதே ஆன்டிசெப்டிக் எண்ணெயை முழுத் தலையிலும் சீராகத் தடவவும்.

வெந்நீரில் டவலை ஊற வைத்து, பிறகு நீரைப் பிழிந்து விடவும். சீராக நீராவி முடிகளுக்குள் செல்லுமாறு அந்த டவலை தலையில் கட்டவும்.

5 இலிருந்து 10 நிமிடம் வரை அதை உலர விடவும்.

***பொடுகு அகற்றுவதற்காக விசேஷமாக தயாரிக்கப்படும் ஒரு கலவை :***

ஒரு கப் மருதாணியில் நெல்லிக்காய், சீயக்காய் ஒரு தேக்கரண்டி, வெந்தயம், வேப்பிலை, துளசி அரை தேக்கரண்டி எல்லாவற்றையும் பொடியாக கலக்கவும். எல்லாவற்றையும் தயிரில் கலந்து அல்லது பாதி எலுமிச்சை துண்டின் சாறுடன் கலந்து ஒரு கலவையை தயார் செய்து கொள்ளவும். இதைத் தலை முழுக்கத் தடவி ஒரு மணி நேரம் வரை வைத்திருக்கவும். இப்பொழுது இந்த ஆயுர்வேத ஷாம்புவால் தலையை கழுவிக் கொள்ளவும். இதை வாரத்திற்கு ஒருமுறை என 3 மாதங்கள் வரை தடவவும். இதனால் நிச்சயமாக பொடுகு



விலகும். இதற்குப் பிறகும் தலையில் பொடுகு ஏற்பட்டால் உங்கள் உடல் கோளாறுதான் இதற்குக் காரணம். எனவே உங்கள் மருத்துவரைக் கலந்து ஆலோசிக்கவும்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

04

பெயர் : ..............................

முகவரி : ..............................
..............................
..............................

தே.அ. அட்டை இல : ..............................

கையொப்பம் : ..............................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி 04**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:**
03.01.2006

**பரிசுப் போட்டி இல - 02**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**திருமதி எம்.சிவப்பிரியா,**
**இல. B 54, பதுளுபிட்டி, பதுளை.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

எழுந்து வந்து என்ன விஷயம் என்று கேட்கவில்லை. கசப்பான எதையும் எதிர் நோக்கும் தைரியம் கிடையாது அவர்களுக்கு. ஒளிந்து கொள்வதுதான் வழக்கம்.

பொலிசார் புறப்பட்டுச் சென்று பல இடங்களில் விசாரித்து விட்டுப் பேஜின் வீட்டுக்கே திரும்பி வந்தார்கள். ஆண்டி இன்னும் வரவில்லை என்பதை அறிந்து மறுபடியும் அவர்கள் புறப்பட்டுச் சென்ற சற்றைக்கெல்லாம் டெலிபோன் மணியடித்தது. கூப்பிட்டவன் தாரென்ஸன்தான். "பேஜ், ஆண்டி இங்கே இருக்கிறான்" என்றான் அவன் நிதானமான குரலில்." பிஜான் அவனைத் தன் படுக்கையறையில் வைத்துக் கொண்டிருந்தான். பிஜானைக் கண்டித்தேன். 'ஆண்டிதான் தானாகவே இங்கே வந்தான்.

போகாமல் இருந்தது தப்பு" என்றாள் பேஜ். "சரி, நாங்கள் அங்கே வருகிறோம்"

"இப்போது அவனும் பிஜானும் சாக்லேட் ட்ரிங்க் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். சாப்பிட்டு முடிக்கட்டும் நானும் பிஜானும் அவனை அங்கே அழைத்து வருகிறோம்."

"தாங்க்ஸ்" என்று சொல்லிவிட்டு, நடந்ததை பிராடிடம் சொன்னாள்.

அவன் முகத்தில் சுரத்தே இல்லை. "அவனிடம் ஏதாவது சொல்ல வேண்டியது தான்" என்றான்.

அவனிடம் சொல்வது இருக்கட்டும். உண்மை நிலையை நாமே ஒப்புக்கொள்ள வேண்டும்" என்ற பேஜ், பொலிஸ் ஸ்டேஷனைக் கூப்பிட்டு, ஆண்டி ஒரு சினேகிதன் வீட்டில் இருக்கிறான் என்று தெரிவித்தாள்.

**சென்ற வாரம்**

**தாரென்ஸனிடம் பேஜ் அழுது கொண்டு தன் பழைய கதைகளை சொல்லிக் கொண்டிருக்கையில் போனில் பிராட் ஆண்டியைக் காணவில்லை என்று கூறிகிறான். பதறியடித்த பேஜ் உடனடியாக புறப்பட்டு வீட்டிற்கு செல்கிறாள். அங்கு பொலிஸார் பிராடை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.....**

# ஒரு தாய் மகன் 61

அவனுக்கு அவன் வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லையாம். மனசுக்கு கஷ்டமாக இருக்கிறது என்றான். சரி இரு என்றேன்' என்கிறான்.."

கேட்கக் கேட்கப் பேஜின் கண்களில் மளமளவென்று கண்ணீர் கொட்டியது. பிராடை நோக்கி, "தாரென்ஸன் வீட்டில் இருக்கிறானாம் குழந்தை" என்றான்.

"தாரென்ஸன் வீட்டிலா? அங்கே



அவனுக்கு என்ன வேலை" என்று பிராட் திகைத்தான். ஆலிஸனும் க்ளோவும் சினேகிதிகள். ஆனால் ஆண்டியின் வயதுக்கொத்த தோழன் யாரும் அங்கே கிடையாதே என்று ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு.

"பிஜானும் அவனும் சினேகி தர்கள். ஆண்டிக்கு இங்கே இருப்பதற்கு வருத்தமாயிருக்கிறது என்று சொல்கிறானாம்" என்று அவனுக்கு விளக்கிய பேஜ், "சரி, நான் அங்கே வந்து ஆண்டியை அழைத்துக் கொள்கிறேன்." என்றாள் தாரென்ஸனிடம்.

மறுமுனையில் தாரென்ஸன் பெருமூச்சு விட்டான். சங்கடத்துடன் "வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை என்கிறானே இவன்?" திகைத்தாள் அவள் "ஏனாம்?"

"நீயும் உன் கணவரும் அவனைப் பற்றிச் சண்டை போட்டுக் கொண்டீர்களாமே? 'அப்பா என் மீது ரொம்பக் கோபமாக இருக்கிறார்' என்கிறான்."

"அவர் கோபமாக இருப்பது ஆண்டி மீது அல்ல. என் மீது. அவனிடம் நான் ஏதோ சொல்லிக் கொடுத்து விட்டேனென்று இவர் என் மேலேதான் கோபமாக இருக்கிறார்."

"அது மட்டுமில்லை. ஆலிஸன் இறந்து போய் விட்டாள் என்பதை மறைத்து நீங்கள் எல்லோரும் அவனிடம் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவன் நினைக்கிறான்."

"அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்

அரைமணி நேரத்தில் ஆண்டியை அழைத்துக்கொண்டு தாரென்ஸனும் பிஜானும் வந்து சேர்ந்தார்கள். பயத்தினாலும் வருத்தத்தினாலும் ஆண்டியின் முகம் வெளிறியிருந்தது. அவனைக் கண்டவுடன் கட்டியணைத்துக்கொண்டு கதறி விட்டாள் பேஜ். பிராடுக்கும் கண்கலங்கியது.

"இன்னொருதரம் இப்படிச் செய்யாதேடா. கண்ணா, செய்யவே செய்யாதே. உனக்கு ஏதாவது ஆகியிருந்தால் எனக்கு உயிரே போயிருக்கும்" என்றாள் பேஜ்.

"நீயும் அப்பாவும்தான் என்மேலே கோபமா இருக்கீங்களே?" என்றான் ஆண்டி.

"சீ, சீ! எனக்கும் உன் மீது கோபம் கிடையாது. அப்பாவுக்கும் உன் மீது கோபம் கிடையாது. அத்தோடு ஆலிஸனுக்கும் ஒன்றும் ஆகவில்லை. நிறையக் காயம்.அதனால்

*எழுதியது:* **டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறாள். நாளைக்கு உன்னை அவளிடம் அழைத்துப் போகிறேன். சரிதானா?"

அதைக் கேட்டதும் ஆண்டியின் முகத்தில் தான் எத்தனை மலர்ச்சி! "நிஜமாய்?" என்றான்.

"நிஜமாய்" என்று உறுதியளித்தாள் பேஜ். பாவம், ஆலிஸன் எப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறாள் என்பது இவனுக்குத் தெரியாது. அவள் பேச மாட்டாள் என்று தெரியாது.... அவனுடைய அன்புக்குரிய பழைய அக்காவாக அவள் இருக்கப் போவதில்லை... இருந்தாலும், இவனும் யதார்த்தத்தைத் தெரிந்து கொள்வது நல்லதுதான் என்று எண்ணிக் கொண்டாள்.

அவளும் பிஜானுமாக ஆண்டியை அவனுடைய படுக்கையறையில் கொண்டு

போய் படுக்க வைத்தார்கள். பிஜான் வெளியே போனதும் ஆண்டியைப் பாசத்துடன் முத்தமிட்டு "குட் நைட் தூங்கு" என்றாள் பேஜ்.

"ஏம்மா, அப்பா வீட்டை விட்டுப் போய் விடப் போகிறாரா?" என்று கேட்டான் ஆண்டி.

"தெரியாதுடா கண்ணா" என்றாள் அவள். உண்மையிலேயே அவனிடம் என்ன பேசுவதென்று அவளுக்குத் தெரியவில்லை. "எனக்கு நிச்சயமாய்த் தெரிந்ததும் கட்டாயம் உன்னிடம் சொல்கிறேன். ஆனால் ஒன்று என்ன நேர்ந்தாலும் சரி. நீ அதைப் பற்றிக் கவலைப்படக்கூடாது. புரிகிறதா? உன் மேலே யாருக்கும் கோபமில்லை. இது எனக்கும் அப்பாவுக்கும் மட்டுமுள்ள விவகாரம்... விபத்து மாதிரி ஏதோ நேர்ந்து விட்டது...."

"ஆலிஸனுக்கு ஏற்பட்ட மாதிரியா அம்மா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்" என்று சொல்லி மறுபடியும் அவனை முத்தமிட்டு விட்டு வெளியே வந்தபோது, தாரென்ஸனும் பிஜானும் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

"குட் நைட், பேஜ்" என்று புன்னகையுடன் கூறி விடைபெற்றான் தாரென்ஸன்.

தங்கள் இருவருக்குமிடையே ஏற்பட்டிருந்த நெருக்கம் மேலும் அதிகரித்து விட்டது என்று பேஜுக்குத் தோன்றியது. தாரென்ஸனிடம் இனி அவளுக்கு எந்த ஒளிவு மறைவும் இல்லை. இரண்டு பேரின் குடும்பங்களும் கொஞ்சம் கொஞ்சமாக ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்து கொண்டு வருகின்றன.

அதைப் பிராடும் உணர்ந்தான் போலும். தாரென்ஸனை வழியனுப்பி விட்டு உள்ளே வந்ததும், "உனக்கும் தாரென்ஸனுக்கும் ரொம்பத்தான் சினேகம் ஏற்பட்டிருக்கிறது" என்றான்.

"இப்போது அதைப் பற்றி என்ன பேச்சு? வேறு எவ்வளவோ கவலை இருக்கிறது." என்றாள் அவள்.

"உண்மைதான்." என்றான் அவன். "ஏதோ தோன்றியது சொன்னேன். எனக்கு அவனைப் பிடித்திருக்கிறது. உனக்கும் அப்படித்தான் இல்லையா? பண்பாடு உள்ள மனிதன்."

"இந்த நாலைந்து வாரமாக ஆஸ்பத்திரியில் எனக்கு அவர்தான் துணை, நல்ல சினேகிதர். அத்தோடு நல்ல தந்தை, நல்ல மனிதர்.

அவளுடைய குத்தல் அவனுக்குப் புரிந்தது. "அந்த விஷயத்தில் நான் மோசம் தான்..." என்றவன், "தோட்டத்தில் போய் உட்கார்ந்து பேசலாம் வா" என்றான், தோட்டத்துக்குச் செல்லும் கதவைத் திறந்தவாறு.

எதிரெதிராக நாற்காலிகளில் அமர்ந்த போது பேஜ் எதுவும் பேசவில்லை. பிராட் தான் மெதுவாக ஆரம்பித்தான். கொஞ்ச நாள் பொறுத்து நம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று பார்த்தேன். முடியாது போலிருக்கிறது. நான் வீட்டுக்கு அதிகம் வருவதில்லை. வந்தாலும் நீ ஆத்திரப்படுகிறாய்.

(தாய் தொடர்வாள்.....)

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்

## 20



**இரண்டாம்** உலகப் போரில் அமெரிக்கப் போர் விமானங்கள் அணுகுண்டு வீசியதில் ஹிரோஷிமாவின் இருதயமே கருகிவிட்டது; ஆனாலும் ஜப்பான் அழிந்து போகவில்லை. தமிழும் அப்படித்தான். வடமொழி என்ற பூகம்பம் வந்தது; அழியவில்லை தமிழ். பண்பாட்டுப் படையெடுப்புகள் என்ற எரிமலைகள் வெடித்தன; அழியவில்லை தமிழ். ஆங்கிலப் பேராட்சி என்ற அணுகுண்டு விழுந்தது; அழியவில்லை தமிழ். ஜப்பானைப் போலவே தமிழ்! தமிழைப் போலவே ஜப்பான்.

ஆகவே தமிழின் மூத்த இலக்கணமான தொல் காப்பியத்திற்குக் கலைஞர் தீட்டிய இந்த உரை நூலை ஜப்பானில் வெளியிடுவது மிகப் பொருத்தம் என்று கருதுகிறேன். தனது ஆழ்ந்த புலமையால் படைப்பாற்றலால் தொல் காப்பியத்தை எளிமை செய்து கடை சித் தமிழனுக்கும் காணிக்கைச் செய்திருக் கிறார் கலைஞர். 'இன ஒற்றுமை' என்ற ஒருமலரில் -

'தமிழர்கள் ஓரினம் **தமிழ்மொழி மூன்று** இனம்'

என்று ஓர் இன்ப அதிர்ச்சி தருகிறார். மொழியின் எழுத்துக்களே மூன்று இனமெனில் அது தமிழின் பெருமைக்கே குறைவன்றோ என்று இளைஞர்கள் கேள்விக் கணை எறிகிறார்கள். உடனே கலைஞர், வளவன் என்ற பாத்திரத்துக்குள் புகுந்து கொண்டு பேசுகிறார்.




"தம்பிகளே! தங்கைகளே! தமிழ் என்ற சொல்லில் 'த' என்பது வல்லினம். 'மி' என்பது மெல்லினம். 'ழ' என்பது இடையினம் இப்படி மூன்று இனத்தையும்மொழி இணைத்துக் கொண்டு வேறுபாடு விலக்கித் திகழ்கிறது. ஆனால் அந்த மொழி பேசும் தமிழர் எத்தனை முரண்பாடு கொண்ட பிரிவுகளாகப் பிளவுபட்டுக் கிடக்கிறோம். அதனைச் சிந்தித்துப் பாருங்கள். வல்லினம் - மெல்லினம் - இடையினம் ஒன்றுபட்டு 'தமிழ்' என்ற தகத்தகாய ஒளி பரப்பிடும் போது. தமிழர்கள் பல கூறுகளாகப் பிளவுபட்டுப் பாழ்பட்டுக் கிடப்பது நியாந்தானா?"

இப்படி இந்த நூலெல்லாம் கொழித்துக் கிடக்கும் இனக் கருத்துக்கள். இலக்கியக் கருத்துக்கள்; இலக்கண நுட்பங்கள், கற்பனைச் சிற்பங்கள் ஏராளம் ஏராளம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நூலை டோக்கியோவில் தமிழர் திருநாளில் வெளியிடுவதில் நான் பெருமையடைகிறேன்; டோக்கியோவும் பெருமையடைகிறது.

இருதயமும், குரலும் சூடாகி உச்சத்தை நோக்கிப் பேச்சு உயர்ந்தபோது சபையிலிருந்து ஒரு ஜப்பானியப் பெண் கத்தினாள்!

'வைரமுத்த்தூ....'!

வியந்தும் பயந்தும் போனேன்; விசாரித்தேன்.

'முத்து' படப் பாடல்களின் மூலம் எனக்கு தீவிர ரசிகையாம்.

மறுநாள் பயணம் டோக்கியோவிலிருந்து கியோட்டோவிற்கு. டாக்டர் இப்ராகிம், டாக்டர் பாபு, டாக்டர் ஜெகந்நாதன், டாக்டர் குமாரவேல், டாக்டர் ராஜேந்திரன், டாக்டர் ரவி உள்ளிட்ட ஆராய்ச்சி நண்பர்கள் என்னையும், தம்பி அருளையும் அன்பொழுக வழியனுப்பு வைத்தார்கள்.

இருபெரு நகரங்களுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு.

டோக்கியோவை இடம் மாற்றிப் போட்டால் கியோட்டோ; கியோட்டோவை இடம் மாற்றிப் போட்டால் டோக்கியோ.

டோக்கியோ இந்நாள் தலைநகரம்; கியோட்டோ ஜப்பானின் முன்னாள் தலைநகரம்.

நாட்டில் எந்தப் பகுதி வளர்ச்சி பெற வேண்டுமென்று விரும்புகிறதோ, அந்தப் பகுதியின் ஒரு பெருநகரத்தைத் தலைநகராகக் கொண்டு இயங்கத் தொடங்குகிறது ஜப்பான்.

அது உச்சநிலை பெற்று வளர்ச்சியின் உறைநிலை கண்டவுடன், இன்னோர் இடத்திற்குத் தலைநகரை இடம் மாற்றிக் கொள்கிறது.

கியோட்டோவை வளர்த்துவிட்டு டோக்கியோவிற்குப் போனது. இப்போது டோக்கியோ போதுமென்று புதிய தலைநகருக்கு இன்னோர் இடம் பார்க்கிறது.

புல்லட் ரயில்!

ஜப்பானின் போக்குவரத்துக் கலாசாரத்தின் உச்சம்.

ஒரு வெள்ளைத் திமிங்கலத்தின் மூக்கைப் போல முனவடிவு அமைக்கப்பட்ட புல்லட் ரயில், தண்டவாளத்தில் மிதந்து வந்தபோது இறக்கையில்லாத விமானம் ஒன்று ஓடுதளத்தில் ஓடி வந்ததாகவேபட்டதெனக்கு.

இந்த இடத்தில் புல்லட் ரயில் குறித்த சில ஆச்சரியங்களை இந்தியாவின் என் சகபயணிகளோடு நான் பகிர்ந்து கொள்ளாவிட்டால் மூளைக்குள் பறக்கும் பட்டாம் பூச்சிகளால் என் கபாலம் வெடித்துவிடும்.

மணிக்கு இருநூற்றைம்பது கிலோமீட்டர் வேகத்தில் தரையில் பறக்கிறது புல்லட் ரயில். மணிக்கு ஐந்நூறு கிலோமீட்டர் பயணிக்கக் கூடிய வலிமை அதன் வடிவமைப்புக்கு உண்டு. தாங்குதிறன் தண்டவாளத்திற்கும் உண்டு.

ஆனால் 'தலைதெறிக்க ஓடாதீங்கப்பா' என்ற மூத்த குடிமக்களின் முன்னெச்சரிக்கை கருதி பாதி வேகத்திலேயே பயணிக்கிறது புல்லட். மணிக்கு ஐந்நூறு கிலோமீட்டர் இன்னும் சில ஆண்டுகளில் எட்டப்பட்டே தீரும்.

இந்தியாவில் இதை எண்ணிப் பார்க்கிறேன்.

இது சாத்தியமானால் எழும்பூரிலிருந்து மதுரை ஒரு மணி நேரம். அடுத்து இருபது நிமிடத்தில் நெல்லை. பல்துலக்கச் சென்னை; சிற்றுண்டிக்கு மதுரை; காபிக்கு நெல்லை.

சென்னையிலிருந்து காலை ஆறு மணிக்குப் புறப்படுகிற ஒருவன், நெல்லைக்குச் சென்று முகூர்த்தம் முடித்து வெற்றிலை போட்டுக் கொண்டு, காலை பத்து மணிக்குள் சென்னை வந்து அலுவலகத்தில் எச்சில் துப்பலாம்.


நேரத்தை வென்றெடுப்பதிலிருந்து தொடங்கியதுதான் நாகரிகம்.

*(தொடரும்...)*

*நன்றி :- திருமதி வைரமுத்து*

# 'சுனாமி' அகதிகளுக்கு ஒருவயது - தொடர்கிறது பேரவலம்!

அழிவையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்திய கோரமான சொல் சுனாமி. இந்தப் பேரவலத்துக்குள் மக்கள் அகப்பட்டு ஒரு வருடம் நிறைவு பெறுகிறது. கடந்த வருடம் டிசம்பர் 26ஆம் திகதி காலை ஒன்பதேகால் மணியைத் தாண்டியபோது அந்தப் பேரழிவு ஆரம்பித்திருந்தது. சுமார் 5 நிமிட நேரத்தில் எல்லாமே நடந்து முடிந்து விட்டது. 48 ஆயிரம் பேர் காவு கொள்ளப்பட்டார்கள். மேலும் பல்லாயிரக் கணக்கானோர் தமது வீடு வாசல்களை இழந்தார்கள். உல்லாச புரிகளாகவும், ஓய்விடங்களாகவும் இருந்த


அசுத்தமான முகாம் சூழலில்


காட்சி தந்தன. எங்குமே அவலக் குரல்கள். எந்தச் சமூகத்தவர்களாக இருந்தாலும் நாட்டின் கரையோரப் பகுதிகளில் கடலையே நம்பி வாழ்ந்த மீனவர் சமுதாயத்தினரே ஒட்டுமொத்தமாக இந்தப் பேரழிவில் சிக்கியவர்கள்.

சுனாமி அழிவைச் சந்தித்தவர்கள் இன்னமும் மீள முடியாமல் இருக்கிறார்கள். ஆனால் சுனாமிக் கடற் கொந்தளிப்பின் வருகையால் நன்மையடைந்து வரும் ஒரு கூட்டத்தாரும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இந்தப் பேரழிவை உண்டாக்கிய கடற்கொந்தளிப்புக்கு அவர்கள் "தங்கச் சுனாமி" என்று பெயரிட்டுள்ளார்கள். அதேவேளை தமது அன்புக்கினிய உறவினர்களை இழந்து, பொருள் பண்டங்களையும், வீடுவாசல்களையும் பறிகொடுத்து இன்று அகதி என்ற பட்டத்தோடு கூடாரங்களிலே வாழ்பவர்களுக்கு சுனாமி என்ற சொல்லை உச்சரித்தாலே பயங்கரமாகத் தானிருக்கிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக உலக நாடுகள் பலவும், சர்வதேச நிறுவனங்களும், உள்ளூர் அமைப்புக்களும், இலங்கை அரசும், உள்நாட்டு, வெளிநாட்டுப் பரோபகாரிகள் பலரும் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காக நாட்டில் முகாமிட்டுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் ஏராளம், இனி நிறுவனங்களுக்குப் பெயர் வைக்கப் பெயர்களே இல்லை என்றளவுக்கு உதவிசெய்யும் சர்வதேச நிறுவனங்கள் மலிந்து விட்டன. வடக்குக் கிழக்கிலும், தென்பகுதியிலும் வீதியால் செல்லும் வாகனங்களைக் கவனித்தால் அவற்றில் ஐந்து வாகனங்களில் ஒன்று உதவி நிறுவனத்தினுடையது. தினுசு தினுசான நிறுவனங்கள் செயற்படுகின்றன. வீடமைத்துக் கொடுக்க, தொழிலுபகரணங்கள் வழங்க, தொழிற் பயிற்சி வழங்க, வாழ்வாதார உதவிகளை வழங்க, சட்ட உதவி, உளநல ஆலோசனை, சமாதானம், பெண்கள், சிறுவர் அபிவிருத்தி என்று விதம் விதமான பணிகளைத் தமக்குள் பங்கு போட்டுக் கொண்டு செயற்படுகின்றன.

இவை ஒருபுறமிருக்க அரசாங்கமும் மக்களின் வாழ்க்கையை மீளக்கட்டி எழுப்பப் போவதாக மார்தட்டுகிறது. எல்லாம் நடந்தும் - சுனாமி கரை கடந்து ஒரு வருடமாகியும் மக்கள் தமது துயரங்களைக் கடந்ததாகத் தெரியவில்லை. மக்கள் கூடாரங்களிலும், கொட்டில்களிலும் தமது காலத்தைக் கழிக்கிறார்கள். அப்படியென்றால், அகதிகளுக்கான புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களில் எங்கோ கோளாறு இருக்கிறது என்பதுதான் உண்மை. நிறுவனங்களோ அரசோ மக்களுக்கான உதவிகளை ஒருபோதும் சரியாகச் செய்யவில்லை என்று பொதுப்படையாகக் கூறிவிட முடியாது. ஆனால் பெரும்பாலான நிறுவனங்களும் அரசாங்க இயந்திரத்தின் ஒரு சில பகுதி அதிகாரிகளும் சுனாமிப் பாதிப்பைச் சாதகமாகப் பயன்படுத்தி வயிறு வளர்க்கின்றார்கள் என்று மக்கள் கூறும் குற்றச்சாட்டுக்களை மறுப்பதற்கில்லை.

இந்த நிலைமையில் அரசாங்கத்தினதும், பெரும்பாலான அரச சார்பற்ற உதவி நிறுவனங்களினதும் கவனம் தென்னிலங்கையையும், வடக்குக் கிழக்குப் பகுதியையும் நோக்கியே திரும்பியிருக்கிறது. இலங்கையின் தலைநகரான கொழும்பில் சுனாமி அகதிகள் இருப்பதை இவர்கள் கண்டுகொள்ளவில்லை என்கிறார்கள் மட்டக்குளி பிரதேசத்தில் உள்ள அகதி


கூடாரத்தில் இயங்கும் திருகோணமலை - கிண்ணியா வைத்தியசாலை

மக்கள். கொழும்பு-மட்டக்குளி, சாந்த மரியா அகதி முகாம், விஸ்வைக் விளையாட்டு மைதானம், பொனவிஸ்டா முகாம் ஆகிய இடங்களில், மட்டக்குளி கரையோரப் பிரதேசத்தில் வசித்து வந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட நான்கு மதங்களையும் சேர்ந்த 225 குடும்பங்களைச் சேர்தவர்கள் வாழ்கின்றார்கள்.

சாந்த மரியா மக்கள் மண்டபத்திலுள்ள அகதி மக்களுக்கு பலகை, காட்போட் தாள் மற்றும் தகரத்தினாலான சிறு கொட்டகைகள்

> **ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபிஅனான் தொடக்கம் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் வரை வந்து போயுள்ளனர். ஆனால் இந்தப் பிரமுகர்கள் எல்லாம் வந்தும் என்ன பயன்? சுனாமி அகதி மக்களின் வாழ்வில் எந்த மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை.**

அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. புறாக் கூடுகளைப்போல் மிகச் சிறியதான இந்தக் கொட்டகைகளுக்குள்தான் சமையல், உறக்கம், ஓய்வு எல்லாமே. நிம்மதியாக கால்நீட்டித் தூங்கி ஒருவருடமாகிவிட்டது என்று ஏக்கப் பெருமூச்சு விடுகின்றனர் பலர்.

விஸ்வைக் விளையாட்டு மைதானத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களச் சமூகத்தைச் சேர்ந்த 156 குடும்பத்தவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் பலகை மற்றும் தகரத்தினாலான சிறிய கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பொனவிஸ்டா மக்கள் மண்டப அகதி முகாமில் 39 தமிழ், சிங்களக் குடும்பத்தவர்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் கடந்த ஒருவருட காலத்தையும் கூடாரங்களில் கழித்து வருகின்றார்கள். பகல் வேளைகளில் கொளுத்தும் வெய்யிலில் இந்தக் கூடாரங்களில் இருக்க முடியாது. பலமாக காற்றடித்தால் இந்தக் கூடாரங்கள் தொப்பென்று மறு பக்கம் கவிழ்ந்து விடுகின்றன. மழை பெய்யும்போது கூடாரத்தினுள் நீர் தேங்கிவிடுகின்றது. இப்படிப்பட்ட கஷ்டங்களுடன். இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மூன்று பக்கமும் நீரால் சூழப்பட்டுள்ள கிண்ணியாப் பிரதேசம் திருகோணமலை நகரிலிருந்து 25 கிலோ மீற்றர் தெற்கு நோக்கித் தரைவழியாகப் பயணம் செய்து, பின்னர் படகு மூலம் கடலைக் கடந்து கிண்ணியாவை அடையவேண்டும். சுமார் ஒரு இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட கிண்ணியாப் பிரதேசம் தொடர்ந்து இன வன்முறைகளால் பாதிக்கப்பட்டு வந்துள்ளதோடு, இப்பொழுது சுனாமி அழிவுகளுக்கும் முகம் கொடுத்துள்ளது. கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு அகதிகளாக 8,241 குடும்பத்தவர்கள் இன்னமும் கிடுகளால் வேயப்பட்ட கொட்டில்களிலேயே வாழ்கின்றார்கள். நாட்டில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களில் ஒன்றான கிண்ணியாவைப் பார்வையிட ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபிஅனான் தொடக்கம் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் வரை வந்து போயுள்ளனர். ஆனால் இந்தப் பிரமுகர்கள் எல்லாம்


அகதிகளின் திறந்தவெளி சமையலறை

வந்தும் என்ன பயன்? சுனாமி அகதி மக்களின் வாழ்வில் எந்த மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை. முற்றுமுழுவதுமாக, இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்ட கிண்ணியா வைத்தியசாலை இன்னமும் சின்னச் சின்ன கூடாரங்களில் இயங்குகின்றது. சுனாமி அகதி மக்களைக் குடியேற்றுவதற்காக அடையாளம் காணப்பட்ட சுமார் 40 ஏக்கர் அரச காணியில் புலிகள் முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலும் விடுத்து வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களில் காத்தான்குடியும் ஒன்று. 1,410


தகரத்தினாலும் கிடுகுகளினாலும் அமைக்கப்பட்ட வீடுகள்

குடும்பங்கள் தமது வீடுவாசல்களை இழந்தன. வடக்கு, கிழக்கின் ஏனைய அகதிகளிலிருந்து இவர்கள் வித்தியாசப்பட்டவர்கள். அகதி வாழ்க்கை இவர்களுக்குப் புதியதல்ல கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இவர்கள் அகதிகளாகவே வாழ்கின்றார்கள். காத்தான்குடிக்கு அண்மித்ததாக ஒல்லிக்குளம், சிகரம், கீச்சான் பள்ளம், மண்முனைத்துறை போன்ற கிராமங்கள் உள்ளன. பூர்வீகமாக இங்கெல்லாம் வாழ்ந்த முஸ்லிம்கள் பயங்கரவாத அச்சுறுத்தலினால் 1985 ஆம் ஆண்டு தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அகதிகளான மக்கள் காத்தான்குடி கடற்கரையோரப் பகுதிகளில் குடிசையமைத்துக் குந்திக் கொண்டார்கள்.

இவ்வாறு சுமார் 20 வருடங்களை அகதிகளாகக் கழித்துக் கொண்டிருந்த இந்த மக்கள், கடந்த வருடம் தாக்கிய சுனாமிக் கடற்கொந்தளிப்பினால் துடைத்தெடுக்கப்பட்டு மீண்டும் அகதிகளானார்கள். அகதி அந்தஸ்து புதுப்பிக்கப்பட்டுவிட்டது. கடற்கரையோர 100 மீற்றர் தடை வலையத்திற்குள் இவர்கள் வாழ்ந்ததால் இவர்களை, மீண்டும் கடற்கரையோரப் பகுதியில் குடியேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டது. தங்களை எங்காவது குடியேற்றுமாறு கோரி காத்தான்குடி சுனாமி அகதிகள் பலமுறை தெருவுக்கு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தார்கள். எனவே பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியோடு இவர்களை மீண்டும் அவர்கள் 20 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த அவர்களது சொந்த இடத்தில் குடியமர்த்துவது எனத் தீர்மானிக்கப்பட்டு


மட்டக்களப்பு பாலமுனைக் கிராம சுனாமி அகதிகளும் அவர்களின் தற்காலிய வீடுகளும்.

வேலைகள் நடைபெற்றன. எனினும் இந்த மக்கள் அங்கு குடியேற்றப்படுவதைப் புலிகள் விரும்பவில்லை. புலிகளது அச்சுறுத்தல் காரணமாக இந்த மக்களுக்கான நிரந்தர வீடுகளையோ மற்றுமுள்ள நிவாரணங்களையோ வழங்க அரசாங்க அதிகாரிகள் மறுத்து வந்துள்ளனர். கொட்டில்களும், கூடாரங்களும் ஒழுகிக் கரைகின்றன. பலமான காற்றுக்குக் கூடாரங்கள் தலைகீழாகப் பறக்கின்றன.

மட்டக்களப்பு மண்முனைத்துறைக் கிராமத்தில் நாம் அகதி மக்களிடம் உரையாடிக் கொண்டிருந்தபோதே பலமான காற்று வீசியதால் அந்தக் கூடாரம் குடைபோன்று 200 மீற்றருக்கு அப்பால் தலைகீழாய் தூக்கி வீசப்பட்டது. அப்பொழுது அங்கே கைக்குழந்தையும், வயதான நோயாளியும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். காற்று ஓயட்டும் என்று காத்திருந்து மாலை 4 மணிக்குத்தான் அவர்கள் பகல் உணவு சமைக்கத் துவங்கியிருந்தார்கள். எனினும் அவர்களது சமையல் முழுவதிலும் காற்று, மண்ணையும் புழுதியையும் வாரியிறைத்துச் சென்றது. அதன் பின்னர் அவர்களது வாயிலிருந்தது சொற்களே வரவில்லை. அழுகை அழுகையாகத் துயரம் வழிந்தோடியதைக் காணக்கூடியதாக இருந்தது. இதுதவிர, கொட்டிலுக்குள் வெய்யிலிலும் மழை நேரத்திலும் உள்ளே இருக்க முடியாத நிலைமை. ஒரே புழுக்கம் அல்லது ஈரம். கால் நீட்டித் தூங்க இந்தக் கொட்டில்களிலும், கூடாரங்களிலும் பல குடும்பங்களுக்கு இடவசதி போதாது. தொற்று நோய்கள், பூச்சிகளின் தொல்லை வேறு. சில அகதி முகாம்களில் வெளிச்ச வசதிகள் இல்லை.

பாதுகாப்பு இல்லாததன் காரணமாக பொத்துவில் ஊறணிப் பகுதியில் இருந்த அகதி முகாமைக் கைவிட்டுவிட்டே மக்கள் அகன்று விட்டார்கள். முகாம்களிலே உள்ள மலசலகூடங்கள் பல இடங்களில் பாவனைக்கு உதவாமல் உள்ளன. முகாம்களைச் சூழ சீரான வடிகால், கழிவகற்றும் வசதிகள் இல்லை. இதனால் சுகாதாரச் சீர்கேடுகள், தொற்று நோய்கள், பூச்சி, நுளம்புகளின் தொல்லை என்பன ஏற்பட்டுள்ளன. இது தவிர, அரசினால் வாக்குறுதி அளிக்கப்பட்ட 5000 ரூபாய் மாதாந்த உதவிக் கொடுப்பனவு உண்மையாகவே பாதிக்கப்பட்ட பலருக்கு இன்னமும் கிடைக்கவில்லை, ஏனையோருக்கு 5 மாதங்களுக்கான கொடுப்பனவே இதுவரை கிடைத்திருக்கின்றது. அகதிமுகாம் அமைந்துள்ள சுற்றுவட்டாரத்தில் உள்ள அந்தப் பகுதி மக்களின் நச்சரிப்புகளுக்கும் கிண்டல் கேலிகளுக்கும் அந்த அகதி மக்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அகதி முகாம்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கும் காணிகள் பல தனியாருக்கு அல்லது சங்கங்களுக்குச் சொந்தமானவை. மாற்று உடையின்றி வந்த அகதிகளை உடனடியாகத் தங்கவைக்க இந்த இடங்கள் பேருதவி புரிந்திருந்தாலும் இப்போது அகதி முகாமைக் காலி செய்து விட்டு காணிகளைத் தருமாறு காணிச் சொந்தக்காரர்கள் அகதி மக்களுக்கு நெருக்கடி கொடுக்கிறார்கள். பல நிறுவனங்கள் அடிக்கல்லும் நாட்டிவிட்டு எங்கோ மாயமாய் மறைந்துவிட்டன.

மட்டக்களப்பு பாலமுனைக் கிராமத்தில் சுனாமி அகதிகளுக்கான நிரந்தர வீட்டுக்காக ஒக்ரோபர் 29ஆம் திகதி அடிக்கல் நாட்டியது ஒரு நிறுவனம். அன்றோடு சென்றவர்கள் இன்னமும் அந்தப் பகுதி அகதி மக்களைத் திரும்பிப் பார்க்கவில்லை

**ஹுஸைன்**

எனப் பாதிக்கப்பட்டவர்கள் குறைப்படுகிறார்கள். சுனாமிக்குப் பின்னர் ஏற்பட்ட அடை மழை வெள்ளம், புயல் என்பனவும் "பட்ட காலிலே படும்" என்பது போல இந்த அகதி மக்களையே பாதித்து வருகின்றன. இத்தகைய துயரங்களையெல்லாம் அனுபவித்து சுனாமி அகதி மக்கள் வெற்றிகரமாக ஒரு வருடத்தைக் கழித்துள்ளார்கள்.


பலகைகளால் ஆன தற்காலிக வீடுகள்.


கூடாரத்தில் இயங்கும் கிண்ணியா வைத்தியசாலை


நெருக்கடி மிகுந்த படங்குக் கூடாரங்கள்.

அகதிகள் கதை தொடர் கதையாகக் கூடாது என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்புமாகும். இன்னும் பல வருடங்களுக்கு இந்த அகதி வாழ்க்கை நீடிக்காமலிருக்க எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும்.

அகதி மக்களும், அரசும், உதவி நிறுவனங்களும் ஒருமித்துப் பணியாற்றத் தவறும் பட்சத்தில் பாதிப்புக்கள் தொடரவே செய்யும்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# வன்னிக்கு இடமாறினர்!

இலங்கையில் இந்திய உயர் ஸ்தானிகராக அப்போது பணியாற்றிக் கொண்டிருந்தவர் ஜோதிந்ரநாத் தீக்ஷித். இவர் தமிழீழக் குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். தமிழீழக் கோரிக்கையையும், வன்செயல்களையும் தமிழீழக் குழுக்கள் கைவிட வேண்டுமென்று தீக்ஷித் வலியுறுத்தினார். தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இந்தியா ஆதரவளிக்குமென்று உறுதியளிக்கப்பட்ட அதேவேளை, இலங்கையில் பிரிவினைவாதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்திய மண்ணில் அனுமதி வழங்கப்படமாட்டாதென்று தமிழீழக் குழுக்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டுமென்று இந்தியா வலியுறுத்தியது. தீர்வு ஏற்படுமென்ற நம்பிக்கை தமக்கில்லையென்றபோதிலும் தீர்வையேற்படுத்த இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்குத் தாம் எதிராக இருக்கப் போவதில்லையென்று தமிழீழக் குழுக்களின் தலைவர்கள் உறுதியளித்தனர்.




**இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனும் பேச்சுவார்த்தை மேசையில் ஏற்பட்ட குழப்பநிலை குறித்து கவலை கொண்டிருந்தனர். பிரபாகரன் சென்னை திரும்பிய மறுநாள், தமிழகப் பொலிஸார் தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் தீவிர வாதிகளின் அலுவலகங்களை முற்றுகையிட்டு தேடுதல் நடத்தியதோடு ஆயுதங்களையும் தொலைத்தொடர்பு உபகரணங்களையும் கைப்பற்றினர். பிரபாகரன் உட்பட தீவிரவாத இயக்கத் தலைவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.**

இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்த யோசனைகளில் மேலும் முன்னேற்றகரமான திருத்தங்களைச் செய்யத் தயாராகவிருப்பதாகவும் அதற்கான சிபார்சுகளை முன்வைக்குமாறும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கோரிக்கை விடுத்தார். ஆனால் தான் முன்வைக்கும் தீர்வுப் பொதியைத் தமிழ் தீவிரவாதிகள் நிராகரிப்பார்களேயானால், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான சகல முயற்சிகளையும் எடுப்பேனென்று ஜெயவர்த்தனா எச்சரிக்கை விடுத்தார்.

சார்க் அமைப்பின் உச்சி மாநாடு 1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17, 18ஆம் திகதிகளில் பெங்களூரில் நடைபெற்றது. இம் மாநாட்டில் பங்குபற்ற வருகை தந்திருந்த ராஜீவ் காந்தியும், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் சந்தித்துப் பேசினர். கிழக்கு மாகாணம் சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான சபைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், சிங்களவர்களுக்கான சபை திருகோணமலையில் அமைக்கப்பட வேண்டுமென்றும், தமிழர்களுக்கான சபை மட்டக்களப்பிலும், முஸ்லிம்களுக்கான சபை அம்பாறையிலும் அமைக்கப்பட வேண்டுமென்றும் ஜெயவர்த்தனா யோசனை தெரிவித்தார். இவை பற்றிக் கலந்துரையாடுவதற்காக சென்னையிலிருந்த பிரபாகரனை பெங்களூருக்கு வருமாறு ராஜீவ்காந்தி அழைத்தார். இந்திய விமானப்படை விமானமொன்றின் மூலம் பிரபாகரன், பாலசிங்கம், லோரன்ஸ் திலகர் ஆகிய மூவரும் பெங்களூருக்கு வந்து சேர்ந்தனர். கிழக்கு மாகாணத்தை மூன்று சபைகளாகப் பிரிக்கும் ஜெயவர்த்தனாவின் யோசனை பற்றி ராஜீவ் காந்தி பிரபாகரனுக்கு எடுத்து விளக்கினார். வடக்கு - கிழக்கு இணைப்பைத் தவிர வேறு எதனையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று கூறிய பிரபாகரன், ஜெயவர்த்தனாவின் யோசனையை நிராகரித்தார். இதன் பின்னர் பிரபாகரன் எம்.ஜி. ஆரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது, மற்றொரு அறையில் ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனாவும் பேச்சுவார்த்தை நடத்தினர். ஜெயவர்த்தனாவும் பிரபாகரனும் பெங்களூரில் தங்கியிருந்தபோதும் இருவரும் சந்தித்துப் பேசவில்லை. இருவரையும் சந்திக்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் புலி இயக்க உறுப்பினரான லோரன்ஸ் திலகர் பத்திரிகையாளர்களிடம் பின்வருமாறு கூறினார் : "வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கப்பட முடியாத ஓர் அலகாகவே நாம் கருதுகிறோம். எனவே ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் யோசனையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று திலகர் கூறினார்.

ஜெயவர்த்தனா தான் முன்வைத்திருக்கும் யோசனைகளுக்கு மேலதிகமாக எதனையும் வழங்கத் தயாரில்லையென்று இந்திய அதிகாரிகள் பிரபாகரனிடம் எடுத்துக் கூறினர். இலங்கை இராணுவம் புதிய ஆயுதங்களுடன் நவீனமயப்படுத்தப்படுவதாகவும் அவற்றிற்குப் புலிகளால் முகம்கொடுக்க முடியாத நிலையேற்படுமென்றும் இந்திய அதிகாரிகள் பிரபாகரனிடம் எடுத்து விளக்கினர். புலி இயக்கம் தனது யோசனைகளை ஏற்றுக்கொள்ளத் தவறினால் இராணுவத் தாக்குதல் நடத்தி புலி இயக்கத்தை நசுக்கப் போவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்திருக்கும் எச்சரிக்கை பற்றியும் இந்திய அதிகாரிகள் பிரபாகரனுக்குக் கூறினர். யாழ்ப்பாணத்தின் மீது இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தினால் பாரிய அழிவுகள் ஏற்படுமென்றும் இந்திய அதிகாரிகள் கூறினர். அப்படி ஒரு தாக்குதல் நடத்தப்படும் நிலையில் அமெரிக்கா தனது கப்பல்களை இலங்கை கடற்பரப்புக்கு அனுப்பி வைக்கலாமென்றும் இதனால் இந்தியா எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாமல் போகலாமென்றும் இந்திய அதிகாரிகள் கூறினர். இந்த எச்சரிக்கைகளுக்கெல்லாம் பிரபாகரன் வளைந்து கொடுப்பதாக இல்லை. பேச்சுவார்த்தைகளில் புலி இயக்கம் பங்குபற்ற வேண்டுமென்றால் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பை ஜெயவர்த்தனா ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டுமென்று பிரபாகரன் கூறினார். இது பற்றிக் கருத்துத் தெரிவித்த லோரன்ஸ் திலகர், "இது ஒரு முன்நிபந்தனையல்ல. தமிழ் மக்களின் அடிப்படை நிலைப்பாடு இதுதான்" என்று கூறினார். எனவே இலங்கை அரச தரப்போடு புலி இயக்கத் தலைவர்கள் பேசுவதற்குச் சந்தர்ப்பங்கள் இல்லாததால் அவர்கள் பெங்களூரிலிருந்து விமான மூலம் சென்னை திரும்பினர்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனும் பேச்சுவார்த்தை மேசையில் ஏற்பட்ட குழப்பநிலை குறித்து கவலை கொண்டிருந்தனர். பிரபாகரன் சென்னை திரும்பிய மறுநாள், தமிழகப் பொலிஸார் தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் தீவிர வாதிகளின் அலுவலகங்களை முற்றுகையிட்டு தேடுதல் நடத்தியதோடு ஆயுதங்களையும் தொலைத்தொடர்பு உபகரணங்களையும் கைப்பற்றினர். பிரபாகரன் உட்பட தீவிரவாத இயக்கத் தலைவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களின் பெயர், விலாசம் முதலிய விபரங்கள் பெறப்பட்டதோடு, கைவிரல் அடையாளங்களும் எடுக்கப்பட்டன. தமிழகப் பொலிஸார் பிரபாகரனையும் விட்டு வைக்கவில்லை. இது குறித்து தனது ஆத்திரத்தை சென்னைப் பத்திரிகைகளுக்குப் பிரபாகரன் தெரிவித்தார். "கேடியைப் போல் பொலிஸ் நிலையத்திற்கு என்னைக் கொண்டு சென்று கைவிரலடையாளங்களை எடுத்தனர். இலங்கைத் தமிழ் மக்களின் இலட்சியத்திற்காகப் போராடும் என்னை அவமானப்படுத்தி விட்டனர்" என்று பிரபாகரன் தெரிவித்தார். புதுடில்லியின் உத்தரவிற்கு அமையவே தமிழகப் பொலிஸார் தீவிரவாதிகளை முற்றுகையிட்டனர்.

பிரதமர் ராஜீவ் காந்தி மீது பிரபாகரன் ஆத்திர முற்றதோடு, எம்.ஜி.ஆர். குறித்தும் தனது அதிருப்தியை வெளியிட்டார். இதுகுறித்து சென்னையிலிருந்து வெளிவரும் 'தினகரன்' என்ற தமிழ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பிரபாகரன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். பேச்சுவார்த்தை மூலமான தீர்வு வேண்டுமா, இல்லையா என்று முடிவெடுக்குமாறு எம்.ஜி.ஆர்.தன்னிடம் கூறினாரென்றும் பேச்சுவார்த்தைத் தீர்வுக்கு சம்மதம் தெரிவிக்கத் தவறினால் இந்தியாவின் ஆதரவு கிட்டாதென்றும் எம்.ஜி.ஆர். கூறியதாகப் பிரபாகரன் தெரிவித்திருந்தார். இதனையடுத்து சென்னையிலிருந்து படிப்படியாக தனது தலைமையகத்தையும் அலுவலகங்களையும் பிரபாகரன் வன்னிக்கு மாற்றிக் கொண்டார். புலி இயக்கத்தின் ஒரு சில பிரிவுகளே தொடர்ந்தும் சென்னையில் இயங்கின.

(அரசியல் தொடர்)

இணைந்து எழுதுவது
த. சபாரத்தினம்
+
அம்பி மகன்

(தொடர்ந்து வடியும்....)




ஆமாம் சார். மிலிட்டரியிலிருந்து வந்த பிறகு உடனேயே இங்க வேலை கிடைச்சுடுச்சு!" வாட்ச்மேன் பதிலளித்தார். "அப்படின்னா உங்களுக்கு ரெண்டு வருமானம்னு சொல்லுங்க". மாதவன்குட்டி சிகரட்டைப் பற்றவைத்தபடி கேட்டான். "ஆமாம்... நீங்க எதையோ தெரிஞ்சுக்க வந்ததாச் சொன்னீங்களே?" "முதல்ல நான் யாருன்னு உங்களுக்குப் புரிஞ்சிருக்கணுமே. மிலிட்டரிக்காரருக்குத் தெரியாமலா இருக்கும்?" மாதவன்குட்டி சிரித்தபடி கேட்டான்.



"தெரியாம என்ன சார்? ஆனால் ஸ்டேஷன் எதுன்னுதான் தெரியலை. எல் அண்டு ஓவா, க்ரைமா சார்?" தன்னுடைய நடிப்பு பலித்து விட்டது என மாதவன்குட்டிக்கு உறுதியாகத் தெரிந்தது. வாட்ச்மேன் தன்னை ஒரு போலீஸ்காரன் என்றே நம்புவது தெரிந்தது. அதுவும் நல்லதுக்குத்தான் என்று தோன்றியது. "எனக்கு ஒரு காரியம் தெரியணும் க்ரைம் பிராஞ்ச் சிலோர்ந்துதான் வர்றேன்." "என்ன விஷயம் தெரியணும் உங்களுக்கு?"

எழுதுவது
சிவன்

"அந்த எலும்புக்கூடு ஒண்ணு காணாமல் போச்சே அதைப்பத்தித்தான்!" "ஓ அதுவா... அது ஒரு அதிசயமான கதை. அது திரும்பக் கிடைச்ச பிறகும் என்னென்னவோ சந்தேகங்களைச் சொல்றாங்க!" "என்ன சந்தேகமாம்?" மாதவன்குட்டி கவனத்துடன் வாட்ச்மேனைப் பார்த்தான். "முதல்ல எலும்புக்கூடு காணாமப் போச்சுங்கிற செய்தி பத்திரிகைகள்ல வந்தது வேறொரு காலேஜில இருந்துதான். அங்க வெறும் மண்டையோடு மட்டும்தான் இருந்ததாம். இங்க வந்து பரிசோதனை பண்ணிட்டு, இங்க இருக்கிற எலும்புக்கூடு அந்த மண்டையோடதுதான்னு சொன்னாங்க. அப்புறம் பார்த்தா எங்க காலேஜ்ல இருந்த எலும்புக்கூட்டுக்கு மண்டையோடு இல்லைங்கிற செய்தி வெளியே வந்தது. "அப்புறம் என்னாச்சு?" மாதவன்குட்டிக்கு அது மிகவும் சுவாரசியமாக இருந்தது. "இங்கேயிருந்து காணாமப் போன தலை திரும்பக் கிடைச்சுடுச்சு." "அப்படின்னா, அந்த காலேஜ்ல இருந்த மிச்ச எலும்புக் கூடெல்லாம் திரும்பக் கிடைச்சிடுச்சா?" "அது போனது போனதுதான் இதுவரைக்கும் கிடைச்சதா தகவல் இல்லை." "அப்ப இதுல என்னமோ பிரச்சினை இருக்கு. கண்டு பிடிக்க வேண்டியதுதான்!" மாதவன்குட்டி தனக்குத் தானே பேசுவது போல பேசிக் கொண்டான். "யாருக்குத் தெரியுது?" "அப்படீன்னா, நான் அந்த காலேஜுக்கும் ஒரு நடை போயிட்டு வரணும். அங்கேயும் விசாரிச்சாக வேண்டியிருக்கே." என்ற மாதவன்குட்டி அங்கிருந்து நடையைக் கட்டினான்.

மாதவன் குட்டி அந்த காலேஜை ஒரு தடவை சுற்றி வந்தான். சற்று நேரத்துக்குள் காலேஜுக்குள் ஏதோ ஓர் இரைச்சல் கேட்டது. மாணவ-மாணவியர் கூட்டம் கூட்டமாக வகுப்பு அறைகளிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர். பெருங்குரலில் அவர்கள் என்னமோ கோஷம் போட்டபடி வந்தனர். மாணவர்கள் போராட்டத்தைத் தொடங்கி இருக்கிறார்கள் என்பது புரிந்தது. "எலும்புக் கூட்டைத் திருடியது யார் என்பது தெரிய வேண்டும்! கல்லூரி நிர்வாகமே உடனே கண்டுபிடி" கோஷங்களில் இதுவும் ஒன்று. அதைக் கேட்டதும் மாதவன் குட்டிக்கு அந்த விஷயத்தில் சுவாரசியம் ஏற்பட்டது. "பிரின்ஸ்பால்தான் இதற்குப் பொறுப்பு. எலும்புக் கூட்டை அவர் யாருக்காவது விற்று விட்டாரா என்பது தெரிய வேண்டும்." நிமிடத்துக்கு நிமிடம் கோஷங்களின் வடிவம் மாறிக் கொண்டிருந்தது. "எலும்புக்கூடு எங்கே?" "கண்டுபிடிப்போம் கண்டுபிடிப்போம் எலும்புக்கூட்டைக் கண்டுபிடிப்போம்." இந்த கோஷங்களுடன் கேட்ட மற்றொரு கோஷம் மாதவன் குட்டியைக் கவர்ந்தது. "எலும்புக் கூடு கிடைக்கவில்லையென்றால் பிரின்ஸ்பாலின் எலும்புக்கூட்டை வெளியே எடுத்துத் தொங்கவிடுவோம்!" இதைத் தொடர்ந்து மாணவர்களின் மத்தியில் சிரிப்பு அலை உயர்ந்தது. கடலின் இரைச்சலைப் போல இருந்தது அவர்களின் சிரிப்பு.

யாரோ ஒரு கெட்டிக்கார மாணவனது ஐடியாவால் சட்டென்று எழுந்த கோஷம் அது. எல்லோருக்கும் அது மிகவும் பிடித்துப் போனது. அதனால் சற்று நேரத்துக்கு அதுவே தொடர்ந்தது. சற்று நேரத்துக்குள் மாணவர்கள் காலேஜ் காம்பௌண்டை விட்டு வெளியேறி ரோட்டுக்கு வந்தனர். அவர்களது வேகத்தைப் பார்த்தால் நேராக இன்னொரு காலேஜை நோக்கித்தான் செல்கிறார்கள் என்பது புரிகிறது. மாணவர்கள் வெளியேறி விட்டதால் வாட்ச்மேன் ஒவ்வொரு அறையின் கதவு மற்றும் ஜன்னல்களையும் மூடத்தொடங்கினார். அவர் தனது வேலைகளை முடித்துக் கொண்டு வருவது வரையில் மாதவன் குட்டி அங்கேயே காத்திருந்தான்.

(வாசனை வீசும்....)

# நன்றியின் இரண்டு முகங்கள்

**நான்** ஆஸ்திரேலியாவுக்கு லை.:.ப் புரோகிராம் நடத்துவதற்காகப் போயிருந்த சமயம், ஆஸ்திரேலியாவில் வசிக்கிற இந்தியர்களும், ஆஸ்திரேலியர்களும் என் நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள். நிகழ்ச்சி முடிந்தபோது, பங்கேற்றவர்கள், நிகழ்ச்சிபற்றிய கருத்துக்கள், விமர்சனங்கள் ஏதாவது இருந்தால் என்னிடம் சொல்லலாம் என்று கூறினேன். அப்போது கருத்து சொன்னவர்களுள், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்தியப் பெண்மணி ஒருவர் சொன்ன கருத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர், "ஸ்வாமிஜி! நீங்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் மிகவும் ப்ராக்டிகலாக இருக்கின்றன. என் வாழ்க்கையில் சந்திக்கும் சில பிரச்சினைகளை புத்திசாலித் தனமாகவும், அடுத்தவர் மனம் புண்படாமலும் தீர்க்க அவை நிச்சயம் உபயோகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், உங்களிடம் நான் சிறு குறையைக் காண்கிறேன்" என்றார்.

நான் வெகு சகஜமாய், "என்ன குறையானாலும் தயக்கமில்லாமல், வெளிப்படையாக என்னிடம் நீங்கள் சொல்லலாம். என்னை நான் திருத்திக் கொள்ள அது உதவும். சொல்லுங்கள்!" என்றேன். உடனே அந்தப் பெண்மணி, "நீங்கள் அவசியமான போதுகூட 'நன்றி' என்று குறிப்பிடுவது கிடையாது. உங்களுக்காக யார் எதைச் சொன்னாலும், செய்தாலும், உடனே 'நன்றி' என்று ஒரு சின்ன வார்த்தையைச் சொல்லுவது தானே பண்பாடு! நீங்கள் அதை உங்கள் சக மனிதர்களிடம் பயன்படுத்துவதே இல்லை என்பதை கடந்த மூன்று நாட்களில் நான் கவனித்தேன்" என்றார். நான் உடனே "குறையைச் சுட்டிக்காட்டியதற்கு நன்றி" என்றேன்.

ஆஸ்திரேலியாவில் லை.:.ப் புரோகிராமை முடித்துக்கொண்டு, அடுத்து.:.ப்ராங்க்பார்ட் நகரத்துக்குப் போனேன். அங்கே ஒரு சர்தார்ஜி தம்பதியின் வீட்டில் தங்க ஏற்பாடாகியிருந்தது. மிக அன்புடன் என்னை அவர்கள் உபசரித்தார்கள். என் புரோகிராம் முடிந்து, .:.ப்ராங்க்பார்ட் நகரத்திலிருந்து புறப்படும் நாளன்று, அவர்கள் என் காலில் விழுந்து வணங்கினார்கள். நான் அவர்களுக்கு ஆசி கூறிவிட்டு, "என்னை மிக அன்போடு கவனித்துக் கொண்டீர்கள். உங்கள் அன்புக்கு என் மனமார்ந்த நன்றி" என்றேன்.

அந்த சர்தாஜியின் மனைவி முகத்தில் ஒரு திடீர் மாற்றம். ஏதோ சொல்ல வந்தவர், சட்டென்று நிறுத்திக் கொண்டார். அவர் தயக்கம் எனக்குப் புரிந்தது. "என்ன தயக்கம் சொல்லுங்கள்!" என்றேன். சர்தார்ஜி "என்னவென்று சொல், ஸ்வாமிஜி கேட்கிறாரில்லையா?" என்றார். அந்தப் பெண்மணி, தயங்கித் தயங்கி "ஸ்வாமிஜி! நீங்கள் எங்கள் வீட்டில் வந்து சில நாட்கள் தங்கியிருந்ததை பெரும்பாக்கியமாக நாங்கள் கருதுகிறோம். ஆனால் நீங்கள், எங்களை ஏதோ அந்நியர் போல நினைத்து, தண்ணீர் கொடுத்தால் தேங்க்ஸ், தண்ணீர் குடித்த தம்ளரை வாங்கிக் கொண்டால் தேங்க்ஸ், உணவுக்கு அழைத்தால் தேங்க்ஸ், சாப்பாடுபோடுகிற போது தேங்க்ஸ், சாப்பிட்டு முடித்தவுடன் தேங்க்ஸ், எப்போது பார்த்தாலும் தேங்க்ஸ், தேங்க்ஸ், தேங்க்ஸ்தான்! இது எங்களை மிகவும் தர்மசங்கடப்படுத்தி விட்டது. தயவுசெய்து வேறு யாரிடத்திலும் இத்தனை தேங்க்ஸ் சொல்லி அவர்களை தர்மசங்கடப்படுத்தி விடாதீர்கள்.." என்றார். தொடர்ந்து, "மனதில் தோன்றியதை வெளிப்படையாகப் பேசிவிட்டேன்! தயவுசெய்து தவறாக நினைத்து விடாதீர்கள்" என்றார் அந்தப் பெண்மணி!

நான் மனதுக்குள் இதற்குமுன் ஆஸ்திரேலியாவில் ஒரு பெண்மணி சொன்னதை நினைத்துக் கொண்டேன். அதை அந்த சர்தார்ஜி தம்பதிக்குக் கூறினேன். இந்த இரண்டு சம்பவங்களையும் நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், நன்றி சொல்லுவது என்கிற உலகளாவிய பழக்கம் இரண்டு சமயங்களிலும் எப்படி நேரெதிராகப் பார்க்கப் பட்டது என்பதைக் கூறுவதற்காகத்தான்.




இதுபோலத்தான் குடும்பம் என்கிற தத்துவமும், இந்தியாவிலும், மேலை நாடுகளிலும் நேரெதிரான அணுகு முறையைக் கொண்டுள்ளது. மேலை நாடுகளில் குடும்பம் என்பது, இரண்டு தனிமனிதர்களின் சேர்க்கை, குழந்தைகளும் அங்கே தனிமனிதர்களாகத்தான் நோக்கப் படுகிறார்கள். சுதந்திரம் - தனி மனித சுதந்திரம் இதுதான் அங்கே பிரதானம். கணவன், மனைவி, குழந்தைகள் என்ற தனி மனிதர்களின் சுதந்திரத்துக்கு அப்புறம்தான் அங்கே குடும்ப உறவு. எந்த ஒரு விஷயமானாலும் தனி மனித சுதந்திரத்துக்குப் பாதகமில்லாமல் இருக்கிறதா என்றுதான் பார்க்கிறார்கள் அங்கே. மனைவிக்கு தன் சுதந்திரத்தில் தனது கணவன் தலையிடுவது பிடிக்காது. கணவனின் சுதந்திரத்தில் மனைவி தலையிட முடியாது. குழந்தைகளுக்கு, தங்கள் பெற்றோர் என்றாலும்கூட, தங்கள் சுதந்திரத்தில் குறுக்கிட்டால் பிடிக்காது. அக்கம் பக்கத்தார் சுதந்திரத்தில் நாம் தலையிட்டால் அவர்கள் கோர்ட்டுக்கே போய் விடுவார்கள். அங்கே சட்ட திட்டங்களும் அதற்கேற்றபடிதான் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

ஆனால், இந்தியாவில் அப்படிக் கிடையாது. திருமணத்துக்கு முன்பு இருக்கிற வளர்ப்புச் சூழ்நிலை, ஒரு பெண்ணின் திருமணத்துக்குப்பின் முற்றிலுமாக மாறிவிடுகிறது. பெற்றோர்களின் அரவணைப்பில் வளர்ந்த பெண் தலையில், குடும்பப் பொறுப்பு என்கிற பாரம் திருமணமாகியவுடன் புகுந்த வீட்டில் ஏற்படுகிறது. புகுந்த வீட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப, அந்தப் பெண் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயமான சூழ்நிலை இங்கே பண்பாடாகக் கருதப்படுகின்றது. இங்கே, குடும்பத்தின் அடிப்படை அன்பும், பாசமும்தான். விட்டுக் கொடுத்துக் கொள்ளுதல், அனுசரித்துப் போவது இவைதான் குடும்ப உறவின் ஆதார சுருதியாக இருந்து, குடும்பம் என்ற வண்டியை இயக்கச் செய்கின்றன. 'அன்பு என்பது தெய்வீகமானது' என்றுதான் பண்டைக் காலம் தொட்டை, கபீர்தாசர் போன்ற ஆன்மீகப் பெரியோர்களால் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது.

மேற்கத்திய நாடுகளில் தனி நபர் சுதந்திரம் என்பது அன்பினால் பாதிக்கப்படுகின்ற விஷயம் என்ற கருத்து நிலவுகிறது. அன்பு என்பது மனிதர்களைக் கட்டிப்போடுகிற விலங்கு இல்லை என்பது அவர்களுக்குப் புரியவே இல்லை. உண்மையில், அன்பு என்பது சுதந்திரத்தையும் உள்ளடக்கியதுதான். கணவன், மனைவி இரண்டு பேரும் அன்புடன் வாழ்ந்துகொண்டே சுதந்திரமாகவும் இருக்கமுடியும். சுதந்திரமாய் வாழ்கிறபோதே ஒருவர் மீது ஒருவர் அன்பைப் பொழியவும் முடியும்.

அன்பு அதிகமாக இருக்கிறபோது, பொறுத்துக்கொள்ளுகிற குணமும், சகிப்புத் தன்மையும். அதிகமாகும். இதனால் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வளரும். இதனால் இல்லற உறவு பலப்படும். இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். நம் நாட்டில் 'அன்பு' அடிப்படையிலான இல்லற உறவிலும் 'கரும்புள்ளி' இல்லாமல் இல்லை. அதையும் நாம் ஒப்புக்கொள்ள தயங்கக்கூடாது.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 151

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | ■ | 16 | 17 | ■ |
| 19 | 20 | 21 | 22 | ■ | 24 |
| 25 | ■ | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | ■ | 36 |

### இடமிருந்து வலம்

1. கிறிஸ்தவர்களின் புனித தினமொன்று.
7. இந்துக்களின் வழிபாடுகளில் ஒன்று (குழம்பியுள்ளது).
11. கடையேழு வள்ளல்களில் ஒருவன் (திரும்பியுள்ளது).
13. சிம்பு நடித்த திரைப்படம் ஒன்று.
16. காட்டு மிருகமொன்று (திரும்பியுள்ளது).
19. முகம் என்றும் பொருள்படும்.
27. ஆகாயம் என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
31. தொடர்பாடல் சம்பந்தமானவற்றை குறிப்பிடும் சொல் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. பூஞ்சோலை என்று குறிப்பிடலாம்.
2. இருள் அல்லது இரவு என்று பொருள் (குழம்பியுள்ளது).
3. மருத்துவப் பணியில் இவர்களின் சேவை அளப்பரியது.
6. ஐவகை நிலங்களில் ஒன்று (தலைகீழ்).
11. மழைகாலம் என்று பொருள் (தலைகீழ்).
16. துளை என்று பொருள்படும் (குழம்பியுள்ளது).
21. குறைபாடு என்று கொள்ளலாம் (குழம்பியுள்ளது).
24. குதிரை (குழம்பியுள்ளது).

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 149க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

அ. சந்தியாகோ, அசோகா வித்தியாலயம், கண்டி.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. சி.சஜித்தா, 43/1, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.
2. பி.ரதிமலர், 209, மார்க்கண்டு வீதி, பாண்டிருப்பு - 01, கல்முனை.
3. கே. அஸ்காப், 16, அரலிமாவத்தை, பங்களாவத்தை, மாபொல, வத்தளை.
4. கே. அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
5. க. நிரஞ்சன், 22, பிரதிபிம்மராம வீதி, களுபோவில.
6. எம். சாந்திகுமார், அரச கால் நடை மருத்துவ நிலையம், மஸ்கெலியா.
7. சி. உமாபதிசிவம், 333/3 F, சென் அந்தனிஸ் மாவத்தை, ஹெந்தலை வத்தளை.
8. திரு. கனகசபை, பூந்தோட்டம், வவுனியா.
9. ராதிகா, தாராபுரம், மன்னார்.
10. பாத்திமா பௌமியா, பிரதான வீதி, அக்கரைப்பற்று.

## குறுக்கெழுத்துப் போட்டி 149 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மி 1 | ன் 2 | கு 3 | மி 4 | ழ் 5 | ■ |
| ன் 7 | ■ | ண் 9 | சா 7 | ■ | ம் 12 |
| ன 13 | ■ | டு 15 | ■ | தி 17 | க 18 |
| ல் 19 | ஆ 20 | ■ | ■ | ம 16 | டு 24 |
| ■ | தை 26 | ரா 27 | ■ | ய் 29 | ஏ 30 |
| ரை 31 | ந் 32 | தா 33 | ம 34 | செ 23 | ■ |

### போட்டி விதிகள்:


இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 03.01.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-151
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்



**- வழங்குவது றாஹில்**

## கண்களின் வணக்கம்

**நாவு** பிரமிக்கும்போது உன் வயிறு குதூகலிக்கிறது. சுவைகளால் உன்னை மூடுகிறாய்.

உனது உடல் உனக்கு இனிக்க வேண்டாமா?

உன் மனம் மகிழக் கூடாதா?

விழிகளால் நீ விருந்து வைக்கும்போது உன் குருதி தேனாக வேண்டும்.

கண்கள் என்ற 'சுவிச்' அழுத்து. உன் மனதில் மின் குமிழ்கள் எரிவதற்கு.

உணவு உண்ணுதல், தாகம் தணித்தல் மிருகங்களுக்கும் உண்டு.

நீ, பசி போக்கவும், தாகம் விலக்கவுமா இங்கே பூத்தாய்?

உன் புன்னகை விழிகளில் வசிக்கிறது.

உன் ஆனந்தம் பார்வையில் கூடு கட்டியிருக்கிறது.

உன் மனது துள்ள வேண்டுமா? அது பட்டாம் பூச்சியாக வேண்டுமா?

கோடி விண் மீன்கள் உன் மனதில் பூக்க வேண்டாமா?

நீ கண்களால் கவிதை எழுது; பார்வையால் அழகு பருகு!

உன் விழிகளால் விளக்கேற்று!

மலர்களைக் கண்களால் வணங்கு!

நிலவை மனதால் அழைத்து உரையாடு!

தாரகைகளுடன் உறவாடு!

நீர்வீழ்ச்சிகளின் வெண்நீர்ப் புகையைச் சுவாசி!

நதிகள் அசைவு வாசி!

மீன்கள் பாசை ஒட்டுக் கேள்!

மழைத் துளிகள் எண்ணிக்கை செய்! அதன் குளிர்ச்சி எடுத்து உன் நேரங்கள் நிரப்பு!

பசுமை நிறம் கறந்து மனதில் ஊற்று!

சிறகு விலங்குகள் குரல் வாங்கிவை! இப்படி.....

இயற்கை ஆனந்த வீடு என்பதைக் கண்டுபிடி!

உன் மனது இயற்கையால் நிறையும் போது உன் வயது இளமை பூசுகிறது.

சுவைத்தல் நாவுக்கு மட்டுமா உரியது? அது கண்கள் பாசை.

நீ ரசனை விருந்து வைக்கும் போது உன் மனது அழகாகிறது.

உன் குருதியில் மல்லிகை மணம் நுழைகிறது.

ருசிப்பதற்கு மட்டுமுரியதல்ல வாழ்க்கை. அது ரசிப்பதற்குமுரியது.

கோடைவெயில் என்றாலும் உன் இதயத்தில் வாடைக் குளிர் வீசுகிறதா?

நீ கண்களைக் காதலிக்கிறாய். உன்னை மீட்டும் முதல் விரல்கள் உன் கண்கள் என்பதைக் கண்டறி!

உன்னிடம் இதயம் இருப்பதை ரசனைதான் அடையாளம் செய்கிறது.

உன் விழிகள் முட்கள் மட்டும் தொடுகின்றனவா?

உன் மொழிகள் வெறும் கற்கள் பற்றிப் பேசுகின்றனவா?

உன் ரசனை உன்னை விட்டுப் பிரிந்திருக்கிறது.

உன் மனதின் மகா உணர்வு ரசனைதான்.

உனது கற்பனைகளுக்கான அழைப்பிதழ் அது.

இலவசமான அறுசுவை. ஆனால் வைரங்களை விடப் பெறுமதியானவை.

தூவிக் கிடக்கின்ற இயற்கை அழகை உன் கண்கள் திருடாமல் இருந்தால்

நீ துருப்பிடித்திருக்கிறாய். உன் இதயம் இரும்பாக இறுகியுள்ளது.

நீ அழகை அர்ச்சிக்கும் போது உன் இதயம் மிக மென்மையாகிறது.

அழகு கண்களின் அறிவு. அது மனதின் வெளிச்சம்.

உன் கண்களை அழகில் நீ நனைக்காது விட்டால் உன் இமைகள் திறந்திருந்தும் பயனில்லை. கண்கள் உனக்குச் சுமைதான்.

உன் சுவையின் வாசல் கண்கள்தான்.

நீ கண்களின் சக்தியை அங்கீகரிக்கும் போது இயற்கை உன்னில் அதிசயம் செய்கிறது.

அற்புதம் வளர்கிறது உன் மனதில்.

இயற்கையின் இனிமை நீ அருந்தும் போது இறை சக்தியைக் கற்கின்றாய்.

# நட்புக்கு ஏது எல்லை?

**அருண்** தனது நண்பர்கள் வழமையாகக் கூடி நிற்கும் அந்த வேப்ப மரத்தடிக்கு வந்தான். "டேய் மதன் அங்க பார் அருண் வாறான்" என்றான் அருணின் நண்பன் ஜீவா. "ஓமடா அவன் சொன்ன நேரத்திற்கு வருவான். ஆனா அவனிட்ட ஒரு பழக்கம் நாம சொல்லிற ஒண்டையும் கேட்கமாட்டான். குடியடா என்டா குடிக்கமாட்டான். தம்மடியடா என்டா அடிக்க மாட்டான். இவன என்னண்டுதான் எங்கடை வழிக்குக் கொண்டுவாறதோ தெரியேல்ல" என்று அலுத்துக் கொண்டான் மதன்.

"டேய் டேய் நிற்பாட்டுங்கடா. ஏனடா நீங்களும் கெட்டு மற்றவனையும் கெடச் சொல்லிறியள். உங்களுக்கு எத்தனை நாளாடா சொல்லுறது குடிக்காதீங்கோ எண்டு. தீபாவளி வந்தால் உங்களுக்கென்னடா, நீங்க குடிச்சுத்தான் ஆக வேண்டுமா? சட்டமா? இந்தச் சின்ன வயசில, இளம் வயசில ஏனடா குடிச்சுக் குடிச்சு குட்டிச் சுவராப் போறீங்கள். நான் சொல்லுறது எங்க உங்களுக்கு விளங்கப் போகுது. எல்லாம் செவிடன் காதிலை ஊதின சங்குதான்" என்றான் அருண்.

இவர்கள் மூவரும் இணைபிரியா நண்பர்கள். ஒரே ஆண்டில் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள். "டேய் அருண் அங்க பார்டா! பிரியா வாறாள். இண்டைக்கு எப்பிடியாவது அவளிட்ட உன் காதலை சொல்லிடடா?" என்றான் ஜீவா. "ஆமடா" என்றான் அருண். பிரியா இவர்களுடன் ஒன்றாகப் படிக்கும் மாணவி அருண், பிரியாவுடன் ஆரம்பத்தில் நட்பாகத்தான் பழகினான். ஆனால் போகப் போக, அது அவனை அறியாமல் காதலாக மலரத் தொடங்கியது. அவளுடைய திறமையும் அழகும் அவனைக் கவர்ந்தது. அருண், பிரியாவை தனது இதய தேவதையாக ஏற்றுக்கொண்டான். இதை அவனின் நண்பர்களிடம் கூறும்போது, "அவர்கள் பூசலார் மனசிலை இறைவனுக்குக் கோயில் கட்ட, இறைவன் வந்து அவருக்கு காட்சியளித்த மாதிரி, நீயும் பிரியாவ உன்ர மனசிலை நினைச்சுக்கொண்டு திரிய அவள் வந்து உன்ர காதலை ஏற்றுக்கொண்டன் என்று சொல்லமாட்டாளடா.

நீ நேரில போய் அவளிட்ட உன்ரை காதலை சொல்லடா. இல்லையெண்டால் என்ன சாத்திரமா பார்க்கிறது. இண்டைக்காவது சொல்லிடடா" என்றார்கள். இன்று எப்படியும் பிரியாவிடம் சொல்வது என்று நினைத்த அருண், பிரியாவிடம் சென்று "பிரியா உன்னோட கொஞ்சம் தனியாகப் பேசவேணும் என்றான். அருணைப் பார்த்து புன்னகைத்துவிட்டு, தன்னுடன் வந்த நண்பிகளைப் போகுமாறு சைகை செய்தாள். என்ன அருண் என்ன விஷயம்" என்று கேட்ட பிரியாவிற்கு "அது வந்து எனக்கு சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது. அதனாலை நேரடியாகவே சொல்லிறன். நான் உன்னை விரும்புறன் பிரியா, உன்னைக் காதலிக்கிறன். ஐ லவ் யூ பிரியா என்றான். பிரியா மௌனமானாள். அவள் அழகு மௌனத்தில் பூசித்தது. அவளது நாணம் சம்மதம் என்பதை அருணுக்கு விளங்க வைத்தது. "பிரியா சம்மதம் தானே?" என்ற அருணுக்கு 'சம்மதம்' என்று மெல்லத் தலையை அசைத்துச் சொன்னாள். அருணின் இதயத்தில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடித்துப் பறந்தன. அவனுடைய சந்தோஷத்திற்கு அளவே இல்லை. பிரியாவைத் தனக்கு இறைவன் கொடுத்த வரப்பிரசாதமாகக் கருதினான்.

நான்கு மாதங்கள் சந்தோசமாகக் கழிந்தன.

அன்று ஒரு நாள் பிரியா அருணிடம் வந்து "அருண் நான் உங்களை காதலிக்கிறது உண்மைதான். உங்களை எனக்குப் பிடித்திருக்குதுதான். ஆனால் உங்கட நண்பர்கள் சரியில்லை. அவங்களைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கேல்லை. அதனாலை நீங்கள் அவங்களை விட்டிடுங்க" என்றாள். "என்ன பிரியா சொல்லிறாய்? நீ வாழப் போறது என்னோடதானே. அவங்களோட இல்லையே. அவங்க எப்படி இருந்தாலும் உனக்கென்ன. நான் நல்லவனா இருந்தாச் சரிதானே" என்றான் அருண். "இல்லை உங்கள என்னெண்டு நம்புறது. நீங்களும் அவங்களோட சேர்ந்து குடிக்கிறியளோ யார் கண்டது என்றாள் பிரியா. "பிரியா உன் மேலை சத்தியமா, நம்ம காதல் மேலை சத்தியமாச் சொல்லுறன் பிரியா, நான் குடிக்கிறதே இல்லை. என்ன நம்பு பிரியா. நம்பிக்கைதான் பிரியா வாழ்க்கை. நீ இப்படியே சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தால் கடைசியா எங்கட வாழ்க்கை கேள்விக்குறியாகத்தான் போய்விடும். என்னை நம்பு பிரியா. அருண் அழாக் குறையாகச் சொன்னான். "நீங்கள் ஆயிரம் தான் சொன்னாலும் நான் நம்பத் தயாராயில்ல. அப்பிடி எண்டால் ஒண்டு செய்தால் மட்டும் நம்புவன்" என்றாள் பிரியா.

"என்ன சொல்லு....?"

"உங்கட நண்பர்கள நீங்கள் விட்டிட வேணும். அவங்களோட சேரக் கூடாது."

"அருண் யோசித்தான். மதனும், ஜீவாவும் இவனுடைய உயிர் நண்பர்கள். இருவரும் அவனது இரண்டு கண்கள் போன்றவர்கள்.




அவனுக்கு எவ்வளவோ உதவிகள் செய்தவர்கள். அவனது தந்தையின் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு அவர் செய்வதறியாது வீட்டில் இருந்தபோது, மதனும், ஜீவாவும் அவருக்கு பண உதவிகள் செய்து அவரை நல்ல நிலைக்குக் கொண்டுவந்தவர்கள். அருணைத் தமது உயிராக நேசிப்பவர்கள். அவர்கள் மூவரையும் பார்த்து அந்த தீவிலுள்ளவர்களே 'மூவேந்தர்' என்று கூறும்போது அவன் சந்தோஷப்படுவான். அவனுக்காக அவனது நண்பர்கள் உயிரையும் கொடுப்பார்கள். இப்படியான நண்பர்களைப் பிரியச் சொல்லிச் சொல்கின்றாளே என்று நினைத்து வேதனைப்பட்டவன், பிரியாவிடம் தனது நண்பர்களைப் பற்றி எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவள் கேட்கவில்லை.

ஒரு தீர்மானத்துடன் பிரியாவை நோக்கினான். "என்னாலை முடியாது பிரியா. அவங்களை வெறுக்க என்னாலை இயலாது" என்றான்.

"அப்பிடி எண்டால் என்னை விடுறன் எண்டு சொல்லிறியள், அப்படித்தானே?" என்றாள். "ஆண்டவனின்ர திருவிளையாடலில் இதுவும் ஒண்டு எண்டு நினைச்சு நான் சென்று வருகிறேன்" என அவளிடம் சொல்லிவிட்டு வந்தான். "என்னை மறந்திடுங்க" என அவளுக்கு மீண்டும் மீண்டும் சொல்லிவிட்டு வந்தான். இதற்கிடையில் எங்கோ வகுப்பறையில் இருந்துவிட்டு வந்த அருணின் நண்பர்களிடம் அருண் நடந்தவற்றைக் கூறினான்.

"டேய் அருண் உனக்கு விசராடா? ஏன்ரா அவளை வேண்டாம் என்று சொன்னனி? உன்னை அவளோட சேர்த்து வைக்க நாங்கள் எது வேணுமெண்டாலும் செய்வமடா. நீ அவளோட வாழுறதுக்காக நாங்கள் உன்னைப் பிரிஞ்சிருக்கிறது எங்களுக்கு ஒண்டும் கஷ்ரம் இல்லையடா. நீ சந்தோசமா இருந்தால் காணும்" என்ற நண்பர்களை இடைமறித்துப் பேசினான் அருண்.

"என்ர வாழ்கைக்காக நீங்கள் நட்பைத் தியாகம் செய்ய நினைச்சால், உங்களுக்காக நான் பிரியாவைத் தியாகம் செய்யிறதிலை ஒண்டும் தப்பில்லை. இனிமேல் இதைப்பற்றி யாரும் கவலைப்படக் கூடாது. காதலிச்ச நாட்கள் எல்லாம் கனவுபோல் ஆகிவிட்டன. நான் சொன்னால் சொன்னதுதான். தெரியும்தானே. வாங்கடா போவம்" என்று நண்பர்களின் தோள்களில் கை போட்டுக் கொண்டே நடந்தான் அருண்.

*(யாவும் கற்பனை)*

# ஆழிப்பேரலை

**ஒன்றை** ஒன்று துரத்திப் பிடிக்க முயன்று தோற்றுப்போன அலைகள் கரையில் நுரையாய் சங்கமிக்கும் அந்த அழகைக் கூட இரசிக்க முடியாதபடி, கனத்துப் போயிருந்த மனதோடு கடற்கரை ஓரமாக அமைந்திருக்கும் அந்தப் பாதையால் நடந்து கொண்டிருந்த என்னை இதமான காலைச் சூரியனின் இளம் கதிர்கள் கூட சுட்டெரிப்பது போன்ற உணர்வு என்னுள் உறுத்தியது. வீதியின் மேற்கே கோலம் மாறிப்போயிருக்கும் கடலாட்சியம்மன் கோவில் கண்ணில் படவே, வீதியில் நின்றபடியே அம்மனை தரிசித்துவிட்டு பயணத்தைத் தொடர முற்பட்டவேளை வீதியை மறித்தபடி என்னைத் தடுப்பது போல் நடுவே நின்றிருந்த கண்ணம்மா "டேய் தம்பி எங்கடா என்ர பிள்ளைகள்? என்ர செல்லக் குஞ்சுகள எங்கடா மறைச்சு வெச்சிருக்கயள்? என்ர செல்வங்கள தாங்கோவனடா. கடலாச்சியம்மாளே" என்ர பிள்ளயள காட்டிடு என அழுதபடி தலைவிரி கோலமாய் நின்றாள். அவள் விழிகளிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. கண்ணம்மாவின் உதடுகள் இன்னும் ஏதேதோ வார்த்தைகளை உச்சரித்தன. ஆறுதலாக சமாதானம் சொல்ல நான் வாயெடுத்தபோது "அந்தா...அந்தா..என்ர செல்லக் குஞ்சுகள் வருகுதுகள். நான் போறன்...நான் போறன்" என உரத்துக் கூவியபடி கடலை நோக்கி ஓடினாள் கண்ணம்மா. அந்தக் காட்சி என் விழிகளில் நீர் ததும்ப வைக்கவே மீண்டும் நடக்கத் தொடங்கிய என் நினைவுகளில் கண்ணம்மாவின் கடந்த காலம் நிழலாடியது.

பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் போர் அரக்கன் போர்த்திவிட்ட வெள்ளைச் சேலையோடு விதவைக் கோலத்தில் தன் இரு குழந்தைகளையும் காப்பாற்றிக் கொள்ளவென வாகரைக் கிராமத்தில் இருந்து வந்திருந்தாள் கண்ணம்மா. எங்கள் நாவலடிக் கிராமம் கண்ணம்மாவை கைவிடவில்லை. இடியப்பம், தோசை சுட்டு விற்றதோடு நின்றுவிடாமல், மீன் வாடிகளிலும் தன்னால் முடிந்த கூலி வேலைகளைச் செய்து தன் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினாள் கண்ணம்மா. என் வீட்டுக்குப் பக்கத்தில்தான் கண்ணம்மாவின் குடிசை இருந்தது. 'தம்பி...தம்பியென' என் மீது பாசம் வைத்திருந்த கண்ணம்மா, தான் காதலித்து கைப்பிடித்த கணவனை பொல்லாத போர்ப் பசிக்குப் பறிகொடுத்துவிட்டு வெறுமையாய் வந்த கதையை என்னிடம் சொல்லி பல நாட்கள் அழுதிருக்கிறாள். இன்னும் நான் வாழ்வது என் பிள்ளைகளுக்காக மட்டும்தான் என்பாள். கண்ணம்மா மிகவும் பக்தியானவள். ஒவ்வொரு வாரமும் செவ்வாயும் வெள்ளியும் கடலாட்சியம்மன் கோயிலுக்கும், காயத்திரியம்மன்



கோயிலுக்கும் போகத் தவறவே மாட்டாள். "என்னக்கா இது" என நான் கேட்டால் "அந்தத் தெய்வங்கள் தான் என்ர பிள்ளைகள காப்பாத்தணும்" என்பாள்.

அன்றொரு நாள் வெள்ளிக்கிழமை காயத்திரியம்மன் கோயிலடியில் என்னைக் கண்ட கண்ணம்மா "என்ன தம்பி ரவுணுக்குப் போய் வாறாப் போல இரிக்கி. என்ன விசேசம்" எனக் கேட்க, "நான் அரசடி வரைக்கும் போய்வாறன் அக்கா. நம்மட கல்லடிப் பாலத்துக்கு கீழ ஆத்துக்குள்ள லச்சக்கணக்கில பாம்புகள் ஓடித் திரியுது. பாலத்துல நிறைய சனமெல்லாம் நிண்டு பாக்குதுகள். அதுக்குள்ள சில ஆக்கள் கதைக்கிறாங்க ஏதோ பெரிய அழிவு வரப் போகுதாம் எண்டு" நான் முடிக்க முன்பே சிரித்தபடி.... "என்ன தம்பி நாம காணாத அழிவா? இந்தப் போரால எவ்வளவு அழிவ கண்டிருப்பம். அதுகளவிட இனிமேல் பெரிசா ஒண்டும் வராது தம்பி. அப்பிடி ஏதும் வந்தாலும் இந்தக் காயத்திரி அம்மன் நம்மள காப்பாத்துவாள். கவலப்படாம போ தம்பி" என்றபடி கண்ணம்மா காயத்திரியம்மன் கோயிலுக்குள் நுழைந்தாள்.

ஆனால் கண்ணம்மாவின் எண்ணத்தில் இடிவிழுந்தது போல்தான் அன்று நத்தாருக்கு மறுநாள் காலையில் கடலுக்குள் இடியோசையொன்று கேட்டது. இந்தக் கிராமத்துக்கே வாழ்வளித்த எங்கள் கடலன்னை, கோபம் கொண்டெழுந்து ஊரையே ஆக்கிரமித்து ருத்திர தாண்டவம் ஆட, பெரியோர் முதல் பிஞ்சுகள் வரை அபயக்குரல் எழுப்பியபடியே ஆழி நீரால் அள்ளுண்டு செல்ல சில மணிப் பொழுதில் அந்தப் பிரளயமே நடந்து முடிந்தபோது.... உறவுகளை இழந்து உயிர் தப்பியவர்கள் எழுப்பிய துயர ஓலம் கரையோரப் பிரதேசமெங்கும் காற்றோடு கலந்தது. கல்லடிப் பாலம் தாண்டி கச்சேரியடியில் கரையொதுங்கி மயங்கிக் கிடந்த கண்ணம்மா நினைவு தெளிந்து கண் விழித்து எழுந்தபோது ஓவென அலறினாள். தன் கண்முன்னேயே பிள்ளைகளை கடல் நீர் காவு கொண்டதை நினைத்து எழுந்து ஓடினாள். தன் செல்வங்களைத் தேடினாள். அவள் முயற்சி தோற்றுப்போனதாய் உணர்ந்தபோது அவளுக்கே தெரியாமல் வாரம் ஒன்று கழிந்திருந்தது. தன் பிள்ளைகளின் உயிரற்ற உடலைக்கூட காணாத ஏக்கத்தில் கண்ணம்மா புத்தி பேதலித்துப் போனாள்.

ஆம்! கண்ணம்மா இப்போது பைத்தியம். யாரையாவது கண்டால் தன் பிள்ளைகளை கேட்டு அழுவாள். பின்னர் கடலை நோக்கி ஓடுவாள். கரையில் நின்று அழுவாள். மீண்டும் திரும்பி வருவாள். இவளைப் போல் இன்னும் எத்தனையோ கண்ணம்மாக்களை எங்கள் கிராமத்தில் உருவாக்கிவிட்டுப் போன 'சுனாமி'க்கு இன்று வயது ஒன்று.

**-ஆரையம்பதி இதயம்**

"என்ன அண்ணே! அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகப் போகுது. கெதியா வாங்கோவன்." தம்பி தர்மனின் குரல் என் நினைவுகளைக் கலைத்துவிட, கடந்த வருடம் இதே நாள் சுனாமி காவு கொண்ட உயிர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டியும் உறவுகளை இழந்து தவிக்கும் கண்ணம்மாவைப் போன்றவர்களுக்கு ஆறுதல் வேண்டியும் நடைபெறும் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொள்ள விரைவாக நடக்கிறேன் நான்.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

சிந்திக்கத் தெரிந்த மனித இனத்துக்கு சிறுமை, பெருமை பற்றித் தெரிந்துகொள்ள முடியாமலிருப்பதற்குக் காரணந்தான் என்ன? என்பதே இன்று அறிஞர்களிடையில் எழுந்துள்ள கேள்வியாகும். இந்கேள்விக்கு விடைகாண முற்படும் பொழுதுதான்; அரிதான வல்ல செயல்களைச் செய்ய முற்படுவோர் சிலராகவும் அதை வெறுப்பவர் பலராகவும் உள்ளதால் நற் செயல்கள் அருகிப்போயுள்ளன.

இதை வைத்துக் கொண்டுதான் வள்ளுவப் பெருந்தகை

*"செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்"*

என்று பெரியோரின் இயல்பை வரையறுத்துள்ளார் என்பதை ஒரு நிமிடமாவது சிந்திப்போமா?

## கண்டதும் கனிகிறதே உள்ளம்

**மார்பில்** சாய்ந்தவள் மயக்கத்திலிருந்து விடுபட மணிக்கணக்காகிவிட்டது. தன்னை விடுவித்துக் கொண்ட செண்பகவல்லியின் முகத்திரை நாணத்தால் சிவந்திருந்ததை அருள்வர்மனின் கண்கள் ஆராய்ந்து கொண்டிருந்தன. அதைக் கவனித்த செண்பகவல்லி "என்ன அப்பப் பார்க்கிறீர்கள்". என்றவாறு அவன் முகத்தை ஓரக் கண்ணால் ஜாடையாகப் பார்த்தாள். அந்தப் பார்வையில் நீங்கள் பெரும் கெட்டிக்காரர்தான் போங்கள் என்று கூறுவது போலிருந்தது.

அருள்வர்மனின் முகத்தில் பெருமிதம்



குடிகொண்டிருந்ததை அறியாதவள் போல் "என்ன போர்க்களம் என்ற நினைப்போ?" என்ற கேள்வியில் பெருமிதம் கலந்த ஏளனம் தொனித்தது. அவன் அவளை பரிவோடு பார்த்தான். எத்தனையோ களங்களைக் கண்டு வந்த தனக்கு காதல் களம் புது அனுபவம்தான் என்பதைப் போலி

தருவது
**கற்பகன்**

ருந்தது அவனுக்கு. வாய் விட்டுச் சிரித்து விட்டாள். "பெண்களுக்குத்தான் நாணம் அணிகலன் என்பார்கள். உங்களுக்குமா? அது"

"நல்ல வீரனுக்கும் நாணம், ஒரு இலக்கணம் என்பதை நீ அறியவில்லையோ?"

"அறிவேன், ஆனால் உங்களுக்கு அது கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது."

இதைக் கேட்டதும் அவன் அவளைப் பார்த்து முறைத்தான். அந்தக் கணத்தில் அவன் கண்களை அவளால் எதிர்கொள்ள முடிய வில்லை. தலை குனிந்து கொண்டாள். அவன் எதுவும் பேசவில்லை. அது அவளுக்கு பெரும் சங்கடமாகி விட்டது. விளையாட்டாகப் பேசியதில் ஏதும் விபரீதமாகி விடுமோ என்ற கலக்கம் முகத்தில் படர்வது அவள் தயங்கி நிற்பதிலிருந்தே தெரிந்தது அவனுக்கு. இருவரும் மௌனமாகி விட்டார்கள். பொன்னான பொழுது வீணாகிறதை இருவரதும் மனதுக்குள் பொங்கிவரும் உணர்வுகள் நினைவுபடுத்தாமலில்லை. துடிக்கும் இள உள்ளங்களின் உணர்வலைகளின் தாக்கங்கள் இயல்பானதே! இதில் உடல் ஒரு பொய்யான கௌரவத்தை ஏற்படுத்திவிடுவதுதான் காதலில் ஓர் பெரும் சிறப்பம்சம். அந்த எதிர்பாராத நிகழ்வுதான் இங்கும் மேலோங்கி நின்றது.

ஊடலில் தோல்வி தான் வெற்றி என்பது சம்பந்தப் பட்டவர்களுக்குத் தோன்றா விடினும், சூழ்நிலை இருவரில் ஒருவருக்கு வெற்றியைத் தந்து விடுகிறது.

**தாபமிகுதியில்** இருவரும் தங்களைத் தாங்களே சபித்துக் கொண்டார்கள் போலும். பெண்களுக்கே பிடிவாதம் சொந்தம் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் பெண்களாயிற்றே! அருகிலிருந்த ரோஜாச் செடியிலிருந்த மலரைப் பிடுங்கிக் கையில் வைத்துக் கொண்டிருந்த செண்பகவல்லி, அதன் இதழ்களை ஒவ்வொன்றாகப் பிரித்து நிலத்தில் தூவிக் கொண்டிருந்தாள். இதைப் பார்த்துவிட்ட அருள்வர்மனுக்கு அவனை அறியாமலே சிரிப்பு மேலிட்டாலும், அடக்கிக் கொண்டு கேட்டான்.

"என் மேலுள்ள கோபத்தை மலரின் மேல் காட்டி என்ன நடக்கப் போகிறதோ? அந்த மலர் செய்த பாவம் அதற்கு இப்படியொரு நிலைமை" என்றான் கிண்டலாக.

"மலர்களுக்கு ஏமாற்றத் தெரியாதுதான்; ஏமாறுபவை தானே! அதனால்தான் கசங்கி விடுகின்றன. இந்த ரோஜா மலரைப்போல" என்றவள், ஒயிலாக இரண்டு மூன்று அடிகளை முன்னால் எடுத்து வைத்து, அவனுக்கும் தனக்குமுள்ள இடைவெளியை நீட்டிக் கொண்டாள். ஆயினும், அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை அவன் கணக்கிடத் தவறவில்லை. அது அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. சந்தர்ப்பத்தைத் தவறவிட அவன் விரும்பவில்லை.

அவளை நெருங்கியவன் "செண்பக வல்லி! ஏன் வீணாகக் கோபித்துக் கொள் கிறாய்? அனற லா்ந்து அந்தியான தும் வாடிப்போகும் மலர்களுக்கு ஈடாக என்றுமே வாடாது என் இதயத்தில் மலர்ந்திருக்கும் மலரான உன்னை ஒப்பிடுகின்றாயே!

வண்டுகள் தாவும் மலர்களெல்லாம் எத்தனையோ வண்டுகளைத் தாங்கி இருக்குமே! தென்றல் கூட உன் பட்டுத் தளிர் மேனியைத் தொடுவதை என்னால் அனுமதிக்க முடியாதே! அப்படியிருக்கும் போது....." என்றவனின் கண்களில் அவனை அறியாமலே துன்பத்தின் நிழல் தோன்றியது. அவனின் குரல் தழுதழுத்ததைக் கேட்ட செண்பகவல்லி, சட்டெனத் திரும்பிப் பார்த்தாள்; பதறிப்போய்விட்டாள். அவள் நெஞ்சில் ஆயிரமாயிரம் ஈட்டிகள் பாய்ந்து ஊடுருவியது போலிருந்தது. அவனை அறியாமலே "அத்தான்!" என்று அலறியவள், அவன் காலடியில் குனிந்தாள். "என்னை மன்னித்து விடுங்கள்." என்றவளின் கண்களிலிருந்து, தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கெடுத்ததைக் கண்ட அருள்வர்மனுக்கு, அதற்கு மேலும், அவளைத் துன்பப்பட விடுவதற்கு மனந் துணியவில்லை. முழந்தாழில் அமர்ந்திருக்கும் செண்பகவல்லியை மெதுவாகத் தன் கைகளிரெண்டிலும் வாரியெடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான்.

அந்த இதமான அணைப்பில் அடங்கிப் போயிருந்த செண்பகவல்லி மெதுவாகத் தலையை நிமிர்த்தி அருள்வர்மனின் முகத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வையில்தான் எத்தனை கெஞ்சல்கள், கொஞ்சல்கள். அவளின் தாமரை இதழ் அணைய கண்களில் வண்டாகத் தோன்றும் கருவிழிகள் இரண்டும் காட்டுகின்ற ஜாலங்கள்தான் எத்தனை. அந்த விழிவழியே அவன் கண்ட இன்பத்தில் மெய்மறந்து போனவனாக அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவனிடம் அவள் கேட்டாள்.

"உண்மையாகவே என்னோடு கோபித்துக்கொண்டீர்களா?" இதைக் கேட்டவுடன் அவனுக்குச் சிரிப்புத்தாள் வந்தது.

"உன்னைக் கோபித்துக் கொண்டு என்னால் ஒரு கணப் பொழுது கூட வாழ முடியாது என்பதை இதுவரையில் அறியவில்லையா? செண்பகவல்லி!" என்றான் பரிவோடு.

"நான் தவறிழைத் திருந்தால், மன்னித்து விடுங்கள்."

"மன்னிப்பதற்கு அப்படி நீ ஒன்றும் தவறு செய்யவில்லையே! அது உன் உரிமை" என்றவன், குனிந்து அவள் உச்சியில் இதழ்களைப் பதித்தான். அது அவள் உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும் சிலிர்க்க வைத்தது போலும்.

நிறையரியர் மன்னியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும்.

அதிகாரம் 114 :- குறள் 1138

## சிந்தியா பதில்கள்

✍✉ **புலிகளின் விடயத்தில் கத்தி மேல் நடந்து காயத்தோடு மட்டும் சாதுரியமாகத் தப்பித்துக் கொண்டாரே சந்திரிகா. மஹிந்தவும் அந்த விஷப் பரீட்சையில் காயமின்றி வெற்றி பெறுவாரா?**

-எம்.எஸ்.அகமட் இப்றாஹீம்,
ஏறாவூர் - 03.

வெற்றிபெற வேண்டுமென்றால் வீரத்தழும்பு பட்டே ஆக வேண்டும். பாவம் மக்கள் தான் வடுக்களைச் சுமக்கப் போகிறார்கள் போல் தெரிகிறது.

✍✉ **கொழும்பில் காதலர்களை அரசாங்கம் கட்டுப்படுத்துகிறதா?**

-ஆர்.வாகன், வவுனியா.

காதலர்கள் என்று என்ன அர்த்தத்தில் கேட்கிறீர்கள் என்பது புரியவில்லையே. ஆனால் கொழும்பில் அடிக்கடி சுற்றி வளைப்புகளும், தேடுதல்களும் நடக்கின்றன என்பது மட்டும் உண்மை.

✍✉ **கூட்டுக் குடும்பத்தைப் போல் கூட்டாட்சியிலும் விரிசல்கள் வருமா?**

-எம்.ஏ.எம்.இன்ஷாப், கம்பளை.



சினேகா

அதிலென்ன சந்தேகம். அதுதான் நம் நாட்டில் அடிக்கடி நடக்கிறதே... அடிக்கடி தேர்தல் வந்து மீண்டும் சேர்ந்து விடுவதால் உங்கள் ஞாபகத்தில் நிற்கமாட்டேன் என்கிறதாக்கும்.

✍✉ **ஐம்பதுகளைத் தாண்டிய பின்பும் எப்படி இவ்வளவு இளமையாக உங்களால் பதில்தர முடிகிறது?**

-சிஹ்னாஸ் தௌபீக்,
ஹுஸைனியாபுரம்.

நானொன்றும் ஐம்பத்தி ஒரு கிலோ கேக் வெட்டிக் கொண்டாடவில்லையே தௌபீக்.... இளமையையும் முதுமையையும் எதை வைத்து அளக்கிறீர்களோ தெரியாது. சிந்தனைக்கு என்றும் வயது பதினாறுதான். மற்றபடிக்கு வருடங்கள் தான் நம்மைக் கடந்து போய் விடுகின்றன....

✍✉ **எங்கள் ஊரில் பலருக்கு மூன்று நாள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான பொருட்கள் வந்து சேரும் என்று சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். இது எங்கு போய் முடியப்போகிறது.**

-அ.நேசகுமார், காரைநகர்.

தற்காப்புக் கலையை முறையாகக் கற்றுக் கொண்டவன் சண்டைக்குப் போகமாட்டான். மூன்று பயிற்சி முடித்தவர்கள் அந்த முறுக்கைக் காட்டத்தான் செய்வார்கள். ஏற்கனவே அறைகுறை பயிற்சியோடு பொருட்களைத் தூக்கியவர்களால் இரத்த ஆறு ஓடுகிறது. இவர்களால் என்ன நடக்கப் போகிறதோ....

✍✉ **"சட்டலைட்" மூலமாக இலங்கையைச் சுற்றிப்பார்த்தால் புலிகளின் அனைத்து நடமாட்டங்களையும் கண்டுபிடித்து விடலாமே. இதற்கு இந்தியா, இலங்கைக்கு உதவுமா?**

-வே.வசீகரன்,
யாழ்ப்பாணம்.

உங்கள் கேள்விக்கு முதலில் பாராட்டுக்கள். அது ஒன்றும் முடியாத காரியமல்ல. பயங்கரவாதம் கட்டுக்கடங்காமல் போனால் இந்தத் தேவை ஏற்படும். அப்போது இந்தியா அல்லது அமெரிக்கா இந்த உதவியைச் செய்யக் கூடும். இப்போதே எத்தனை கண்காணிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவோ, யாருக்குத் தெரியும். உலக வல்லரசுகளின் போர் நடவடிக்கையில் இது சர்வ சாதாரணம்தான்.

✍✉ **சிந்தியா அண்மையில் படித்த கவிதைகளில் உங்களுக்குப் பிடித்த பகுதியென்று ஏதும் இருந்தால் சொல்லுங்களேன்?**

-சி.வைஷ்ணவி, இறம்பைக்குளம்.

இயக்குநர் மணி பாரதி அண்மையில் எழுதிய "எதிரில் வராமலிரு" எனும் கவிதையில் ஒரு பகுதி..... படித்துப் பாருங்கள்.

மண் பாதைகள்
தார்ச் சாலைகளாய்
மாறி வருகின்றன
ஊர் பெருசுகள்
மகிழ்ச்சியில்
நான் மட்டும்
வருத்தத்தில்
உன் பாதம் பதிந்த
இடங்கள்
அழிந்து வருகிறதே என்று...!!

✍✉ **இலங்கை அணியை, இந்திய அணியினர் துவம்சம் செய்து விட்டார்களே?**

-வை.கோபால், வெள்ளவத்தை.

இப்படியெல்லாம் அபாண்டமாக இந்திய இரசிகர்கள் சொல்வது போல் சொல்லக் கூடாது. எதற்கும் நம்ம வீரர்கள் சொப்பிங் செய்து முடித்து நாடு திரும்பட்டும். அவர்களிடம் கேட்டுவிட்டுச் சொல்கிறேன்.

✍✉ **புலிகள் போட்டுக்கொண்டு திரிந்த பாடசாலைச் சீருடைகள் பிடிபட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அப்படியென்றால் எதிர்காலத்தில் பிரபாகரனும் வரி உடுப்பைக் கழற்றிவிட்டு பேராசிரியராக வேடம் போட்டுக் கொள்வாரோ....?**

-சே.சின்னத்தம்பி, புலோலி.

சின்னத்தம்பி, இது பெரிய தம்பியைப் பற்றிய கேள்வி. அவர் பங்கருக்குள் என்ன வேடம் போட்டாலும் உங்களுக்குத் தெரியாதே. எதற்கும் இனிப் பேராசிரியர்களுக்குப் பக்கத்தில் போகும் போது கொஞ்சம் கவனமாகவே இருங்கள்.

✍✉ **சினேகாவின் காதல் விவகாரம் இப்போது எந்தக் கட்டத்தை அடைந்துள்ளது. புதிய செய்தி ஏதும் உண்டா?**

-வீ.தயாபரன், கண்டி.

பாவம், மலேசியாக்காரர் நாக்ரவி. வைர நகைகள் வாங்கிக் கொடுத்து ரொம்பத்தான் ஏமாந்துவிட்டார். பிரபலத்துக்காகத்தான் நாக்ரவி தன்னுடன் பழகினார் என்று சினேகா சொன்னது அதிகப்படியானதுதான். காதல் இப்போது இல்லை.


✍✉ **சுனாமியின் ஒரு வருட நினைவு எப்படி இருந்தது?**

-இரா.பீதாம்பரம், கல்லடி.

சுனாமி தாக்கினால் ஒரு வருடத்துக்குள் இரண்டு தடவை தாக்கும் என்ற ஐதீகம் ஜப்பானில் இருக்கிறதாம். ஒருவேளை இந்த டிசம்பர் இருபத்தாறாம் திகதியும் வந்து விடுமோ என்று பயந்துகொண்டிருந்தேன். போன வருடம் கிழக்கிலிருந்து - அதாவது சாய்ந்தமருதிலிருந்து தான் எனக்கு முதல் செய்தி ஒன்பது பத்துக்குக் கிடைத்தது. ஆனால் இம்முறை கிழக்கிலிருந்து டிசம்பர் இருபத்தாறாம் திகதி அதிகாலை மூன்று மணிக்கே ஒரு செய்தி வந்தது. சுனாமி செய்தியல்ல. ஜோசப் எம்.பி. சுடப்பட்டுள்ளார் என்ற செய்தி கேட்டதும் அதிர்ச்சியடைந்தேன். கடைசிக் காலகட்டத்தில் ஏக தலைமைக்குள் எடுபட்டுப் போய்விட்டாலும் ஆரம்பக் காலத்தில் சிறந்த அரசியல் தலைவராக இருந்தவர். அதுமட்டுமல்லாமல் பத்திரிகை எழுத்தாளராகவும் இருந்த அவரின் மரணச் செய்தி கேட்டு ரொம்பவும் கவலையடைந்தேன். அவர் மீதான கொலை கண்டனத்துக்குரியதாகும்.

# அறிந்தும் அறியாததும்

அனில் கும்ளோ இவரைத் தெரியாதவர்கள் இருக்க முடியுமா? இவரைப் பற்றி தெரிந்தும் தெரியாததுமான சில செய்திகளை உங்களுக்குத் தருகிறோம்.



**முழுப்பெயர்** :- அனில் ராதாகிருஷ்ணா கும்ளே

**அணி** :- இந்தியா கிரிக்கெட் அணி

**பிறந்த திகதி** :- 17.10.1970 (செவ்வாய்)

**பிறந்த இடம்** :- பெங்களூர்

**துடுப்பாட்ட விதம்** :- வலது கை ஆட்டம்

**பந்து வீசும் விதம்** :- லெல் பிரேக்

***ஆட்ட விபரம்***

விளையாடிய போட்டிகள்
1. 99 டெஸ்ட் தொடர்
2. 262 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள்

***துடுப்பாட்ட விபரம்***

| | டெஸ்ட் | ஒ.நா.ச. |
|---|---|---|
| இன்னிங்ஸ் | 126 | 129 |
| ஆட்டமிழக்காமல் | 26 | 46 |
| ஓட்டங்கள் | 1687 | 895 |
| 100 கள் | 0 | 0 |
| 50 கள் | 3 | 0 |
| சராசரி | 16.87 | 10.78 |
| உ.ஓட்ட எண்ணி. | 88 (தெ.ஆ.) | 26 (அவு.) |

***பந்து வீச்சு விபரம்***

| | டெஸ்ட் | ஒ.நா.ச. |
|---|---|---|
| ஓவர்கள் | 5186 | 2332 |
| ஓ.இல்லாத. ஓவ. | 1284 | 106 |
| கொ.ஓட்டங்கள் | 13398 | 10010 |
| விக்கெட்டுக்கள் | 478 | 326 |
| சராசரி | 28.03 | 30.71 |
| திறமை | 10/74 (பாக்.) | 6/12(மே.இ.) |

***களத்தடுப்பு விபரம்***

| | டெஸ்ட் | ஒ.நா.ச. |
|---|---|---|
| கட்ச்கள் | 45 | 83 |
| ஸ்டம்பிங் | 0 | 0 |
| ரன் அவுட்கள் | 0 | 0 |

வருட முடிவில் இருக்கும் நாம் டென்னிஸ் போட்டித் தொடரில் சில முக்கிய புகைப்படங்களை நினைவு கூர்ந்து பார்ப்போமா?



**பெண்கள் ஓப்பன் டென்னிஸ் போட்டித் தொடர்களின் போது அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தனது முதலாவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை 2003 ஆம் ஆண்டு வென்ற போது எப்படி சந்தோஷப்பட்டார் என்பதை ஆடுகளத்திலிருந்து எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பி லிருந்து உங்களுக்காக.... வெற்றி கிடைக்கும் போது அளப்பரிய சந்தோஷம் தான்....**



**முன்னணி வீரர்களுள் ஒருவரான ரோஜர் பெடரர் தனது இரண்டாவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்ற போது அதுவும் அமெரிக்காவின் அன்ரு அகாஸியை வீழ்த்தி எனும் போது மகிழ்ச்சி இரட்டிப்பு தானே....**



**மரியா ஷெரபோவா தனது முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியின் போது காயப்பட்டு அழுது கொண்டே வெளியேறும் போது...**


ஸ்போர்ட்ஸ்

*ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்*

# " அணிக்கு நாமும் இருக்கின்றோம் "

**அவுஸ்திரேலியா** அணிக்கும் தென்னாபிரிக்கா அணிக்கும் இடையில் மெல்போர்னில் நடைபெற்று வரும் டெஸ்ட் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் ஹாஸ்லி மற்றும் மக்ராத்தின் அதிரடி துடுப்பாட்டத்தினால் அவுஸ்திரேலிய அணி 355 என்ற வெற்றி இலக்கை நோக்கி முன்னேறக்கூடியதாக இருந்தது. இத என்ன புதுக்கதை மக்ராத் பந்துவீச்சில் அல்லவா திணரடிப்பார். இங்கு துடுப்பாட்டத்தில் சிறப்பாக பிரகாசிக்கிறார் என்று யோசிக்கீறீர்களா? உண்மை தான். அவர் ஒரு சிறந்த பந்து வீச்சாளர் ஆனாலும் தேவை ஏற்படின் நான் துடுப்பெடுத்தாடவும் செய்வேன் என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறார்கள் இவ்விருவரும்.

தனது 122 ஆவது டெஸ்ட் போட்டியை



விளையாடிய 30 வயது பூர்த்தியாகும் ஹாஸ்லி ஜெக் கலீசின் ஓட்ட எண்ணிக்கையை சமப்படுத்த 27 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தது. இதனை எப்படியாவது சமப்படுத்துவேன் என்று களம் புகுந்த இவர் 107 ஓட்டங்களைப் பெற்று கலீசை விட 46 ஓட்டங்கள் முன்னிலையில் பெற்றுள்ளார். இதில் அவர் 11 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும்.

மெக்ராத்தும் சளைக்காமல் இவருடன் ஆடி, இணைப்பாட்டமாக 116 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இதில் மெக்ராத் 11 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கவில்லை.

அவுஸ்திரேலியாவின் அதிகூடிய கிரிக்கெட் வர்ணனை செய்யும் தொலைக்காட்சியான செனல் 9 நெட் வெர்க் அவுஸ்திரேலியாவானது இப்போட்டிகளில் தோல்வியையே தழுவுமென எதிர்வுகூறி இருந்தது. இதனை எல்லாம் பொய்யாக்கு விதமாக ஹாஸ்லி அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணிக்கு நானுமிருக்கிறேன் என்று நிரூபித்துள்ளார்.

## போட்டியிலிருந்து விலகினார்

19 வயதான பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரபீல் நடால் எனும் இளம் டெனிஸ் வீரர் பிரான்ஸில் நடந்து வரும் பகிரங்க ஓப்பன் டெனிஸ் போட்டிகளிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

ஆரம்பத்திலேயே நீக்கமா என்று யோசிக்கத் தோன்றுகிறதல்லவா? ஆம் இவர் இப்போட்டியில் தான் தனது முதலாவது கிரான்ட் ஸ்லாம் பட்டத்திற்கான போட்டித் தொடரை விளையாடி இருந்தார்.

குற்றச் செயல்களால் இவர் நீக்கப்படவில்லை. ஆரம்ப போட்டிகளில் ஏற்பட்ட காயம் இன்னும் முற்றாக குணமடையவில்லை என்றும் இது குணமடைய இன்னும் நாட்கள் தனக்கு தேவை என்றும் அதுவரை தன்னால் போட்டிகளில் பங்கு பற்ற முடியாது என்றும் கூறியே இவர் இந்த முடிவை எடுத்துள்ளார். ஆயினும் இவர் அடுத்த மாதம் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டிகளில் எப்படியாவது பங்கு பற்றி கிரான்ட் ஸ்லாம் பட்டத்தை வெல்வேன் என்று கூறியிருக்கிறார்.


இது வரை நடால் 10 போட்டிகளில் விளையாடி வெற்றியும் பெற்றிருக்கிறார். என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

"இது பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில் எனக்கு விளையாட விருப்பம் தான் ஆயினும் வைத்தியர்களின் ஆலோசனைகளை ஏற்று நடப்பது மிக முக்கியம் என்பதால் இப்போட்டியினை தவிர்க்கிறேன்" என்று கவலையுடன் கூறியிருக்கிறார்.

இடது கை ஆட்டக்காரரான இவர் இந்தியாவின் சென்னைக்கு சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 25,000 அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## தயவு செய்து இவர்களைத் தேடித் தாருங்கள்

2004 டிசெம்பர் 26ஆம் திகதி மாதம் நிகழ்ந்த சுனாமித் தாக்கத்தின் போது அருகிலிருக்கும் நிழற்படத்திலுள்ள நான்கு பிள்ளைகளும் கல்முனை, மருதமுனைப் பிரதேசத்தில் வைத்து காணாமல் போய்விட்டார்கள். அப்போது அவர்களை பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்வதாகக் கூறி வாகனத்தில் ஏற்றி அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அதன் பிறகு அவர்களை பற்றிய எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. இருந்தும் இவர்களை வேறு இடங்களில் கண்டவர்களும் இருக்கிறார்கள்.



பிள்ளைகளின் பெயர் விபரங்கள்:-

1. **மொஹமட் அர்ஷத் சுக்ரி** வயது 12
2. **அபுல் ஹஸன் அன்பாஸ்** வயது 05
3. **அபுல் ஹஸன் இஸ்ரீன் பானு** வயது 11
4. **அபுல் ஹஸன் ஸஹ்ரா** வயது 7

இந்தப் பிள்ளைகள் பற்றிய ஏதேனும் தகவல் கிடைத்தால் தயவு செய்து கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது முகவரிக்கு அறிவியுங்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல் : எஸ்.எம்.இஸ்மாயீல் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)
**38/15 A, அருணோதைய மாவத்தை, ஒபேசேகரபுர. இராஜகிரிய.**
தொலைபேசி :- 0112 885288, 0773132829
மின்னஞ்சல் : azharmim@yahoo.com

## எண்களின் பலன்கள் எப்படி?

| ஏழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 3, கூட்டெண் - 3

3, 12, 21, 30 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால், குருவின் முழு ஆதிக்கத்தைப் பெற்றவராவர். இவர்களுக்குப் பெயரும் 3 எண்ணிக்கையில் அமைந்து விட்டால் குருபலம் மிகுதியாகும். இவர்கள் இயற்கையாகவே நீதி, நேர்மை, நிதானம், நாணயம், நம்பிக்கை, நல்லெண்ணம் பெற்று வாழ்வர். இரட்டை நாடி கொண்ட இவர்கள் நல்ல தோள் வலிமையுடனும், மெல்லிய தலைமுடியுடனும், இளமையிலேயே வழுக்கையுடன் கூடிய தலையுடனும் காட்சியளிப்பர். முன் பற்கள் இரண்டும் பெரிதாக இருக்கும். முத்துப் போன்ற பற்களைக் கொண்ட இவர்கள் எப்போதாவது சிரிக்கின்ற போது கவர்ச்சியாகக் காணப்படுவர்.

தான் சிந்திக்கின்ற கருத்துக்களை விவாதிக்கின்ற போது தெளிவாக விழங்குவர். தான் பேசுகின்ற பொழி சுத்தமாகவும், தெளிவாகவும், கவர்ச்சியாகவும் இருக்கும். பிறர் தன்னை மதிக்க வேண்டும் என்பதற்காகப் பழக்கங்களை அளவோடு வைத்துக் கொள்ளுவர். பேசுவதாலும் எழுதுவதாலும் மக்களைத் திருத்த முற்படுவர். தான் செய்கின்ற தொழில் மூலம் பிறர் பயன்படவும் உதவியாக இருப்பர். தனக்குக் கீழ் எப்பொழுதும் 10 பேர் வேலை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர். கடவுள் பக்தி அதிகம் கொண்ட இவர்கள் தன் மதம் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவும், ஆலயம் கட்டுவதற்காகவும் முன் நிற்பர்.

பிறர் மெச்ச வேண்டும் என்பதற்காக உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டார். ஆரம்ப வாழ்கை கஷ்டமானதாக இருந்தாலும் 21 வயதுக்கு மேல் ஓரளவு முன்னேற்றமும் பெறுவர். இவர்களுடைய பிறந்த திகதிக்குப் பொருந்தினாற்போல், இயற்கையிலேயே பெயர் அமைந்து விட்டால் இளமையிலேயே நல்ல கல்வி, பெற்றோரால் தேடப்பட்ட பெரும் சொத்து போன்றவை கிடைக்கும்.

சாஸ்திரம், விஞ்ஞானம் போன்றவற்றை ஆராய்ச்சி செய்யும் மனப்பான்மை இவர்களுக்கு உண்டு. உத்தியோகத்திலிருக்கும் சிலர் தனது பொறுப்புணர்ச்சியின் காரணமாகப் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைவர். பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் நாட்டின் முக்கியமான அதிகாரிகளாகவும், நீதிபதியாகவும், பெரிய நோய்களை நிவர்த்தி செய்யும் சிறந்த டாக்டர்களாகவும் விளங்குவர். பிறந்த திகதிக்குப் பொருத்தமாகப் பெயர் அமையாவிடில் சாதாரண வேலை பார்க்கும் அரசாங்க ஊழியராக இருப்பர். இவ்வாதிக்கத்தில் பிறந்து தொழில் செய்கின்றவர்கள் பால்பண்ணையாலும், வாகனத்தாலும், ஒப்பந்தத்தாலும், ஏஜென்சியாலும் பொருளீட்டுகின்றனர்.

இவர்களுடைய முன்னேற்றம் நாளுக்கு நாள் விருத்தி அடையும். ஒரே நிதானமாக முன்னேறிக்கொண்டு செல்லும். இவர்கள் எவ்வளவு வருமானம் பெருகினாலும் ஆடம்பரத்தை விரும்ப மாட்டார். இவருடைய பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக பெயர் அமையாவிடில் தேவையற்ற வேலைகளில் இறங்கி தன்னைத்தானே கெடுத்துக் கொள்ளுவர். இதனால் தொழில் செய்வோர், தான் செய்கின்ற வியாபார விலாசத்தை தனது பிறந்த திகதிக்கு, பொருத்தமான 3 எண் அல்லது 5 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அமைத்துக் கொண்டால் வியாபாரம் பெருகும்.

தொழில்

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்குப் பால்பண்ணை, பலசரக்கு, மொத்த வியாபாரம், ஏஜன்சீஸ், காண்ட்ராக்ட் போன்றவைகளால் வருமானம் பெருகும். வியாபாரம் செய்பவர்கள் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமான எண்களில் வியாபார விலாசத்தையும் தனது பெயரையும் வைத்துக் கொள்வார்களானால் நிகர லாபத்தை அடைவர்!

நோய்

குரு ஆதிக்கத்தில் பிறந்தவர்களாதலால் சிந்தனையால் வரக்கூடிய மனவியாதிகளும், பெயர் சரியாக அமையாவிட்டால் வரும் பயில்ஸ், வாயுக் கோளாறு, ரத்த அழுத்தம் போன்றவைகளும் வரலாம். அவ்வாறு நோய் வந்தவர்கள் 45 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொண்டால் நோய் நிவர்த்தியாகும். முன்னேற்றம் பெருகும்

பெயர் அமைக்கும் முறை

குருபலம் மிகுந்த் இவர்களது வாழ்கை சிறந்து விளங்க வேண்டும் என்றால் 14, 23, 41, 50, 27, 36, 45, 21, 39 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம். இவ்வாறு அமைத்துக் கொண்டால் எல்லா வளமும் பெற்றுச் செழிப்பாக வாழ்வர்.

பின்பற்ற வேண்டியவை
யோகமான எண் - 3, 9.
யோகமான திகதிகள் - 3, 12, 21, 30; 9, 18, 27; 5, 14, 23
யோகமான மோதிரக்கல் - எமிதிஸ்டு.
யோகமான நிறம் - ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம்.
ஆகாத நிறம் - பச்சை.
ஆகாத திகதிகள் - 6, 15, 24.

குறிப்பு: உங்கள் முன்னேற்றத்தில் தடை இருப்பதாகக் கருதினால் என்னை நேரில் சந்தித்து அதிர்ஷ்டமான எண்ணில் பெயர், தொழில் அமைத்து சிறப்படையலாம்.

*அடுத்த வாரம் பிறப்பெண் 3, கூட்டெண் 4 பற்றிப் பார்ப்போம்*

# அகஸ்டஸ் சீசர்
## (கி.மு. 63 - கி.பி. 14 ஆம் நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

அகஸ்டஸுக்குச் சொந்தப் புதல்வர்கள் இல்லை. அவருடைய மருமகளும், இரு பேரப் பிள்ளைகளும் அவருக்கு முன்னரே இறந்துவிட்டனர். எனவே, அவர் தம் மனைவிக்கு முதற் கணவனால் பிறந்த மகனைத் தத்து மகனாக ஏற்றுக் கொண்டார். டைபீரியஸ் என்ற இந்தத் தத்து மகனையே தமது வாரிசாக நியமித்தார். இந்த அரச மரபில் பின்னர், காலிகுலா, நீரோ போன்ற அரசர்கள் ஆண்டபோதிலும், இந்த மரபு விரைவிலேயே அற்றுப் போயிற்று. எனினும் அகஸ்டஸ் ஆட்சியுடன் தொடங்கிய உள்நாட்டு அமைதி இருநூறு ஆண்டுகள் நீடித்தது. அமைதியும், வளச்செழிப்பும் மிகுந்த இந்த 200 ஆண்டுக் காலத்தில், அகஸ்டஸ், மற்ற ரோமானியத் தலைவர்கள் வெற்றி கொண்ட நாடுகளில் ரோமானியப் பண்பாடு ஆழ வேரூன்றி ஆல்போல் பரந்து விரிந்தது.

பண்டைக் காலப் பேரரசுகள் அனைத்திலும் மிகவும் புகழ் வாய்ந்தது ரோமானியப் பேரரசேயாகும். பண்டைய நாகரிகத்தின் உச்ச நிலையாக ரோமானியப் பேரரசு விளங்கியது. எகிப்தியர்கள், பாபிலோணியர்கள், யூதர்கள். கிரேக்கர்கள் போன்ற பண்டய உலக மக்களின் கொள்கைகளையும், பண்பாட்டுச் சாதனங்களையும் மேற்கு ஐரோப்பாவுக்குப் பரப்புகின்ற வடிகாலாகவும் ரோமானியப் பேரரசு திகழ்ந்தது. அகஸ்டஸ் சீசரின் கொள்ளுப் பாட்டனாகிய ஜூலியஸ் சீசரின் சாதனைகளுடன் அகஸ்டஸின் சாதனைகளை ஒப்பிட்டுப் பார்ப்பது சுவையானதாகும். அகஸ்டஸ் அழகிய தோற்றமுடையவர்; அறிவாற்றலில் சிறந்தவர்; நல்லொழுக்கமுடையவர்; பல இராணுவ வெற்றிகளைக் கண்டவர்; எனினும், முந்தைய சீசருக்கு இருந்த கவர்ச்சி இவருக்கு இல்லை. ஜூலியஸ் தம் காலத்தவரின் கற்பனையை அகஸ்டஸைவிட அதிகமாகத் தூண்டினார். அதனால் அவர் தமது புகழ் சிறிதும் குன்றாமல் அதிகப் புகழுடன் விளங்கினார்.

ஆனால்,வரலாற்றில் அவர்களுடைய செல்வாக்கினை மதிப்பிட்டுப் பார்க்கும் போது, இந்த இருவரிலும் அகஸ்டஸ்தான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவராகத் திகழ்கிறார்.

அகஸ்டஸை மகா அலெக்சாந்தருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் நலமாக இருக்கும். இருவரும் மிக இளம் வயதிலேயே தங்கள் அரசியல் வாழ்கையைத் தொடங்கினார்கள். ஆயினும், அகஸ்டஸ் தலைமையிடத்தை எட்டுவதற்கு அலெக்சாந்தரைவிடக் கடுமையான எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அகஸ்டஸின் இராணுவத் திறன், அலெக்சாந்தரைவிடக் கடுமையான எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அகஸ்டஸின் இராணுவத்திறன், அலெக்சாந்தரின் அளவுக்குச் சிறப்புடையதாக இருக்கவில்லை. எனினும், அவருடைய திறமை முனைப்பாகவே இருந்தது. அகஸ்டஸின் வெற்றிகள் நீண்ட காலம் நிலைத்திருந்தன. இது இவ்விருவருக்குமுள்ள மிக முக்கிய வேறுபாடாகும். அகஸ்டஸ் எதிர்காலத்திற்காக மிகவும் கவனமாகத் திட்டமிட்டுச் செயற்பட்டார். அதன் விளைவாகவே, அவருடைய செல்வாக்கு மனித வரலாற்றில் கணிசமான அளவுக்கு நீண்ட காலம் நிலைபெற்று விளங்கியது. அகஸ்டஸை மா சே - துங்குடன் அல்லது ஜோர்ஜ் வாஷிங்டனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் பொருத்தமாக இருக்கும். இந்த மூவருமே உலக வரலாற்றில் முக்கியமான - ஓரளவு ஒரே மாதிரியான பங்குப் பணிகளை ஆற்றினர். எனினும், அகஸ்டஸின் நீண்ட கால ஆட்சி, அவரது கொள்கைகளின் வெற்றி, உலக வரலாற்றில் ரோமானியப் பேரரசுக்கு ஏற்பட்ட முக்கியத்துவம் ஆகியவற்றின் காரணமாக, மற்ற இருவரையும் விட உயர்நிலையில் வைக்கத் தக்கவர் அகஸ்டஸ் எனலாம்.



**அடுத்த வாரம்**
**கார்ல்ஸ் மார்க்**
**வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

*வணக்கமுங்கோ*

பாத்தியளோ நாடு போற போக்கை. எப்ப என்ன நடக்கும் எண்டதை தெரிஞ்சு கொள்ளவே முடியுதில்லை. காலையில வீட்டைவிட்டு வெளியால போற மனிசன் பின்னேரத்துக்கு உயிரோடு வீடு திரும்பு வாரோ மாட்டாரோ எண்ட கவலையோட தான் சனம் வாழ்ந்து கொண்டிருக்கு. அந்தா சமாதானம் வந்திட்டுது, பாதையைத் திறந்திட்டினம் எண்டு போனவையெல்லாம் "பிச்சை வேண்டாம் நாயைப் பிடியடா" எண்டமாதிரி அவசர அவசரமா குடாநாட்டை விட்டு ஓடிவருகினம்.

ஏன் ஓடி வாறியள்? நீங்கள்தானே யுத்தம் நடத்துங்கோ எண்டு கையெழுத்துப் போட்டு மகஜர் குடுத்தனீங்கள் எண்டு கேட்டால், கடிச்சுத் திங்குமா போல முறைச்சுப் பாக்கினம். சரி, அதை விடுங்கோ. இப்ப என்ன யுத்தமே ஆரம்பிச்சுட்டுது, ஏன் இப்பவே மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு ஓடி வாறியள் எண்டு கேட்டால், இண்டைக்கு இல்லாட்டியும் நாளைக்கே துவங்கிட்டுதெண்டால் பாதையை இழுத்து மூடிப்போட்டிடுவினம். அதுக்குப் பிறகு எப்பிடியப்பு இங்கால வாறது, அதுதான் அகப்பட்டுப்போய் அடிமையா வாழிறதைவிடவும் இங்கால வந்திட்டமெண்டால் எல்லாத்துக்கும் வசதியெல்லோ எண்டு கேக்கினம். சனம் பதறிரதைப் பாத்தால் வில்லங்கமா என்னமோ நடக்கப் போகுது போல.

ஆமிக்காரன் திருப்பி அடிக்கமாட்டான் என்ற துணிச்சலிலதான் பெடியள் தங்கட இஷ்டத்துக்கு நடந்து கொள்ளினம் எண்டு சனம் சொல்லுது. அப்புடியில்லையே, ஆமிக்காரன் சனங்களை அடிக்கிறான் எண்டும் கண்டபடி தேடுதல் நடத்தி தேவையில்லாத நெருக்கடி தாறான் எண்டும் செய்திகள் சொல்லினமே எண்டு எதிர்க்கேள்வி கேட்டால், ஆமிக்காரனுக்கு என்ன விசரே பிடிச்சிருக்கு சும்மா இருக்கிறவையை வந்து அடிக்கிறதுக்கு? உந்தத் தொலைவாங்கள் செய்யிறதெல்லாம் செய்து போட்டு, சனத்தின்ர வீடு வாசல்களுக்க ஒளிஞ்சு கொண்டால் அவன் வந்து தேடுவான், தேவையெண்டால் அடிக்கவும்தான் செய்வான் எண்டு சில சனம் சொல்லினம்.

என்ன உப்பிடிச் சொல்லுறியள், அவைக்கு காதில கேட்டுதெண்டால் சுட்டெல்லோ போடுவினம் எண்டு பயங்காட்டுற விதமாகக் கேட்டதுக்கு, சுடட்டுமன். அவை என்ன நீதி நேர்மை எண்டு எதையாவது பார்த்தே சுடுகினம். அவைக்கு ஒத்து ஊதாட்டில், அவையின்ர தாளத்துக்கு கொடுக்குக் கட்டிக் கொண்டு ஆடாட்டில் சுடுவினம். கேட்டால் துரோகியெண்டிட்டுச் சுடுவினம். அதிருக்கட்டும், எப்ப இருந்து நீர் அவையைக் காட்டி சனத்தைப் பயங்காட்ட வெளிக்கிட்டீர் எண்டு வில்லங்கம் புடிச்ச சனம் என்னிட்டையே கேக்குதுகளுங்கோ. சனம் சந்தேகப்படுறதைப் பாத்தால் என்னையும் சேர்த்துத் திட்டுங்கள் போல இருக்கு. சரி, சண்டை வருமெண்டு சொல்லுறியளே, புதிய ஜனாதிபதி உங்கட தலைவரைச் சந்திச்சு வன்னியெண்டாலும் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் எண்டு கூட்டமைப்புக்காரரிட்டச் சொன்னதைப் பத்தி என்ன சனம் நினைக்கினம்? எண்டொரு கேள்வியைக் கேட்டனுங்கோ.

மகிந்த ஜனாதிபதியானால் யுத்தம் தான் எண்டிச்சினம். அவரும் தானொரு சுத்தப் பௌத்தன் எண்டதாலதான் மற்ற இனங்களையும் மதங்களையும் மதிக்கிறன் எண்டு அப்ப சொல்லேக்க, நாங்க நம்பயில்லைதான். ஆனால் இப்ப நம்புறம். அவர் சமாதானத்தை விரும்புற மனிசன். உண்மையான இலங்கை பிரஜை எண்டதாலதான் எங்கட நாட்டிலையே பேச்சு நடத்துவம் எண்டு சொல்லுறார். ஆனால் எங்கடையள் "ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை" யெண்டு சொன்ன கதையா, ஐரோப்பாவிலதான் பேசுவம் எண்டு அடம் பிடிக்கினம். தெரியாமத்தான் கேட்கிறம். இவையென்ன ஐரோப்பாவில இருந்து கொண்டே சண்டை பிடிச்சினம் இல்லையே உண்மையிலேயே இன்னொரு அழிவு இந்த நாட்டில நடக்கக் கூடாதெண்டு மிஞ்சி இருக்கிற எங்கட சனமும் அழியக் கூடாதெண்டும் இவை நினைப்பினமெண்டால், எங்கையாவது இருந்து பேசுவினம். இல்லையெண்டால் கடைசியும் முதலுமா ஒரு சண்டையை நடத்தி எல்லாருக்கும் கருமாதியைச் செய்ய வேண்டியதுதான் எண்டு சனம் விளக்குகிற விதத்தைப் பாத்து எனக்கு வாய் அடைச்சுப் போயிற்றுதுங்கோ.

சும்மா சொல்லக்கூடாது, எங்கட சனத்து பொலிரிக்ஸ் ரொம்ப அத்துப் படியாகிட்டுதுங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(29.12.2005 தொடங்கி 04.01.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

தனு - சூரியன், புதன். மகரம் - வெள்ளி. மீனம் - இராகு. மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி- கேது. துலாம் - வியாழன்.
சந்திரன் விருச்சிகம், தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை மேன்மை, உயர்ந்த நிலை, கௌரவம், வெளியிடப் பிரயாணம், அந்நியர் உதவி, பணக் கஷ்டம், குடும்பப் பொறுப்பு, உத்தியோக மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் மந்தம், மனக் கவலை, அன்னியர் உதவி, எதிர்பாரா செலவு, குடும்ப நன்மை, மனக்குறை நீங்கும், உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, பிரயாண மிகுதி, தேக சுகக் கஷ்டம், மனக் கலக்கம், உறவினர் உதவி, குடும்பப் பாரம், உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி, கரியானுகூலம், பயனுள்ள செயல், மனக்குறை நீங்கும், குடும்ப சுகம், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் சிறப்பு, பணவரவு, மனமகிழ்ச்சி, உயர்ந்த எண்ணம், புதிய முயற்சி, குடும்ப நன்மை, உறவினர் உதவி, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, பணவரவு, செலவு மிகுதி, வெளியிட வாழ்க்கை, தேக சுகக் கஷ்டம், குடும்பக் கவலை, உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் பலிதம், பணவரவு, மேலதிகச் செலவு, உறவினர் தொல்லை, வீண் மனஸ்தாபம், குடும்பக் கவலை, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் கஷ்டம், பணியாளர் பகை, புதிய முயற்சி, கடன் தொல்லை, உறவினர் உதவி, குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் பகை, கடின உழைப்பு, பணச் செலவு, தூர இடப் பயணம், வீண் கஷ்டம், குடும்ப நன்மை, இனசன மகிழ்ச்சி, உத்தியோக முயற்சி, புதிய பதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும், வெளியிட வாசம், பயனுள்ள செயல், குடும்பப் பொறுப்பு, உறவினர் உதவி, பிள்ளைகளால் தொல்லை, உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், தூர இடப் பயணம், அன்னியர் சகவாசம், குடும்ப நன்மை, உறவினர் உதவி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் அலைச்சல், மனக்கலக்கம், எதிர்பாரா செலவு, பெரியோர் உதவி, குடும்ப நன்மை, பிள்ளைகளால் மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை
கிழக்கு மாகாணம் 107.9, 104.8
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6
நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல – 1665
கொழும்பு.
தொலை பேசி :– 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |




## விஷப் பூச்சி

படத்தில் உள்ளது சிலந்தி போல் தோன்றுகிறதா? இல்லவே இல்லை. இது உலகில் அதிகளவு மக்களைப் பாதித்த மலேரியா காய்ச்சலை ஏற்படுத்தும் கிளாஸ்மோடியம் கிருமியைக் காவிச்செல்லும் அனோபீலிக்ஸ் பெண் நுளம்பின் உருப்பெருக்கப்பட்ட தோற்றமே. ஆரம்பகாலத்தில் இதனை ஒரு விஷப் பூச்சியாகவே கருதினர். மலேரியாவிற்கான மருந்து கண்டுபிடிக்கும் முன் இந் நோயும் உயிர்க்கொல்லி நோயாகவே கருதப்பட்டு வந்தது. உலக சுகாதார அமைப்பினரால் 1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் 101 நாடுகளில் 1 மில்லியன் இறப்புக்களை ஏற்படுத்தி யதாகத் தெரிவிக்கப் படுகிறது. ஆயினும் இது தற்போது கட்டுப்படுத் தப்பட்டு விட்டது அனைவ ருக்கும் சந்தோச மான விடயமே. இது போல் எல்லா நோய் களுக்கும் மருந் திருந்தால் நல் லதே.

## இறப்பர் தோலோ?



படத்தைப் பார்க்கும் போது எமக்கே பயம் கலந்த ஆச்சரியம் ஏற்படுகிறதல்லவா? எம்மால் இதைச் செய்ய முடியுமா? ஆயினும் இங்கிலாந்தைச் சேர்ந்த கிரே டியூனர் எனும் 25வயது மதிக்கத்தக்க வாலிபர் இச் சாதனையை நிகழ்த்திக்காட்டியிருக்கிறார். தனது உடலை விட்டு 15.8 சென்ரி மீற்றர் நீளத்துக்கு அதாவது 6.25 அங்குலம் தோலை மட்டும் இழுத்து சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். இது பற்றி வைத்தியர்கள் கருத்து தெரிவிக்கையில், விபத்தொன்றின் போது இவரது தசை இழையங்கள் தோலுடன் ஒட்டாமல் சென்றதே இதற்குக் காரணம் என்கிறார்கள். எது எப்படியாயினும் சாதனை சாதனைதான். இவரின் தோலும் தோல் பொருட்கள் செய்யப் பயன்படுமா?




## கைக்கு அடங்குமா?

தற்போது அதிகரித்து வரும் கைத் தொலைபேசிகள் சுருக்கமாக கையடக்கத் தொலைபேசி எனவும் அழைக்கப்படுவதுண்டு. இங்குள்ள கைத் தொலைபேசி கைக்கு அடங்குமா என யோசிக்கிறார் அருகில் இருப்பவர். உண்மைதான். ஜேர்மனியில் கையடக்கத் தொலைபேசிகள் தயாரிக்கும் மெக்சீ மொபைல் நிறுவனம் தமது தயாரிப்புகளை விளம்பரப்படுத்துவதற்காகவே இக் கைத்தொலைபேசியினை தயாரித்துள்ளார்கள். அன்னளவாக இது 2.5 x 0.83 x 0.45 மீற்றர் அளவுடையது. இக் கைத்தொலைபேசியில் அனைவரும் இலவசமாக sms மற்றும் mms அனுப்பலாம் என்பதும் குறிப்பிடக்கூடிய அம்சமாகும். இலங்கையில் இப்படி ஒன்று இருந்தால் sms அனுப்ப இளம்வட்டங்கள் திரண்டு வரும்.






## சாப்பிட முன்

படத்தில் இருப்பது ஐஸ்கிறீம் நிரம்பிய கிண்ணம் ஒன்றே. உடனே பாய்ந்து சாப்பிடத் தோன்றுகிறதா? ஆனால் சாப்பிடும் முன் கவனிக்க வேண்டிய ஒன்றுள்ளது. இதன் விலை பெரிதாக ஒன்றுமில்லை. ஆக 1000 அமெரிக்க டொலர்களே. என்ன ஏங்கிவிட்டீர்களா? உண்மைதான். செரம்டிப்பி கோல்டன் எனும் அமெரிக்காவின் தலைசிறந்த ஐஸ்கிரீம் கம்பனி ஒன்று தனது 50ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுமுகமாக, இவ்வாறு விலை கூடிய ஐஸ்கிரீம் ஒன்றினைத் தயாரித்துள்ளது. இதில் அதி விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம் பாதாம், தங்கப் பஸ்பம் பூசப்பட்ட கஜூ என்பவற்றுடன் செரிப் பழங்களும் போடப்பட் டிருக்குமாம். இதனைச் சாப்பிடு வதற்குக் கூட தங்கக் கரண்டிகள் கொடுக்கப் படுகின் றதாம். நியூ யோர்க்கில் தற்போது மூன்று ஹோட்டல்களில் இந்த ஐஸ் கிரீம் விநி யோகிக்கப்படுகின்றதாம்.

## சுனாமி வடு

சுனாமி ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிறது. ஆயினும் சுனாமியால் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றி புதிய புதிய புகைப்படங்கள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. அந்த வகையில் இங்குள்ளதும் சுனாமியின் போது இறந்தவர்களின் உடல்களை அடையாளம் காணும் வரைக்கும் பதப்படுத்தி வைப்பதற்காக இந்தோனேசியாவில் உடல்களுக்கு ஐஸ்கட்டிகள் போடப்பட்டு வைக்கப்படுவதேயே இது காட்டிநிற்கின்றது.



## பழைய நடுவர்

நாம் கிரிக்கெட்டின் நடுவரான ஸ்டீவ் பக்னோர் பற்றி சில விஷயங்களை இங்கே காண்போம். ஜமேக்கா நாட்டைச் சேர்ந்த இவர், 1989ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நடுவராகப் பணியாற்றி வருகிறார். கிட்டத் தட்ட 102 டெஸ்ட் போட்டிகளுக்கு நடுவராக தொடர்ந்து இருந்தவர் என்ற பெருமையையும் பெற்று உலக சாதனைப் புத்தகத்திலும் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார். இது கிரிக்கெட் ஆடி மட்டும் சாதனைப் படைக்கத் தேவையில்லை, என்பது போல் உள்ளதல்லவா?